36.2

கோயம்புத்தூர் மாவட்டக் கல்வெட்டுகள்

தொகுதி - 1

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY MADRAS

பதிப்பாசிரியர்

தி. ஸ்ரீ. ஸ்ரீதர் இ.ஆ.ப.

சிறப்பு ஆணையர்

உதவிப் பதிப்பாசிரியர்கள்

முனைவர் அர. பூங்குன்றன்

முனைவர் இரா.ப. கருணானந்தன்

திரு பெ. கௌதமபுத்திரன்

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை

சென்னை – 600 008

2006

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Coimbatore Mavatta Kalvettukal Vol. - 1
Editor	:	Spl. Commissinor
Copy Right	:	T.N. State Dept. of Archaeology
Subject	:	History
Language	:	Tamil
Edition	:	First
Publication No.	:	180
Year	:	2006
Type Point	:	12
No.of. Pages	:	480
Paper Used	:	80 Gsm Maplitho
Type Setter	:	Cavin Laser Printers 19/9, Devaraja Mudhali Street, Chennai - 600 005. Phone: 9940351234.
Printer	:	**The Chennai Printers' Industrial Co-op. Society Ltd.,** 118, Big Street, Triplicane, Chennai - 5. Ph : 28446287
Publisher	:	**State Dept. of Archaeology,** Tamil Valarchi Valagam, Halls Road, Egmore, Chennai - 600 008.
Price	:	**Rs. 217/-**

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY, MADRAS
LIBRARY, Acc No 1778
Date - - - -
4177

பதிப்புரை

இந்திய அளவில் எண்ணிக்கையில் அதிக அளவு கல்வெட்டுகளை உடையது தமிழகம். அறியப்பட்டுள்ள 30,000 க்கு மேற்பட்ட தமிழ் கல்வெட்டுகள், இந்திய மொழிக்கல்வெட்டுகளின் மொத்த எண்ணிக்கையில் 40 சதவீதம் உள்ளன என்பது ஒரு சிறப்பு. தமிழ் மொழியினை அடுத்து தென்னிந்திய மொழிகளில் கன்னடம் 11,000 கல்வெட்டுகளையும் தெலுங்கு 7,500 கல்வெட்டுகளையும் கொண்டுள்ள நிலையில் அவை முழுமையாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. தமிழ் மொழிக் கல்வெட்டுகள் முழுமையாக வெளியிடப்படாமை ஆய்வாளர்களிடையே பெரும் குறையாக உள்ளது.

இக்குறையைச் சரிசெய்யக் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒரு முனைப்புத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு கல்வெட்டுகள் படியெடுப்பது, படிப்பது, அச்சிடுவது ஆகியவற்றுடன்அவற்றை டிஜிடெல் படமெடுப்பது ஆகியவை ஒருசேர நிகழ்த்தப்பட்டன. இதன் வாயிலாக பாபநாசம் வட்டக் கல்வெட்டுகள், தஞ்சாவூர் வட்டக் கல்வெட்டுகள், மதுரை மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி -1, காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள், தமிழக கல்வெட்டுகள் 2004 என ஐந்து தொகுதிகளில் 798 கல்வெட்டுகள் அச்சிடப்பட்டுள்ளன. இக் கோயம்புத்தூர் மாவட்டத் தொகுதி-1, 315 கல்வெட்டுகளைக் கொண்டுள்ளது. மேலும் கிருஷ்ணகிரி மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதியில் 275 கல்வெட்டுகள் அச்சிட அரசிடம் நிதி பெறப்பட்டுள்ளது. 2006 - 07 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டம் தொகுதி-2, ஈரோடு மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டம் ஆகிய தொகுதிகளில் 420 கல்வெட்டுகள் அச்சிட அரசு நிதி ஒதுக்கீடு பெறப்படவுள்ளது. தமிழ்க் கல்வெட்டுகள் விரைந்து அச்சிடப்பட்டு முடிக்கப்படும் காலம் வெகு தொலைவில் இல்லை என்றே கருதவேண்டும்.

கொங்கு நாடு எனப்படும் கோயம்புத்தூர், ஈரோடு மாவட்டங்களில் உள்ள கல்வெட்டுகள் தனித்துவம் மிக்கவை. இந்நூலைப் பயன்படுத்துவோர் அதனை நன்கு உணர்வர். கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள அவிநாசி, உடுமலைப் பேட்டை, கோயம்புத்தூர் தெற்கு, வடக்கு ஆகிய வட்டக் கல்வெட்டுகள் இத்தொகுதியில் இடம் பெறுகின்றன. இரண்டாம் தொகுதியில் திருப்பூர், பல்லடம், பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம் ஆகிய வட்டக் கல்வெட்டுகள் இடம் பெற உள்ளன.

இத்துறை படியெடுத்துப் படித்த திருமுருகன் பூண்டிக் கல்வெட்டுகள் இத்துறையும் இந்திய அரசின் கல்வெட்டுப் பிரிவும் இணைந்து வெளியிடும் 1915 ஆம்

ஆண்டிற்கான தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதியில் இடம் பெறுவதால் அவை இங்கு சேர்க்கப்படவில்லை. அதுபோல் ஏற்கனவே தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் வெளியான கல்வெட்டுகளும் இத்தொகுதியில் இடம் பெறவில்லை.

கோயம்புத்தூர் மாவட்டக் கல்வெட்டுகள் 2003, 2004 ஆம் ஆண்டுகளில் முனைவர் (அமரர்) இரா. ப. கருணானந்தம் தலைமையில் இளநிலைக் கல்வெட்டாய்வாளர் திரு மே. சீனிவாசன், கல்வெட்டுச் சிற்றெழுத்தர்கள் திரு ம. மதிவாணன், திரு பி. முருகேசன், திரு சி. ஜோதி, திரு கு. அன்பழகன் ஆகியோரால் படியெடுக்கப்பட்டன. இக்கல்வெட்டுகள், முனைவர் அர. பூங்குன்றன், முனைவர் (அமரர்) இரா. ப. கருணானந்தன் ஆகியோரால் படிக்கப்பட்டு பதிப்புப் பணியில் இவர்களுடன் திரு பெ. கௌதம புத்திரன் பணியாற்றியுள்ளார். இவர்கள் அனைவரையும் பாராட்டி மகிழ்கின்றேன். கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கல்வெட்டுப் பிரிவின் தலைவராக இருந்து வரும் முனைவர் சு. இராசகோபால் அவரது பிரிவில் உள்ள அலுவலர்கள், பணியாளர் அனைவரது ஒத்துழைப்புடன், தன்னார்வத்துடன் கல்வெட்டு முனைப்புத் திட்டம்வெற்றி பெருவதில் பங்காற்றியுள்ளார். அவர் இந்நூல் வடிவமைப்பையும் அச்சகப் பணியையும் மேற்கொண்டார். அவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகள்.

இந்நூலில் கணினி முறையில் அச்சிடத் தேவையான கிரந்தம் மற்றும் பிற எழுத்துருக்கள் (Fonts) சென்னை ஐ.ஐ.டி பேராசிரியர் முனைவர் கல்யாண கிருஷ்ணன் உருவாக்கி இலவசமாகப் பயன்படுத்தத் தந்தவையாகும். தமிழ் எண்கள் மற்றும் குறியீடுகளுக்கான எழுத்துருக்கள் புலவர் கண்ணையன் ஆலோசனையில் தமிழ் இணையத்தில் உருவாக்கப் பட்டவை. இந்நூலில் கிரந்த எழுத்துக்கள் சேர்ப்புக்கும் சொல்லடைவுக்கும் உதவியவர்கள் திரு. கு. குமரவேல் மற்றும் செல்வி மு.ஆ.ப. சரஸ்வதி ஆகியோர். இவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் தொண்மைக்குச் சான்றுகளாக விளங்கும் கல்வெட்டுகளை அச்சிட நிதி ஒதுக்கீடும் ஊக்கமும் தந்து வரும் தமிழ் நாடு அரசிற்கு எனது மனமார்ந்த நன்றி.

தொல்லியல் ஆய்வாளர்களும், மாணவர்களும், பொதுமக்களும் இந்நூலினை வெகுவாகப் பயன்படுத்தித் தமிழகத் தொல்லியல் மேலும் வளர்ந்திட ஊக்கம் தருவார்கள் என்பதில் ஐயமில்லை.

சென்னை 8

7 8 2006

அன்புடன்

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்

பொருளடக்கம்

பதிப்புரை	
முன்னுரை	i-xxii
அவிநாசி வட்டக் கல்வெட்டுகள்	1–156
அவிநாசி	1
அன்னூர்	39
ஆலத்தூர்	83
கஞ்சப்பள்ளி	91
கருவலூர்	93
சேவூர்	94
பழங்கரை	139
நடுவச்சேரி	144
பெரியகானூர்	154
கரியாகவுண்டனூர்	156
உடுமலைப்பேட்டை வட்டக் கல்வெட்டுகள்	157 – 260
கடத்தூர்	157
கொழுமம்	253
ருத்ராபாளையம்	255
சோமவாரப்பட்டி	258
கோயம்புத்தூர் தெற்கு வட்டக் கல்வெட்டுகள்	261 – 328
கோயம்புத்தூர்	261
சுண்டைக்காய்முத்தூர்	271
தேவராயபுரம்	273
பேரூர்	275
போளுவாம்பட்டி	316
வெள்ளலூரர்	326

கோயம்புத்தூர் வடக்கு வட்டக் கல்வெட்டுகள் 329 – 401

இடிகரை 329

கோவில்பாளையம் 361

தொண்டாமுத்தூர் 390

வடமதுரை 394

Summary of Inscriptions 402 – 430

கல்வெட்டுக்களின் சொல்லடைவு 431 – 447

படங்கள்

முன்னுரை

இன்றைய கோயம்புத்தூர் மாவட்டம் பண்டைநாளில் கொங்குநாட்டின் ஒரு பகுதியாக விளங்கியது. கோயம்புத்தூர் என்பது பொதுமக்களால் கோவை என்று பரவலாக அழைக்கப்படுகிறது. இப்பகுதியைப் பாண்டியர் செப்பேடுகள் மீகொங்கு என்றும் குடகொங்கு என்றும் அழைத்தன. சோழர்காலத்தில் தென்கொங்கு, வடகொங்கு என்று அழைக்கப்பெற்ற இருபகுதிகளில் தென்கொங்கு இம்மாவட்டத்தின் பெரும் பகுதியை உள்ளடக்கியிருந்தது. இம்மாவட்டத்தின் அவிநாசி வட்டம், வடக்கு கோயம்புத்தூர் வட்டம், மேட்டுப் பாளையம் வட்டம் பல்லடம் வட்டத்தின் தென்பகுதி ஆகியவை இடைக்கால வட கொங்கில் அமைந்திருந்தன. பிறவட்டங்கள் தென்கொங்கில் அடங்கியிருந்தன.

கல்வெட்டுகள் - பொறிப்புகள்

இத்தொகுப்பில் கல்வெட்டுகள் தவிர செப்புத் திருமேனியில் பொறிக்கப் பெற்ற ஒரு பொறிப்பும் உள்ளது. இம்மாவட்டத்துப் பொறிப்புகள் கல், மண், உலோகம், துணி, காகிதம் ஆகியவற்றின் மேல் எழுதப்பெற்றுள்ளன. தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் எழுதப் பெற்றுள்ளன. தமிழ் மொழிப் பொறிப்புகள் தமிழ் எழுத்திலும் வட்டெழுத்திலும் பொறிக்கப்பெற்றுள்ளன. வடமொழிப் பொறிப்புகள் கிரந்த எழுத்தில் பொறிக்கப் பெற்றுள்ளன. தெலுங்கு மொழிப் பொறிப்புகள் தெலுங்கு எழுத்திலும் கன்னட மொழிப் பொறிப்புகள் கன்னட எழுத்திலும் பொறிக்கப் பெற்றுள்ளன. விதிவிலக்காக அவினாசி மாணிக்கவாசகர் செப்புத்திருமேனியின் மேல் பொறிக்கப் பெற்ற கன்னட மொழிப் பொறிப்பு நந்தி நாகரி எழுத்தில் பொறிக்கப் பெற்றுள்ளது. கொங்கு நாட்டுப்பகுதியில் கிடைக்கும் இடைக்காலக் கல்வெட்டுகளில் வட்டெழுத்துக் கல்வெட்டுகள் பிழையின்றி எழுதப் பெற்றுள்ளன. ஆனால் தமிழ் எழுத்தில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுகள் பிழை மலிந்து காணப் பெறுகின்றன. தமிழ் எழுத்திலும், வட்டெழுத்திலும் பொறிக்கப்பெற்ற இராசகேசரிப் பெருவழிக் கல்வெட்டில் இந்தத்தன்மை தெளிவாகப் புலப்படும். பல வரிகள் எழுதப் பெற்ற வட்டெழுத்துக் கல்வெட்டில் பிழை ஏதுமில்லை. ஆனால் இரண்டு சொற்களே எழுதப் பெற்ற தமிழ் எழுத்துப் பொறிப்பில் பிழைகள் உள்ளன. அதனால் கொங்குநாட்டில் வட்டெழுத்துப் பயிற்சி பெற்றவர்கள்தான் மிகுதியும் இருந்தனர் எனலாம். 'பழங்கல்வெட்டுப்படி' என்று குறிப்பிடும் கல்வெட்டுகள் உள்ளன. கோயில்பாளையம் கல்வெட்டு ஒன்றில் வியாபாரிகள், தாங்கள் கொடுத்த கொடை பற்றிய

கல்வெட்டு சிதைந்து விட்டது; அதனை மறுபடியும் புதிதாகப் பொறிக்க வேண்டும் என்று கேட்டதும் வேண்டுகோளை ஏற்று சிவப்பிராமணர்களும் புதிதாகக் கல்வெட்டு வெட்டிக் கொடுத்தனர் என்ற செய்தி கூறப்பெறுகின்றது.

முதல் பராந்தகன் காலம் முதல் உருவாக்கப்பெற்ற அரசியல் பூகோளப் பிரிவுகள் தொடர்ந்து கி.பி. 13 ஆம் நூற்றாண்டு முடியும் வரை நிலைபெற்றிருந்தன. போசளர், பாண்டியர் காலம் முதல் சோழர் கால பெரும் பிரிவுகள் (Sub Marco region) மறையத் தொடங்கின. மண்டலப் பிரிவுகள் குறிப்பிட்ட வேளாண் பருவநிலையை மனத்தில் (agro climatic condition) கொண்டு உருவாக்கப்பெற்றவை.

சங்ககாலத்திற்குப்பின் கி.பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை கங்கர், பாண்டியர் ஆளுகையில் இப்பகுதி இருந்தது. கங்கர்கள் கல்வெட்டு இப்பகுதியில் கிடைக்கவில்லை. ஆனால் அவர்கள் வெளியிட்ட முற்காலச் செப்பேடுகள் கிடைக்கின்றன. கி.பி. 6ஆம் நூற்றாண்டு செப்பேடு காரமடையைச் சேர்ந்த ஒருவரிடம் இருந்தது. அது முதல் கங்கமன்னன் கொங்கனிவர்மன் வெளியிட்டது. கொமரலிங்கத்தில் துர்வினிதன் காலத்து செப்பேடு ஒன்று கிடைத்தது. கோவன்புத்தூர் என்ற பெயரே கங்க மன்னன் விஷ்ணுகோபன் என்ற பெயரோடு தொடர்புடையது. கோபன்புத்தூர் என்ற பெயர்தான் கோவன்புத்தூர் என்று மாறிவிட்டது எனலாம். ஆலத்தூர் கல்வெட்டில் சிந்தரையர் மகளார் வானவன் மாதேவியார் என்று குறிக்கப்பெறும். வானவன்மாதேவி என்ற பெயர் அவள் சேர அரசி என்பதை உறுதிப்படுத்துகின்றது. சிந்தரையர் மகளார் என்ற பெயர் குறிப்பிடத்தக்கது. கங்கர்களுக்குக் கீழ் ஆட்சி செய்தவர்கள் சிந்தரையர்கள். அவர்கள் ஆண்ட பகுதி சிந்தகப்பாடி என்பதாகும். அம்மரபைச் சேர்ந்தவள் சேரனை மணந்து வானவன் மாதேவி ஆகிறாள்.

சிந்தரையர் சேரமன்னர் மணவினை

இம்மரபினைச் சேர்ந்த பெண்தான் ஆலத்தூர் கல்வெட்டில் குறிக்கப்பெறுகின்றாள். இடைக்கால சேரமன்னன் ரவி என்பவன் கங்க இளவரசியை மணந்தான் என்று நாமக்கல் செப்பேடு கூறும். அதனால் கங்கர்களுக்கும் குட்டுவன் கோதை மரபில் வந்தவர்களுக்குமிடையில் மணவுறவு இருந்தமை பற்றி ஐயம் எற்பட வாய்ப்பில்லை. கங்கர்கள் ஒடுங்குதசை அடைந்தபோது கங்கர்களுக்குக் கீழிருந்த சிந்தரையர் அரசியலில் மேலோங்கினர். அந்நிலையில் சேரர்கள் சிந்தரையர்களுடன் மணவினை வைத்துக் கொண்டனர் எனலாம்.

இடைக்காலச் சேரர்கள்

நாமக்கல்லில் கிடைக்கும் வீரசோழனின் செப்பேடுகள் கி.பி. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து ஆட்சி செய்த சேரர்கள் பற்றிய செய்திகளைத் தருகின்றன. இந்த மரபினர் சங்க கால சேரர்களின் குட்டுவன், கோதை ஆகியோர் வழிவந்தவர்களாகக் கூறிக் கொள்கின்றனர்.

நாமக்கல் செப்பேட்டில் அரசுக் கொடிவழி கூறப் பெற்றுள்ளது. அச்செப்பேடுகளின்படி மரிசீ, காஸ்யபன், ரவி (சூரியன்) மனு, இக்சுவாகு, சுரகன் பாகிரதன், ரகு, தசரதன், ராமன், மகாபாகு, கேரள ஜகத்பதி மணிகுட்டுவன், கோதை, ரவி (கொண்டாவை மணந்த ரவி) கண்டன் (பல்லவ இளவரசியை மணந்தவன்) ரவி (கங்க இளவரசியை மணந்தவன்) கண்டன் ஆகியோர் கூறப் பெறுகின்றனர். இடையிலிருந்த நான்காம் ஏடு கிடைக்கவில்லை. அதனால் கண்டனுக்குப்பின் ஆண்ட மன்னர்களைப்பற்றி ஏதும் அறிந்து கொள்ள முடியவில்லை.

சந்திராதித்திய குலம்

இடைக்காலக் கொங்குச் சேர மன்னர்களில் சிலர் தங்களைச் சந்திராத்தித்ய குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொள்கின்றனர். இந்திய அரச மரபுகள் சந்திரகுலம் அல்லது சூரிய குலம் என்ற இரு வகைக் குலங்களில் அடக்கிக் கூறப் பெறுகின்றனர். ஆனால் கோவைப் பகுதியில் கிடைக்கின்ற கல்வெட்டுகள் சந்திராதித்திய குலம் என்ற குலத்தைப்பற்றிய குறிப்புகளைத் தருகின்றன. சந்திராதித்திய குலத்தைச் சேர்ந்தவர்களாக இரு பாண்டிய மன்னர்கள் குறிக்கப்பெறுகின்றனர் சின்னமனூர் பெரிய செப்பேட்டில் இராஜசிம்மன் சந்திராதித்திய குலத்தைச் சேர்ந்தவனாகக் குறிப்பிடப்பெறுகின்றான். திருச்சிக் கல்வெட்டு ஒன்றில் பாண்டியாதிராஜர் வரகுணன் சந்திராதித்திய குலத்தைச் சேர்ந்தவனாகக் குறிக்கப்பெறுகின்றான். மேற்குக் கொங்குப் பகுதியில் ஆண்ட இடைக்காலச் சேர மன்னர்கள் பாண்டியர்களோடு மணவினை உறவு வைத்துக் கொண்டவர்களோ என்று கருதவேண்டியுள்ளது. இம்மன்னர்கள் களப்பிர மரபினர் என்ற கருத்தும் அண்மைக் காலங்களில் கூறப்பெறுகின்றது.

கோவை மாவட்டத்தில் இடைக்கால சேரர்கள் கல்வெட்டுகள் சில கிடைக்கின்றன. வெள்ளலூர், பேரூர் ஆகிய ஊர்களில் கிடைக்கும் கல்வெட்டுகள் கோயில் கொடைகளைப் பற்றிக் கூறுகின்றன.

கொங்கின் மேற்குப் பகுதியில் கோகண்டன் வீர நாராயணன், கண்டன் இரவி, இரவிகண்டன், இரவி கோதை, கோதை இரவி ஆகிய மன்னர்களின் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. அண்மையில் பழனி வட்டம் ஒட்டன்சத்திரம் அருகில் கப்பலூர்ப் பட்டி என்ற ஊரில் கோக்கண்டன் மாந்தரன் என்பவன் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பெற்றுள்ளது.

செப்பேட்டில் குறிக்கப்பெறும் இறுதி மன்னன், கண்டன் என்பவனே வீரநாராயணன் தந்தை கோக்கண்டன் என்று கொள்வதில் தவறில்லை. அவ்வாறு கொள்வோமானால் கோக்கண்டனின் மக்கள் மூவர் ஆவர். அவர்கள் வீரநாராயணன், மாந்தரன், இரவி ஆகியோர். இரவிகண்டன் என்பவன் இரவியின் மகனாக இருக்கலாம். இரவியின் இன்னொரு மகன் கோதை என்பவன். இம்மன்னர்கள் கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் ஆட்சி செய்தவர்கள். சங்ககாலம் முதல் கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டு வரை இம்மன்னர்கள் கொங்கில் மேற்குப் பகுதியில் (கோவை) ஆண்டவர்களாகலாம். இவர்களில் இறுதியில் கூறப்பெறும் இரவி கோதையின்

காலத்தைச் சேர்ந்த செப்பேடு கிடைத்துள்ளது. அதனால் இடைக்காலச் சேரர் ஆட்சி ஆனைமலைப்பகுதியில் நீண்ட நாட்கள் நடைபெற்றது என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

வீரகேரளர்

தென் கொங்கு வீர கேரளர்கள் ஆட்சியிலும் வடகொங்கு கொங்குச் சோழர் (கோநாட்டார்) ஆட்சியிலும் இருந்தன. இவர்கள் சுயாட்சி பெற்று சோழர்களுக்குக் கீழ்ப்படிந்தவர்களாக ஆண்டனர். வீர கேரளர்களின் தோற்றம் பற்றி பல்வேறு கருத்துக்கள் உள்ளன. கே.வி. சுப்ரமணிய அய்யர் வீரகேரளர்களைப்பற்றிக் கூறும்போது இடைக்காலச் சேரர்களைத் தொடர்ந்து ஆட்சி செய்த கேரள மரபினர் ஆகலாம் என்று கூறுவார். பேராசிரியர் வி. மாணிக்கம் கோக்கண்டன் மரபில் தொடர்ந்து வந்தவர்களே வீரகேரளர் என்று கூறுவார். அண்மையில் ஓர் ஆய்வாளர் வானியல் கோள் நிகழ்வுகள் வீரகேரளர் கல்வெட்டில் குறிக்கப்பெறுவதைக் கொண்டு வீரகேரள அரசர்களின் ஆட்சிக்காலங்களை அறுதியிட்டுக் கூறியுள்ளார். அவர் குறிப்பிடும் அரசு கொடிவழி சரியானதாகும். ஆனால் அவர் வீரகேரளர்கள் பாண்டியர் மரபிலிருந்து வந்தவர்கள் என்று கூறுகிறார். அக்கருத்து ஆய்வுக்குரியது. தென் கொங்குப் பகுதியில் வீரகேரளர்கள் சுமார் 250 ஆண்டு (கி.பி. 953 -1207 வரை) காலம் ஆண்டுள்ளனர். அவர்கள் ஆட்சிக் காலம் பின்வருமாறு:

1. வீரகேரளன் வீரநாராயணன் - கி.பி. 957-68
2. வீரகேரளன் அமரபுயங்கன் - கி.பி. 967-990
3. வீரநாராயன் அதிசயசோழன் - கி.பி. 990-1021
4. அதிசய சோழன் வீரநாராயணன் - கி.பி. 1021- 1040
5. வீரநாராயணன் வீரகேரளன் - கி.பி. 1040-1069
6. வீரகேரளன் அதிராஜராஜன் - கி.பி. 1069-1092
7. அதிராஜராஜன் ஸ்ரீ ராஜராஜன் - கி.பி. 1092-1129
8. ராஜராஜன் கரிகாலன் - கி.பி.1129-1149

வீரநாராயணனின் தந்தை வீரகேரளன் ஆட்சி கி.பி. 958இல் முடிவடைந்துள்ளதால் வீரகேரளன் வீரநாராயணன் கி.பி. 958 இல் ஆட்சிக்கு வந்துள்ளான் என்றும் கருதலாம்.

வீரகேரள மன்னர்களின் ஆட்சிக் காலத்தைக் கணக்கிட வீரகேரளன் அதிராஜராஜன் என்பவனது 23 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றும் இவன் மகன் அதிராஜராஜன் ஸ்ரீராஜராஜனின் கல்வெட்டு ஒன்றும் துணை நிற்கின்றன. அதிராஜராஜனின் 23 ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் மகாமக திருவிழா நடந்தது. பற்றி குறிப்பிடப்படுகின்றது. மகாமகம் என்பது குரு சிம்மராசிக்கு வரும்போது கொண்டாடப்படுகின்ற ஒரு விழாவாகும். இவ்விழா பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும். இதன்படி கடந்த 2004ஆம் ஆண்டு ஒரு மகாமகத் திருவிழா நடைபெற்றுள்ளது. இதைக்கொண்டு கணக்கிட்டால் கி.பி. 1092இல் ஒரு மகாமகத்

திருவிழா நடைபெற்றிருக்க வேண்டும். மேலும் ஸ்ரீராஜராஜனின் 3 ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டில் குரு துலாம் ராசியில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி மகாமகம் நடைபெற்ற ஆண்டில் சிம்ம ராசியிலிருந்து குரு (ஆண்டுக்கு ஒரு ராசி வீதம் மாறக்கூடியது) சிம்மராசிக்கு மூன்றாம் ராசியான துலாம் ராசிக்கு வந்துள்ளது. எனவே ஸ்ரீராஜராஜன் மகாமகம் நடைபெற்ற ஆண்டான கி.பி.1092 இல் ஆட்சிக்கு வந்துள்ளான். என்றும், இவனுடைய தந்தை வீரகேரளன் அதிராஜராஜன் ஆட்சி இவ்வாண்டில் முடிவுற்றது என்றும் கருதலாம்.

இந்த ஆண்டை மையமாகக் கொண்டும் ஒவ்வொரு மன்னர்களின் கல்வெட்டுகளில் உள்ள ஆட்சியாண்டுகளைக் கொண்டும் இவ்வீரகேரள மரபினர்களின் ஆட்சிக்கு வந்த ஆண்டுகளும் முடிவுற்ற ஆண்டுகளும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. வீரகேரளன் வீரநாராயணனின் ஆட்சிக்குப்பின் இவன் தம்பி வீரகேரளன் அமரபுயங்கன் கி.பி. 967இல் ஆட்சிக்கு வந்துள்ளதால் இவ்வாண்டிற்கு முன்னதாக இவன் ஆட்சி முடிவுற்றுள்ளது.

சோழர்

சோழர்களில் முதலாம் ஆதித்தன் கொங்கு நாட்டை வென்றதாகக் 'கொங்கு தேச ராஜாக்கள்' என்ற நூல் குறிப்பிடும். சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்ட திருத்தணி செப்பேடுகளும் இக்கருத்தினை உறுதிப்படுத்துகின்றன. 25 ஆண்டுகளுக்கு முன் கோவை நகருக்கருகில் இராசகேசரிப் பெருவழி என்றொரு பெருவழி கண்டு பிடிக்கப்பட்டது. இப்பெருவழி பற்றிய கல்வெட்டு வட்டெழுத்திலும், தமிழெழுத்திலும் வடிக்கப்பட்டுள்ளது. வட்டெழுத்தில் ஒருபாடல் பின்வருமாறு அமைகிறது.

திருநிழலு மன்னுயிருஞ் சிறந் தமைப்ப
ஒரு நிழல் வெண்டிங்கள் போலோங்கி – ஒரு நிழல்போல்
வாழியர் கோச்சோழன் வளங்காவிரி நாடன்
கோழியர் கோக்கண்டன் குலவு

இக்கல்வெட்டுக்கருகில் ஆயிரம் ஆண்டுகட்கு முன் அமைக்கப்பட்ட பெருவழியும் உள்ளது. இப்பெருவழி கண்டராராதித்தன் காலத்தைச் சேர்ந்த தென்றும், முதலாம் இராசராசன் காலத்தைச் சேர்ந்ததென்றும் இரண்டு விதமான கருத்துகள் உள்ளன. இவையிரண்டும் வரலாற்று உண்மைக்கு மாறானவை. கோக்கண்டன் என்ற பெயர் சோழர் பரம்பரையில் முதலாமாதித்தனையும் இரண்டாம் இராசராசனையும் குறித்தது. தஞ்சை மாவட்டம் தில்லை ஸ்தானம் என்ற ஊரில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு ஒன்று 'ஸ்வஸ்திஸ்ரீ பல்யானைக்,கோக்கண்டனாயின தொண்டை நாடு பாவிய இராசகேசரியாலும் சேரமான் கோதானுரவியாலும் என்று தொடங்குவதைப் பார்க்கலாம். இக்கல்வெட்டில் பல்யானைக்கோக்கண்டன் என்ற அடைமொழியாகக் கூறப்பெறும் சோழ அரசர்களில் தொண்டை நாடு பாவிய இராசகேசரி முதலாம்

ஆதித்தன் மட்டுமே; ஆகையால் கோக்கண்டன் என்ற பெருவழிக் கல்வெட்டு வாசகம் சோழர்களில் முதலாம் ஆதித்தனை மட்டுமே குறிக்கும். அது கொண்டு கோவைக்கருகிலுள்ள பெருவழி முதலாம் ஆதித்தன் காலத்தில் புதுப்பிக்கப் பட்டது எனக் கொள்ளலாம். இப்பெருவழி சங்க காலத்தில் வழக்கத்திலிருந்த பெருவழியாகும். இப் பெருவழியே இராசகேசரிப் பெருவழி என்று முதலாம் ஆதித்தனால் பெயரிடப்பட்டிருக்க வேண்டும். இராசகேசரிப் பெருவழிக் கல்வெட்டும் ஆதித்தனின் கொங்கு வெற்றியை உறுதிப்படுத்துகின்றது.

கொங்குச் சோழர்

முதற்பராந்தகன் அரசியல் சூழ்நிலை காரணமாகக் கொங்கு நாட்டை சுயாட்சிமிக்க பகுதியாக்கி கோநாட்டார் ஆட்சியில் விட்டுள்ளான். கோநாட்டார் கொங்குச் சோழர் என்று அழைக்கப்பெற்றனர். கொங்குச் சோழர்களில் முதல் மன்னன் 'வீர சோழப் பெருமானடிகள்' என்பவன். இவன் கல்வெட்டு கோவை மாவட்டம் அவினாசி வட்டம் ஆலத்தூரில் கிடைக்கின்றது. இவன் வீரசோழ கலிமூர்க்கன் என்பவனின் தந்தை. அதனால் கே.வி. சுப்ரமணிய அய்யர் இந்த வீர சோழன்தான் கொங்குச் சோழர்களில் முதல் மன்னன் என்று கருதுகிறார். மேலும் கொங்குநாட்டில் (வடகொங்கு) இவனுடைய கல்வெட்டுகள் இரண்டு கிடைத்துள்ளன. ஆலத்தூர் கல்வெட்டு "ஸ்வஸ்திஸ்ரீ வீரசோழப் பெருமான் அடிகளுக்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு முப்பத்து ஐந்தாவது" என்று தொடங்குகின்றது. இக்கல்வெட்டில் குறிப்பிடப்பெறும் வீரசோழப் பெருமானடிகள் வீரசோழக் கலிமூர்க்கனின் தந்தையே ஆவான். மேலும் பராந்தக சோழனுடைய ஆட்சியின் பிற்பகுதியில் இவனுடைய ஆட்சி கொங்கு நாட்டில் தொடங்குகின்றது. அதனால் பராந்தகனுடைய விருதுப் பெயரான வீரசோழன் என்ற பெயரை இவன் தாங்கியுள்ளான் எனலாம்.

கொங்குச் சோழர்களில் முதல் வீரசோழன் காலம் தொடங்கி முதல் குலோத்துங்கன் வரையிலான (943-1168) மன்னர்கள் வடகொங்கில் மட்டுமே ஆட்சி செய்தனர். ஆனால் மூன்றாம் வீரசோழன் காலமுதல் தென்கொங்கிலும் அவர்கள் ஆட்சி பரவியது. மூன்றாம் வீரசோழனுக்கு முன் ஆண்டவர்கள் பட்டியல் கீழே தரப் பெறுகின்றது.

1. முதல் வீரசோழன் - 943-980
2. வீரசோழகலிமூர்க்கன் - 980-1004
3. கலிமூர்க்க விக்ரம சோழன் - 1004-1047
4. விக்ரமசோழ ஸ்ரீ அபிமான சோழன் - 1047-1085
5. அபிமான சோழராஜாதிராஜன் - 1085-1100
6. ராஜாதிராஜ உத்தமசோழன் - 1100 - 1118

7.	ராஜாதிராஜ வீரசோழன் II	-	1118-1138
8.	உத்தம சோழவீர நாராயணன்	-	1138-1149
9.	ராஜகேசரிகுலோத்துங்கன்	-	1149-1168
10.	மூன்றாம் வீரசோழன்	-	1168-1196
11.	இரண்டாம் குலோத்துங்கன்	-	1196-1207
12.	வீரராசேந்திரன்	-	1207-1256
13.	இரண்டாம் விக்கிரம சோழன்	-	1256-1265
14.	ஒரு இராஜகேசரி	-	1265-1273
15.	மூன்றாம் விக்கிரமசோழன்	-	1273-1305

கோநாட்டான் வீரசோழன் (கி.பி. 943-980)

இவனுடைய கல்வெட்டு ஆலத்தூரில் கிடைக்கின்றது. இக்கல்வெட்டு இம்மன்னனின் 37-ஆம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்தது. சமணப் பள்ளிக்குக் கொடை அளித்ததைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இவனுடைய மற்றொரு கல்வெட்டு ஈரோடு மாவட்டம் வள்ளி யெறிச்சலில் கிடைக்கின்றது. அக்கல்வெட்டு சிவன் கோயிலுக்கு அளித்த கொடையைப் பற்றிக் கூறுகின்றது.

வீரசோழ கலிமூர்க்கன் (980-1004)

இம்மன்னனுடைய கல்வெட்டு கொடுவாயில் கிடைக்கின்றது. அவ்வூர் கோயிலில் கிணறு வெட்டியதைப் பற்றிக் கூறுகின்றது.

கலிமூர்க்க விக்கிரமசோழன் (கி.பி. 1004-47)

கோவை மாவட்டம் அன்னூரில் இம்மன்னனுடைய 6 கல்வெட்டுகள் கிடைக்கின்றன. கொங்குச் சோழரில் 40 ஆண்டுகளுக்குமேல் ஆண்டவர்கள் இருவர். இம்மன்னன் 43 ஆண்டுகள் ஆண்டுள்ளான். இவனுடைய மகள் ஒருத்தியை முதலாம் இராசேந்திர சோழன் மணந்திருந்தான். இவனுடைய மெய்க்கீர்த்தி பிரம்மியத்திலிருந்து கிடைக்கும் கல்வெட்டில் உள்ளது.

விக்கிரமசோழ அபிமானசோழன் (கி.பி. 1047 - 85)

இவனுடைய கல்வெட்டு அன்னூரிலிருந்து கிடைக்கின்றது. கல்வெட்டு சிதைந்து போனமையால் இத்தொகுதியில் இடம் பெறவில்லை. இதே ஊரில் கிடைக்கின்ற வீர பராக்கிரம தேவன் கல்வெட்டு விக்கிரமசோழனையும் அபிமான சோழனையும் அடுத்தடுத்து கூறுகின்றது. அதனால் விக்கிரமசோழனுடைய மகன் அபிமான சோழன் என்று கொள்ளலாம். அவனைத் தொடர்ந்து கி.பி. 1047 முதல் ஆட்சியும் செய்துள்ளான்

என்பதும் உறுதிப்படுகின்றது. திருமுருகன்பூண்டியில் கிடைக்கும் 12 ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு ஒன்று பிராமணர்களுக்கும், மடை விளாகத்திருக்கும் தபசியர், நிமந்தகாரர் முதலியோர்க்கும் வரிசைகள் சிலவற்றைத் தந்தது பற்றிக் கூறுகின்றது.

கொங்குச் சோழரில் அபிமானனுக்கு பின்வந்த ராஜாதிராஜன், வீரசோழன் ஆகியோர் கல்வெட்டுகள் இம்மாவட்டத்தில் கிடைக்கவில்லை. உத்தம சோழனின் ஒரு கல்வெட்டு திருமுருகன் பூண்டியில் கிடைக்கின்றது.

இராஜகேசரி குலோத்துங்கன் (கி.பி. 1149-68)

இம்மன்னனுடைய கல்வெட்டுகள் அன்னூர், அவினாசி, சேவூர், திருமுருகன் பூண்டி ஆகிய ஊர்களிலிருந்து கிடைக்கின்றன. இவன் காலத்தில் தஞ்சைச் சோழர் ஆட்சி வலிகுன்றத் தொடங்கியது. அதனால் ஆங்காங்கிருந்த குறு நிலமன்னர்கள் சுயாட்சி பெற்றவர்களாக மாறிக் கொண்டிருந்தனர். அதனால் பேரரசர்களுக்கும் படையுதவி செய்யும் நிலையை அடைந்தனர். கொங்குச் சோழர்களில் முதலாம் குலோத்துங்கன் பாண்டியர் தாயாதிச் சண்டையில் தன் மைத்துனன் குலசேகரனுக்கு ஆதரவாக கொங்கிலிருந்து படைநடத்திச் சென்றான். படை புறப்படும்போது பிராமணர்களுக்கு யாத்திரை தானம் செய்தான். மதுரையைக் கைப்பற்றியிருந்த இலங்கைப் படைத்தலைவர்களை வென்று மதுரையை மீட்டு குலசேகரனிடம் ஒப்படைத்தான். இம்மன்னின் ஆட்சி 19 ஆண்டுகளே நடந்தாலும் பல ஊர்கள் இவன் பேரால் உருவாக்கப் பெற்றன. பல கோயில்கள் கட்டப்பெற்றன. பல இடங்களில் நிலைப்படைகளை உருவாக்கி கொங்கில் பாதுகாப்பைப் பலப்படுத்தினான்.

மூன்றாம் வீரசோழன் (1168-96)

முதலாம் குலோத்துங்கனுக்குப் பின் இம்மன்னன் ஆட்சிக்கு வருகிறான். இவனை குலோத்துங்கனின் மகனாகவே கொள்ளவேண்டும். காரணம் முதல் குலோத்துங்கன் இராஜகேசரி என்ற பட்டத்துடன் ஆட்சி செய்தான். மூன்றாம் வீரசோழன் பரகேசரி என்ற பட்டத்துடன் ஆட்சி செய்தான். அவனுக்குப் பின் வந்த இரண்டாம் குலோத்துங்கன் இராஜகேசரி என்ற பட்டத்துடன் ஆட்சி செய்தான். முதல் குலோத்துங்கனின் பேரன் இராஜகேசரி குலோத்துங்கன். இவ்விருவர்களுக் கிடையில் ஒரு பரகேசரி ஆண்டுள்ளான். அவனே மூன்றாம் வீரசோழன்.

வரிக் கொடை

நல்லூர்க்காநாடு, காவடிக்காநாடு, வாயறைக்காநாடு ஆகிய உட்கிடை (Micro regions) நாடுகளிலுள்ள சிவன் கோயில்களுக்கும், இடிகரை துடியலூர், கூடலூர், கவையன்புத்தூர், சூரலூரான அரியபிராட்டி நல்லூர் ஆகிய ஊர்களில் உள்ள சிவன் கோயில்களுக்கும் அரசன் ஆணை அளித்துள்ளான். அவ்வாணையில்,

சிவப்பிராமணக்காணியாளற்கும் நம் ஓலை குடுத்தபடியாவது தாங்கள் முன்னாள் ஆதிசைவச் சக்கரவர்த்திக் குடுத்துவரும் வேண்டுகோள் பரிவட்ட முதலும் தவனடை தானப் பேற்றுக்கும் தங்கள்பேரில் ஆண்டு தோறும் நம் ஓலை எழுதிவந்த பேற்றாளற்கு இன்னாட்டு நாயன்மார் சீபண்டாரத்திலே விற்றுக் குடுத்து ஆற்றாமையால் இக்கோயில்கள் பூஜை முட்டுகையில் நமக்கு நன்றாக மூன்றாவது முதல் முதல்கள் இழந்தோம்

இக்கல்வெட்டுவாசகம் துடியலூர், இடிகரை, கோயில்பாளையம் (கவையன்புத்தூர்), சூலூர் (சூரலூரான அரியபிராட்டி நல்லூர்), செலக்கெறிச்சல், சோமவார்பட்டி (அமர புயங்கரபுரம்) ஆகிய ஊர்களில் பொறிக்கப் பெற்றுள்ளது. இவ்வூர்களில் உள்ள ஒரே வாசகம் கொண்ட இக்கல்வெட்டுகள் கோனேரின்மை கொண்டான் என்று தொடங்குகின்றன. இக்கல்வெட்டுகளில் குறிக்கப்பெறும் அரசன் மூன்றாம் வீரசோழன் (கி.பி. 1168-1196) ஆகலாம். வீரசோழனின் மூன்றாம் ஆட்சி ஆண்டில் வடகொங்கு சிவன்கோயில்களுக்கு அளிக்கப் பெற்ற ஓர் ஆணையை அளித்துள்ளான். அந்த ஆணை வடகொங்கிலிருந்த இருபது உட்கிடை நாடுகளுக்கு அளிக்கப்பெற்றது. அந்நாடுகளில் உள்ள சிவன்கோயில்களில் பூசை நடைபெறாமல் முட்டுப்பட்டமையால் ஒட்டச்சு என்ற வரியை நீக்கி இந்த ஆணை அளிக்கப்பெற்றது. இந்த ஆணையின் வாசகம் திங்களூர், பாரியூர், கூகலூர், பட்டிலூர், மொடச்சூர் ஆகிய ஊர்களில் பொறித்து வைக்கப்பெற்றுள்ளது. இந்தக் கல்வெட்டுகளின் இறுதியில் கூறப்பெறும் திரிபுவன வீரதேவன் என்ற மன்னன் மூன்றாம் வீரசோழனே என்று உறுதிப்படுத்தப் பெற்றுள்ளது. இவன் கோப்பரகேசரி என்று குறிக்கப்பெறுகிறான். துடியலூர் முதலான ஊர்களில் உள்ள (மேலே கூறப்பெற்ற) கல்வெட்டுகள் சிலவற்றில் கோப்பரகேசரி என்று தொடங்குகின்றது. அது மட்டுமின்றி வடகொங்கில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டு வாசகத்தில் கையொப்பமிட்டுள்ள அதிகாரிகளே துடியலூர் முதலான ஊர்களில் கிடைக்கும் கல்வெட்டுகளிலும் கையொப்பமிட்டுள்ளனர். இந்தச் சான்றும் இக்கல்வெட்டுகள் எல்லாவற்றையும் மூன்றாம் வீர சோழனின் மூன்றாம் ஆட்சி ஆண்டில் பொறித்தார்கள் என்று கருதலாம்.

இவன் இரு கொங்கையும் ஆண்டவன் என்று கூறிக்கொள்ளுகின்றான். இரு கொங்கு என்பது வடகொங்கு, தென்கொங்கு எனும் இரு பிரிவைக் குறிக்கும். கொழுமம் கல்வெட்டு ஒன்று இவன் பிறந்த நாளும் சூரியகிரகணமும் ஒரே நாளில் இருந்தமையால் ஏற்பட்ட தோஷத்தைப் போக்க வீரசோழீஸ்வரம் என்ற கோயிலை கொழுமத்தில் கட்டினான் என்று கூறும்.

இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1196-1207)

விஜயமங்கலம் கல்வெட்டுகளில் சக ஆண்டுடன் குறிக்கப்பெறுபவை சில உள்ளன. அன்னூர், விஜய மங்கலம் ஆகிய ஊர்க் கல்வெட்டுகளைக் கொண்டு இவன் கி.பி. 1195-96ல் ஆட்சிக்கு வந்தான் என்று உறுதியாகக் கூறலாம். இரண்டாம் குலோத்துங்கன் கல்வெட்டுகள் வட கொங்குப்பகுதியில் கிடைக்கின்றன. இரண்டு மன்னர்களும் (முதல், இரண்டாம் குலோத்துங்கன்) வடகொங்கில் மட்டும் ஆண்டுள்ளனர். வீரராசேந்திரன்

கி.பி. 1206 முதல் 121 வரை தென் கொங்கிலும் அதற்குப்பின் வட கொங்கையும் சேர்த்து இரு கொங்கையும் ஒன்றாக ஆண்டிருக்கலாம். மூன்றாம் வீரசோழனின் 19 ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டும் வீரநாராயணனின் கல்வெட்டும் ஒரே கட்டடத்தில் கிடைப்பதால் இவர்கள் அடுத்தடுத்து ஆண்டிருக்கலாம். அதிலும் கி.பி. 1196-1206 காலகட்டத்தில் தென்கொங்கை வீர நாராயணனாய் ஆண்டிருக்கலாம். காரணம் தென் கொங்குப் பகுதியில் இவன் கல்வெட்டு 9 ஆம் ஆட்சி ஆண்டு வரை (கி.பி. 1205) கிடைக்கின்றது.

அன்னூரில் கிடைக்கின்ற குலோத்துங்கன் கல்வெட்டு ஒன்று சக ஆண்டு 1125 (கி.பி. 1203) என்று கூறுகின்றது. முதல் குலோத்துங்கன் கி.பி. 1149 முதல் 1168 வரை ஆட்சி செய்துள்ளான். ஆனால் இக்கல்வெட்டு கி.பி. 1203ம் ஆண்டினைச் சேர்ந்ததாக உள்ளது. இக்கல்வெட்டு கோயில் கொடைகள் நிர்வகிக்கப்பெற்ற விதம் பற்றிக் கூறுகின்றது.

வீரராசேந்திரன் (கி.பி. 1207-1256)

வீரசோழனின் மகனான வீராசேந்திரன் கி.பி.1206ல் பட்டத்துக்கு வந்தான். இவனும் இரு கொங்கையும் ஆண்டதாகக் கூறிக்கொள்கிறான். அன்னூரில் கிடைக்கும் இவனுடைய கல்வெட்டுக்களில் ஆட்சியாண்டைக் குறிப்பிடும் பொழுது 'எதிராமாண்டு' என்ற சொல் குறிப்பிடப்படுகின்றது. சான்றாக 'ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர சோழ தேவர்க்கு எதிர் பதினேழாம் ஆண்டு' என்று வருவதைக் கூறலாம். எதிர் என்ற வாசகம் பயன்படுத்தப்பட்டால் அதைக்கூட்டி ஆட்சி யாண்டைக் கொள்ள வேண்டும். கொங்குநாடு முழுவதும் இவனுடைய கல்வெட்டுகள் முந்நூற்றுக்கும் அதிகமாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஏழாம் ஆண்டு தொடங்கி நாற்பத்தாறாம் ஆண்டு வரையிலான கல்வெட்டுகள் அன்னூரில் கிடைத்துள்ளன.

இந்த மன்னனுடைய கொழுமம் கல்வெட்டு ஒன்றினால் அரிய செய்தி கிடைக்கின்றது. இவன் கரைவழி நாட்டின்மீது படையெடுத்த போது கரைவழி நாடும் கொழுமமும் கொள்ளையிடப்பெற்றன. அந்த இழப்பை ஈடுகட்ட வைகாவிநாட்டு இரட்டயம்பாடி என்ற ஊரைத் தானமாகக் கொடுத்துள்ளான். "நாம் படையேற்றுகையில் கரைவழிநாடும் கொழுமமும் அழிவுபட்டமையில் நமக்குப் பிராயசித்தமாக" என்று கூறி இரட்டயம்பாடியைத் தானமாக அளித்தான்.

வீரராசேந்திரனுக்கு கிரகதோஷம் பிடித்திருந்தது பற்றிய குறிப்பு கல்வெட்டில் கிடைக்கின்றது. அதனால் அக்கால மக்கள் சோதிடத்தையும் வானசாத்திரத்தையும் அறிந்திருந்தார்கள் என்பது புலப்படும். இம்மன்னன் காலத்தில் கொங்குநாடு வாணிக வளத்திலும் வேளாண்வளத்திலும் பெருமை பெற்று விளங்கியது. எல்லாச் சமயங்களுக்கும் ஆதரவளித்தான். இவனுடைய அதிகாரிகள் பலர் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகின்றனர். இவன் காலத்தில் பல பிரிவினர் சமூகத்தில் உரிமைபெற்றுப் பெருமை அடைந்தனர். இவனுடைய மனைவி முக்கோக்கிழானடி என்று கல்வெட்டுகள் கூறும். இவனுடைய மகன் நச்சினார்க்கினியன் என்பவன் குறிக்கப் பெறுகின்றான்.

வடுகன் கலகம்

கொழுமத்திலுள்ள இவன் கல்வெட்டு ஒன்று வடுகன் கலகம் என்று கூறும். இந்த வடுகன் கலகம் போசள மன்னன் வீரசோமிசுரன் கொங்கின் மேல் படை யெடுத்து வென்றதையே குறிக்கின்றது. வீரசோமிசுரன் கல்வெட்டு ஒன்று அன்னூர் கோயிலில் கிடைக்கின்றது. கொழுமத்தில் ஒருகல்வெட்டும் கிடைக்கின்றது. வீரராசேந்திரன் கி.பி. 1235க்குப் பின் 1245 வரை அப்பகுதியில் ஆளவில்லையோ என்று கருதவேண்டியுள்ளது. அதற்குக் காரணம் வடுகன் கலகமே ஆகலாம்.

இரண்டாம் விக்கிரம சோழன் (1256-63)

வீரராசேந்திர சோழனுக்குப்பின் விக்கிரம சோழன் என்ற பெயருடன் பல கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இக்கல்வெட்டுகள் இரண்டு அரசர்கள் விக்கிரம சோழன் என்ற பெயரில் வாழ்ந்ததைக் குறிக்கின்றன. இவ்விருவருக்குரிய கல்வெட்டுகளையும் வகைப்படுத்திப் பார்ப்பது அரிதாக உள்ளது. வரலாற்று ஆசிரியர் இரண்டாம் விக்கிரம சோழன் என்றும், மூன்றாம் விக்கிரம சோழன் என்றும் இருவரைப் பிரித்துக் கூறுவர். மேலும் மாறவர்மன் சுந்தர பாண்டியன் ,மாறவர்மன் விக்கிரம பாண்டியன் ஆகியோர் கல்வெட்டுக்களில் மச்சுனனார் என்று விக்கிரம சோழனை அழைக்கின்றனர். இது கொண்டு கே.வி. சுப்பிரமணிய அய்யர் வீரராசேந்திரன் (விக்கிரம சோழனின் தந்தை) தன்னுடைய இரண்டு பெண்மக்களைப் பாண்டிய மன்னர்களுக்கு மணம் செய்தான் என்று கூறுகின்றார். பாண்டிய மன்னர்களின் காலம் வீரராசேந்திரனின் காலம் ஆகியன ஒன்றேயாகையால் விக்கிரம சோழன் பாண்டிய நாட்டிற்கு வந்திருக்க வேண்டும் எனலாம்.

இரண்டாம் விக்கிரம சோழனின் ஆட்சியாண்டு ஏழு சக ஆண்டு 1185 உடன் வருவதால் அவன் வீரராசேந்திரனுக்குப் பின் (கி.பி. 1256) ஆட்சிக்கு வந்திருக்க வேண்டும் என்று கருதலாம். மற்றொரு விக்கிரம சோழன் கல்வெட்டுகளில் ஒன்றில் சக ஆண்டு (1195) குறிக்கப் பெறுவதால் இவனுடைய ஆட்சி கி.பி. 1273ல் தொடங்கியிருக்கவேண்டும் எனலாம். இவருடைய இறுதி ஆட்சி ஆண்டினை உறுதிப் படுத்துவது கடினமாக உள்ளது. மூன்றாம் விக்கிரம சோழன் கி.பி. 1273-ல் ஆட்சிக்கு வந்தான். இருவருடைய ஆட்சி தொடக்கத்துக்கும் இடையில் பதினெட்டு ஆண்டுகள் இடைவெளி. அதனால் கல்வெட்டு எழுத்து வடிவத்தைக் கொண்டு இருவர் கல்வெட்டுகளையும் பிரித்தறிவது கடினம். மேலும் இருவரும் 'பரகேசரி' என்ற பட்டப் பெயரைத் தாங்கி இருப்பதால் இருவருக்குமிடையில் ஓர் 'இராஜகேசரி' ஆண்டிருக்கவேண்டும் என்று கருத வேண்டியுள்ளது. இரண்டாம் விக்கிரம சோழன் ஏழு ஆண்டுகளே (கி.பி. 1256-63) ஆண்டான் என்று கொண்டால் இவனுக்குப் பின் ஓர் இராஜகேசரி பத்தாண்டுகள் ஆண்டிருக்க வேண்டும் என்றும் கருதலாம். ஏனென்றால் மூன்றாம் விக்கிரம சோழன் ஆட்சி கி.பி. 1273ல் தொடங்குகின்றது. மூன்றாம் விக்கிரம சோழனை இரண்டாம் விக்கிரம சோழனின் பேரன் என்று கூறலாம். இவன் 32 ஆண்டுகள் (கி.பி. 1305 வரை) ஆண்டான்.

பாண்டியர்

கி.பி. 13 ஆம் நூற்றாண்டு முதல் கிடைக்கும் கல்வெட்டுகளில் சடாவர்மன் வீரபாண்டியன், இராசகேசரி வீரபாண்டியன் சுந்தரபாண்டியன் ஆகிய பெயர்களுடன் இம்மாவட்டத்தில் சில கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இவர்களில் சடாவர்மன் வீரபாண்டியன் மதுரைப் பாண்டியர் மரபினைச் சேர்ந்தவன் ஆகலாம். பிறபாண்டிய மன்னர்கள் கொங்குப் பாண்டியர்கள் என்று கொள்வதில் தவறில்லை. பாண்டியர் கல்வெட்டுகள் சிலவற்றில் கொங்குச் சோழர்கள் கீழிருந்த அதிகாரிகள், நிருவாக முறை, ஊர்ப்பெயர்கள் ஆகியவை குறிக்கப்பெறுகின்றன. பாண்டியர் காலத்தில்தான் நாட்டுச்சபைகள் மேன்மை பெற்றன. வெள்ளாநாடு, பூலுவநாடு ஆகிய சமுதாய சபைகள் பெருமை பெற்றன. நிலக்கொடை வரிக்கொடை ஆகியவற்றை இந்தச் சபைகளே அளிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தன. பாண்டியர்களுக்கும் போசளர்களுக்குமிடையில் ஏற்பட்ட ஆதிக்கப்போட்டியில் கொங்குநாடு அடிக்கடி கைம்மாறிக் கொண்டிருந்தது.

மதுரை சுல்தான்

மாலிக்காப்பூர் படை யெடுப்பின் போது கொங்கு நாட்டு ஊர்களும் அழிந்து பட்டன. அதற்குப்பின் கி.பி. 18-19 ஆம் நூற்றாண்டில் தான் இவ்வூர்களில் குடியேற்றம் நிகழ்ந்தது. தமிழ்நாட்டில் கி.பி. 1360 முதல் 1370 வரை முகம்மதியர் கோவை மாவட்டம் ஆட்சி நடந்துள்ளது. கடத்தூரில் கிடைக்கும் கல்வெட்டு மகாராஜனுக்கு ஆண்டு 769 என ஹிஜிரி 769 ஆம் ஆண்டைக் (கி.பி. 1368) குறிப்பிடுகின்றது.

போசளர்

போசளர்களில் வீரசோமீசுரன் வீரராமநாதன் ஆகியோர் கல்வெட்டுகளுக்குப் பின் மூன்றாம் வீர வள்ளாளனின் கல்வெட்டுகள் மிகுதியும் கிடைக்கின்றன. முப்பதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் இம்மாவட்டத்தில் கிடைக்கின்றன. பேரூரிலும் பவானி சாகரில் மூழ்கியுள்ள தண்ணாயக்கன் கோட்டையிலும் ஒரே வாசகம் கொண்ட பெரிய கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. அவற்றில் நீண்ட மெய்க் கீர்த்தி (சமஸ்கிருதத்தில்) அமைந்துள்ளது. இம்மன்னன் காலத்தில் நாட்டுச் சபைகள் மிகுந்த சுதந்தரத்துடன் செயல்பட்டன. இம்மன்னனின் இறுதி ஆண்டுகள் போர்களும் பூசல்களும் மிகுந்தவையாக இருந்தன. இவனுடைய தண்ட நாயக்கர்கள் தாங்களே சுதந்திரமாக ஆணைகளை வழங்கினர். மாதப்ப தண்ட நாயக்கன், சிதகர தண்ட நாயக்கன். இராகுத்தராய கேட்டைய தண்டநாயக்கன் ஆகியோர் சுதந்திரமாக ஆணைகளை அளித்துள்ளனர். வீரவள்ளாளன் கல்வெட்டுகள் சமயம், சமூகம், பொருளியல், நிருவாகம் ஆகியவற்றினைப் பற்றிப் பல அரிய செய்திகளைத் தருகின்றன.

விஜயநகரர், மைசூர் உடையார்கள்

கோவை மாவட்டத்தில விஜய நகரர் கல்வெட்டுகள் மிக் குறைவாகவே கிடைக்கின்றன. அச்சுதராயன் காலத்துக் கல்வெட்டுகள் சிலவும், ராமராயர் கல்வெட்டுகள் சிலவும் கிடைக்கின்றன. இவர்கள் காலத்தைச் சேர்ந்த சில கல்வெட்டுகள் சக ஆண்டை மட்டும் குறிக்கின்றன. அரசன் பெயரைக் குறிக்கவில்லை.

நாட்டுப்பிரிவுகள்

கோவை மாவட்டத்தில் கிடைக்கும் கல்வெட்டுகளில் கி.பி. 12 ஆம் நூற்றாண்டிலிருந்து நாடு என்ற அரசியல் பூகோளப் பிரிவுகள் குறிக்கப் பெறுகின்றன. வடபரிசாரநாடு வட கொங்கின் 20 நாட்டுப் பிரிவுகளுள் ஒன்று. இது வட கொங்கு, தென் கொங்கு ஆகிய இரண்டு பெரும் பிரிவுகளிலும் கூறுகளையும் கொண்டுள்ள பகுதி. காலப் போக்கில் நாலூர் பற்று நாடு, என்ற ஒரு பிரிவு வட பரிசார நாட்டிலிருந்து உருவான உட்பிரிவு மற்றும் தென் கொங்கு என்ற பெரும் பிரிவு மட்டும் கூறப்பெறுகின்றதே ஒழிய அப்பெரும் பிரிவுக்குட்பட்ட உட்கிடை நாடுகள் (micro region) தொகுத்துக் கூறும் கல்வெட்டு கிடைக்கவில்லை. அதனால் தென் கொங்கில் ஐந்து நாடுகள் இருந்தன என்று ஒருசாரார் கூறுவர். ஆனால் கொழுமத்தில் கிடைக்கின்ற கல்வெட்டு ஒன்று ஏழு நாடுகளைக் கூறுகின்றது. அவை பேரூர் நாடு வாயறைக்காநாடு, காவடிக்காநாடு, கரைவழிநாடு, வெண்டையூர்க்கால் வீரகேரள வளநாடு, நல்லூர்க்காநாடு, வைகாவிநாடு ஆகிய ஏழு நாடுகள்.

வளநாடு

கோவை மாவட்ட கல்வெட்டுகளில் வளநாடு என்ற நாட்டுப் பிரிவு கூறப்பெறுகின்றது. ராஜராஜ வளநாடு வீரசோழ வளநாடு ஆகிய வள நாடுகள் சில கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகின்றன. இங்குக் குறிக்கப்பெறும் வளநாடு என்ற சொல் நீர் வளமிக்க பகுதி என்ற பொருளில் வழங்கப் பெற்றது. சோழமண்டலத்தில் 'வளநாடு' என்ற கூறப் பெறும் பொருளில் இங்கு வழங்கப் பெறவில்லை.

நாட்டு நிருவாகம்

நாடு என்ற அரசியல் பூகோளப் பிரிவுகள் (Marco region) கி.பி. 12 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் முதன் முதலாகக் குறிக்கப்பெறுகின்றன. கோவை மாவட்டக் கல்வெட்டுகளில் நாட்டுச் சபை தொடக்கத்தில் காணப் பெறவில்லை. கொழுமம் கல்வெட்டு ஒவ்வொரு உட்கிடை (Marco region) நாட்டுப் பிரிவுக்கும் ஒரு தலைவன் நியமிக்கப் பெற்றிருந்தான் என்பதை உணர்த்துகிறது. அவன் நாட்டுச் சாமந்து, நாட்டுச் சாமந்தன், நாட்டுக்கருமம் ஆராய்வார் ஆகிய பெயர்களால் குறிக்கப் பெறுகின்றான். கி.பி. 14 ஆம் நூற்றாண்டிலிருந்து நாட்டுச் சபைகளைப் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. கி.பி. 13 ஆம் நூற்றாண்டுவரை நாட்டுச் சாமந்தர் நிருவாகத்தின் கீழ்தான் உட்கிடை நாடுகள் இருந்தன. விதிவிலக்காக வடபரிசார நாடு அமைந்திருந்தது. இந்த

உட்கிடை நாட்டு நிருவாகத்தை சாமந்தர் வசம் ஒப்படைக்க வில்லை. ஆனால் வெள்ளா நாடு, பூலுவநாடு ஆகிய இருவகை சமுதாய சபைகள் இப்பகுதி நிருவாகத்தைக் கவனித்தன. அதற்கான காரணம் தெரியவில்லை.

வெள்ளாநாடு

வெள்ளாநாடு என்பது வட பரிசார நாட்டிலிருந்த வெள்ளாளர் சபை. இச்சபை தன் ஆளுகைக்குட்பட்ட குடிகளின் வரியைக் கோயிலுக்கு அளிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தது என்பதை சேவூர், அவினாசி ஆகிய ஊர்க் கல்வெட்டுகளால் அறியலாம். இந்நாட்டினர் பூலுவநாட்டாருடன் சேர்ந்து சில கொடைகளை அளித்துள்ளனர். பெரிய நாட்டார் (சித்திர மேழி பெரிய நாட்டார்?) நடத்துகின்ற திருவிழாவிற்கு வெள்ளாநாட்டுச் சபை கொடை அளித்துள்ளது. அதுமட்டுமின்றி திருமுருகன் பூண்டிக் கல்வெட்டு ஒன்றில் வெள்ளாளர்களுக்கும் பூலுவர்களுக்கு மிடையில் நடைபெற்ற ஒப்பந்தத்தில் வெள்ளாளர்களுக்காக சித்திர மேழி பெரியநாட்டார் கையொப்ப மிட்ட செய்தி கூறப்பெறுகின்றது அதனால் சேவூர் கல்வெட்டில் கூறப்பெறும் பெரியநாட்டார் என்ற சபை சித்திர மேழி பெரிய நாட்டாரே ஆகலாம்.

பூலுவ நாட்டார்

வடபரிசார நாட்டிலிருந்த பூலுவர் தங்களுக்கென நாட்டுச் சபையை வைத்திருந்தனர். அதற்கு பூலுவ நாடு என்று பெயர். பூலுவநாட்டாரும் தங்கள் ஆளுகையின் கீழிருந்த பூலுவக்குடிகளிடமிருந்து வரிவாங்கவும், வரியினைக் கோயிலுக்குக் கொடை அளிக்கவும் அதிகாரம் பெற்றிருந்தனர்.

இவ்விரு சமுதாய சபைகளும் (வெள்ளாநாடு, பூலுவநாடு) ஒன்றிணைந்து வரிக் கொடை, நிலக் கொடை ஆகியவற்றை அளித்தன. நாடு அளவில் சபைகள் இருந்ததைப் போல ஊர் அளவிலும் சபைகள் இருந்துள்ளன. அவற்றிற்கு வெள்ளானூர், பூலுவனூர் என்று பெயர். வெள்ளாளர், பூலுவர் ஊர்ச்சபைகள் பொங்கலூர்க்கா நாடு, காங்கய நாடு ஆகிய உட்கிடை நாடுகளிலும் இருந்துள்ளன. ஆனால் வெள்ளாநாடு பூலுவநாடு ஆகிய சமுதாய சபைகள் இல்லை. கொங்கு நாட்டில் எல்லா ஊர்களுக்கும் ஊர் சபைகள் இருந்தன.

ஆறுநாட்டார் சபை

ஆலத்தூரில் பொறிக்கப்பெற்ற மூன்றாம் வீரவள்ளாளன் காலத்திய கல்வெட்டு ஆலத்தூர் சமணப் பள்ளிக்குரியது என்றும், அவினாசி சிவன் கோயிலுக்குரிய தென்றும் நாட்டார் சபை முன்பு முறையிடப்பட்டதைக் குறிப்பிடுகிறது. கல்வெட்டு வாசகம் பின்வருமாறு:

'ஆறுநாட்டு நாட்டவரோம் வடபரிசாரநாட்டு ஆலத்தூர் அமண தேவர் அணியாத அழகிய நாயனாற்கும் புக்கொளியூர் அவினாசி ஆளுடையாற்கும் தன்ம சாதனம் பண்ணிக் குடுத்தப் பரிசாவது இந்த ஆலத்தூர் அமண தேவர் அணி ஆத அழகிய நாயனாற்கும் புக்கொளியூர் அவிநாசி ஆளுடையாற்க்கும் திரிபுவனசக்கரவர்த்தி குடுத்தான் என்றும் அணியாதழகியார்க்கு சேரமான் சக்கரவர்த்தி குடுத்தான் என்று. . . . . நாட்டார் முன்பும் முறைப்பட்டு இரண்டு சாதனமும் காட்டுகையால் இரண்டு சாதனமும் பார்த்த அளவில் இரண்டும் பூர்வசாதனம் ஆனபடியாலே இரண்டு கோயிலுக்கும் பொது வாக்கி இந்த ஊர். . . . இரு பாலாக செய்வித்துக் குடுத்தோம் ஆறுநாட்டு நாட்டவரோம்.'

இக்கல்வெட்டு வாசகம் அந்நாளில் நாட்டுச்சபை செயல்பட்டவிதமும், ஆவணங்களை நூற்றாண்டு காலமாகப் பாதுகாத்து வைக்கும் பழக்கம் இருந்த தன்மையும் அறிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. ஆறு நாடு என்பது பேரூர் நாடு, ஐங்கரைநாடு, வடபரிசாரநாடு, வீரசோழ வளநாடு, குறும்புநாடு, நாலூர்ப் பற்று நாடு ஆகியன.

நகரத்தார்

வணிகர் தங்களுக்கென வைத்திருந்த சபை நகரம் என்று அழைக்கப்பெற்றது. வணிகர்கள் வைத்திருந்த சபை கொங்குநாடு முழுவதும் பரவியிருந்தது. மாவண்டூர், தேவம்பாடி (குள்ளிச் செட்டிப்பாளையம்) அமரபுயங்கர புரம் (சோமவார் பட்டி) முட்டம் (போளுவாம் பட்டி திருமுருகன்பூண்டி ஆகிய ஊர்களில் நகரத்தார் சபைகள் இருந்தன.

தாவளம்

வணிகர்கள் பெருவழிகளில் தங்கி வாணிகம் செய்வதற்காக உருவாக்கப் பட்டதே தாவளம் என்ற வாழ்விடம் ஆகும். சர்க்கார் பெரிய பாளையம் கல்வெட்டில் 'அறுபத்து நான்கு கடிகைத் தாவளமும் தாவளத்திருந்து தன்மை வளர்க்கும் செட்டியும் செட்டி வீரபுத்திரர்களும்' என்று கூறுவதிலிருந்து தென்னகம் முழுவதும் அறுபத்திநான்கு தாவளங்கள் இருந்தமை புலப்படும். பேரூர்க் கல்வெட்டில் கொற்றமங்கலமான மஞ்சிபுளித்தாவளம் என்றொரு தாவளம் குறிக்கப் பெறுகின்றது.

அடிக்கீழ்தளம்

அவினாசி, பெருமாநல்லூர், பழங்கரை, நடுவச்சேரி ஆகிய ஊர்களில் அடிக்கீழ்தளம் என்ற இருப்பிடம் குறிக்கப்பெறுகின்றது. 'கரையான அடிக்கீழ்தளம்' என்று ஓர் அடிக்கீழ் தளம் குறிக்கப்பெறுகின்றது. திருமுருகன் பூண்டிக்கல்வெட்டு ஒன்று 'மேற்றலைத் தஞ்சாவூரான மன்னியூர் அடிக்கீழ்தளம்' என்று கூறுகின்றது. இது தற்காலத்திய அன்னூரிலிருந்தது. அடிக்கீழ்தளம் என்பது வணிக வீரர்கள் தங்கியிருந்த இடம்.

பெருவழி

கோவைக்கருகில் உள்ள அறிவொளிநகரின் மேற்குத்திசையில் 2 கி.மி. தொலைவில் உள்ள காற்றாடும் பாறை என்ற இடத்தில் உள்ள கல்வெட்டு இராசகேசரிப் பெருவழியைப் பற்றியது. இக்கல்வெட்டு அருகிலேயே சோழர்கள் அமைத்த பெருவழியும் உள்ளது. இக்கல்வெட்டு வாசகத்தில் மூன்று முறை நிழல் என்ற சொல் பயின்று வருகின்றது. இங்கு பயன்படுத்த பெறும் நிழல் என்ற சொல்லின் பொருளினை விளங்கிக் கொள்ள கேரள மாநில செப்பேடுகள் கல்வெட்டுகள் ஆகியவற்றில் கிடைக்கும் சான்றுகளை அணுகவேண்டும். அந்த ஆவணங்களில் நிழல் என்ற சொல் நிழற்படை (Shadow army) என்ற பொருளில் கூறப்பெறுகின்றது. அரசனைப் பாதுகாக்க இப்படை பயன்படுத்தப்பெற்றது. பெருவழிக் கல்வெட்டிலும் 'நிழல்' என்ற சொல் (Shadow army) என்ற பொருளில் வழங்கப் பெற்றிருக்க வேண்டும். கோவை மாவட்டத்தில் பெருவழிகள் சோழர் காலத்திலேயே வழக்கத்தில் இருந்தன என்பதற்குக் கல்வெட்டுச் செய்திகள் உள்ளன. அசுரர் மலைப் பெருவழி, சோழமாதேவிப் பெருவழி, பிடாரி கோயில் பெருவழி முதலிய பெருவழிகள் இம் மாவட்டத்தில் இருந்துள்ளன. பெருவழிகளில் எறிவீரர் என்ற வீரர் பிரிவினர் இருந்துள்ளனர். அவர்கள் பாதுகாப்பில் வணிகர்களும் மக்களும் சென்று வந்தனர்.

பொன்னும் காசும்

கோவை மாவட்டத்துக் கல்வெட்டுகளில் பொன், காசு ஆகிய வற்றைப் பற்றிக் கூறப்பெறுகின்றன. கோயில் கொடைகளில் காசுக் கொடையே மிகுதியாக அளிக்கப்பெறுகின்றன. பிறகொடைகள் காசுக்கொடையை விட குறைவாக உள்ளன. பசுக்கொடை ஒரே இடத்தில் குறிக்கப்பெறுகின்றது. மாட்டு வளம் நிறைந்திருந்த இந்தப் பகுதியில் மாட்டைக் கோயிலுக்குக் கொடையாக அளிக்காதது வியப்பே. காசுகள் அச்சு, பழஞ்சலாகை, ஸ்ரீயக்கி அச்சு, வராகன் என்ற பெயர்களில் வழங்கின.

வேளாண்மை

இடைக்காலக் கொங்கில் வேளாண்மையை வளர்த்தெடுப்பதில் சோழப்பேரரசு ஆர்வம் காட்டியது. அதனால் காடு கொன்று நாடாக்கும் பணி விரைவு படுத்தப்பெற்றது. பல புத்தூர்கள் உருவாக்கப்பெற்றன. இங்கு வாழ்ந்த பழங்குடிகள் வேளாண்மையில் ஈடுபட்டு ஓரிடத்தில் தங்கி வேளாண்மை செய்யும் (sedentary Agriculture) முறைக்கு மாறினர். இது கொங்குநாட்டு சமூக வாழ்வில் ஏற்பட்ட பெருமாற்றமாகும். அதனால் வேளாண்மை பெருகியது. வேளாண் பொருட்களை வாங்கி விற்கும் வணிகர்கள் எழுச்சிப் பெற்றனர். வாணிகர் - வேளாளர் கூட்டமைப்பு உருவாயிற்று. அதுவே சித்திர மேழிப் பெரியநாடு ஆகும்.

நில அளவைச் சொல்லும் போது காணி, முந்திரிகை என அரசு பயன்படுத்தும் அளவுகளைக் குறிப்பிட்டாலும் விதை கலனே தூணி என்ற மரபு வழிவந்த அளவுகளும் பயன் படுத்த பெற்றன. மக்கள் வேளாண்மையில் ஈடுபட வரிநீக்கம் செய்தனர். பல ஊர்களைத் தேவதானமாக அளித்து வேளாண் வளத்தைப் பெருக்கினர். நிலக்கொடையில் 70% விழுக்காடு கோயிலுக்கு அளிக்கப்பெற்றன. சோழர் காலக்

கொங்கில் வேளாண்மை வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாய் இருந்தது. எறிச்சில், பொழில், வாய்ச்சி என்ற பெயர்கள் காட்டினைத் தீயிட்டு அழித்துப் பயிர் செய்ததைச் சுட்டுகின்றது.

கொங்குநாடு முல்லையும் குறிஞ்சியும் கலந்த சுற்றுச்சூழல் பெற்றிருந்ததால் இவ்விரு நிலத்தில் விளையும் கம்பு, எண்ணெய் வித்துகள், கடுகு, தென்னை, வாழை, இஞ்சி போன்ற பயிர்களைப் பெரும்பான்மையும் பயிர் செய்தனர். வேளாண் தொழிலுக்கு வரி தானியமாகவே பெறப்பட்டது. வேளாண்மைக்குத் தேவையான உதவிகளை கோயிலே செய்தது. விளைச்சலில் மேல்வாரத்தை கோயிலே எடுத்துக் கொண்டது.

நீர்ப்பாசனம் வேளாண்மைக்கு இன்றியமையாதது. இடைக்காலக் கொங்குக் கல்வெட்டுகளில் நீர்ப்பாசனம் பற்றிய செய்திகள் பரவலாகக் கிடைக்கின்றன. கால்வாய்கள், அணைகள் ஏரிகள் எனப் பலதிறப்பட்ட நீர்ப்பாசன அமைப்புகள் பற்றிய செய்திகள் மிகுதியும் கிடைக்கின்றன. நொய்யலாற்றின் இருமருங்கும் நெல்விளையக் கண்டார்கள் கொங்கு மன்னர்கள். வீரராசேந்திரன் கல்வெட்டு ஒன்று தேவிசிறை என்றொரு அணையைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. முட்டம் கல்வெட்டுகள், பேரூர்க் கல்வெட்டுகள் ஆகியவை நொய்யலாற்றிலிருந்து பிரிந்த வாய்க்கால்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. பேரூரில் தேவி சிறை என்ற அணைக்குக் கீழ்ப்பகுதியில் கோளூர் அணை என்றொரு அணை இருந்தமை பற்றிக் கூறுகின்றது.

இடிகரை, கோயில்பாளையம், சேவூர் ஆகிய ஊர்களில் ஏரிகள் இருந்தமைப் பற்றிக் கல்வெட்டுகள் கூறுகின்றன. கருவலூரில் புரோசைக்குளம் என்றொரு குளம் இருந்தமைபற்றி அவ்வூர் கல்வெட்டு கூறும். அச்சுதராயன் காலத்துக் கல்வெட்டு ஒன்று அவிநாசியில் லிங்கணன் குளம் என்றொரு குளம் இருந்தமை பற்றிக் கூறும்.

நீர்நிருவாகம்

கோவை மாவட்டத்தின் பண்டைய நீர் நிருவாகம் பற்றிக் கல்வெட்டுகளில் குறிப்புகள் கிடைக்கின்றன. தேவிசிறை பற்றி பேரூர் கல்வெட்டில் கூறப்பெறும் செய்திகளைக் கொண்டு அந்நாளில் நீர் நிருவாகம் அரசனின் ஆளுகையின் கீழிருந்தது என்று கூறலாம். அரசன் தனது ஆணையில் "தங்களுரெல்லையில் தேவிசிறை என்கிற அணையடைத்து வாய்க்காலும் வெட்டிக் கோளூரணைக்கு சேதம் வராதபடி அவ்வணைக்குப் பின்பாக நீர் விட்டுக் கொள்வாராகவும்" என்று கூறுகிறான். சில ஏரிகள் குளங்கள் கோயில்களின் பராமரிப்பில் இருந்துள்ளன. இந்த ஏரிகளின் நீர் நிருவாகத்தை கோயில்கள் தங்கள் அதிகாரத்தின் கீழ் வைத்திருந்தன.

சித்திர மேழிப் பெரியநாடு

சேவூர் கல்வெட்டு கூறும் பெரிய நாட்டார் என்ற பெயர் வேளாண் வணிகக் கூட்டமைப்பைப் பற்றிச் சுட்டுவதாகலாம். சித்திரமேழி பெரியநாடு என்ற அமைப்பு கோவை மாவட்டத்தில் இருந்தது. பொள்ளாச்சி வட்டம், குள்ளிசெட்டி பாளையம்

எனற ஊரில் கிடைத்த கல்வெட்டு வேளாண் வணிகக் கூட்டமைப்புப் பற்றிய கல்வெட்டு .இந்தக் கல்வெட்டிருந்த கோயிலை முழுமையும் உடைத்துவிட்டார்கள். ஆனால் அம்மாவட்டத்தில் பரவலாகக் கிடைக்கும் கல்வெட்டுகள் சித்திரமேழி பெரியநாடு தொடர்பான செய்திகளைக் கூறுகின்றன. சித்திரமேழீஸ்வரம், சித்திரமேழி பிள்ளையார், சித்திரமேழிபட்டன் சித்திர மேழித் தட்டான், சித்திரமேழி விண்ணகரம் ஆகிய பெயர்கள் சித்திரமேழி பெரிய நாட்டார் செல்வாகக்கினைச் சுட்டுகின்றன.

சித்திர மேழி பெரியநாடு என்ற அமைப்பு வடக்கே ஷோலாப்பூரிலிருந்து தெற்கே திருநெல்வேலி வரை தன்னுடைய நடவடிக்கைகளைக் கொண்டதாக விளங்கியது. சித்திர மேழிப் பெரியநாடு கொங்குநாடு முழுவதும் செல்வாக்கு பெற்று விளங்கியது. இந்த அமைப்பு தனக்கென மெய்க்கிர்த்தியை பெற்றிருந்தது. மேலும் தானாக வரிவசூல் செய்யும் அதிகாரத்தையும், தானே வரிகளைக் கோயிலுக்குக் கொடையாக அளிக்கும் அதிகாரத்தையும் பெற்றிருந்தது. கோவை மாவட்டத்தில் கி.பி. 13-14 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் சித்திரமேழி பெரிய நாடு அமைப்பைப் பற்றி விரிவாகக் கூறுகின்றன.

சமூகம்

கல்வெட்டுகள் மக்கள் வாழ்க்கையுடன் தொடர்புடையவையாகையால் அந்நாளைய சமூக இயக்கத்தைப் பற்றி விரிவாக அறிந்து கொள்ளக் கல்வெட்டுகள் முதன்மைச் சான்றுகளாக அமைகின்றன. சோழர்கள் எழுச்சிக்குப்பின் தென்னிந்தியா முழுவதும் சமூகத்தில் பாரதூரமான மாற்றங்கள் நிகழ்ந்தன. பல்குழுவும் கொல்குறும்பும் நாகரிக நீரோட்டத்தில் கலந்து நாகரிகக் குடிகளாயின. கூறாக்க நிலை குடி (Segmentary lineages) களாக இருந்த இப்பகுதி மக்கள் ஒரு குடையின் கீழ் இணைந்து செயல்பட்டனர்.

பழங்குடி இணைப்பு

சோழர்கள் வருகைக்கு முன் பரவலாக மக்கள் வாழ்ந்த நிலைபற்றி இலக்கியங்களும் பண்டைய செப்பேடுகளும் குறிப்பிடுகின்றன. அவற்றில் குறிப்பிடப்பெறும் மக்கள் பெருவழி ஓரத்திலிருந்த ஊர்களில் வாழ்ந்தவர்கள். கோவை மாவட்டத்துக் காடுகளிலும், மலைகளிலும் வாழ்ந்த பழங்குடி மக்கள் கி.பி. 10-11 ஆம் நூற்றாண்டு முதல் சமூக நீரோட்டத்தில் பெருமளவில் இணைக்கப் பெற்றனர். இருப்பினும் இம்மக்கள் தொகை அதிகரித்தமை பற்றியும், கோயிலோடும் அரசோடும் அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட தொடர்பு பற்றியும் செய்திகள் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு முதல் விரிவடைந்து வந்தன. இந் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில்தான் பல்வேறு சமூகக் குழுக்களைச் சேர்ந்த மக்கள் கோயிலுக்குக் கொடை அளித்தமை பற்றிய செய்தி மிகுதியும் கிடைக்கின்றன. இக்கல்வெட்டுகளில் குறிப்பிட்ட நபரின் தந்தை பெயர் குறிப்பிடாமல் கூட்டப்பெயர் (Clan name) மட்டும் குறிப்பிடப்படுகின்றன. இந்தப் போக்கு பிற பகுதிகளில் இல்லாத போக்கு. அதனால் இப்பகுதி மக்களுக்கு பழங்குடிநிலையில் முழுமையான தொடர்பு இருந்தது என்பது அறிய முடிகின்றது.

கொங்குச் சோழரில் வீரராசேந்திரன் (கி.பி. 1207-56) காலம் முதல் பழங்குடிச் சமூகங்களின் பெயர்களும், அக்குடிகளைச் சேர்ந்த மக்களின் பெயர்களும் மிகுதியும் பயின்று வருகின்றன. புதிதாக சமூகத்தில் இணைக்கப் பெற்ற பல குடியினர் மேநிலை ஆக்கம் (Upward Mobility) பெறுவதற்கும் பெரும் முயற்சி எடுத்துக்கொண்டனர். அதன் விளைவாக வேந்தன் மக்களுக்கு அளித்த 'வரிசைகள்' பற்றிய கல்வெட்டுகள் மிகுதியும் இப்பகுதியில் கிடைக்கின்றன.

கொங்கு நாட்டுச் சமூகம் பழங்குடி நிலையிலிருந்து சாதிய சமூகத்திற்கு (from Tribe to Caste) மாறிக் கொண்டிருந்த நிலையை இக்கல்வெட்டுகள் குறிப்பதால் இம்மாற்றத்தின் படி முறை வளர்ச்சியைக் கண்டு காட்டதக்க சான்றுகளை பெற்று விளங்குகின்றன. கி.பி. 10 ஆம் நூற்றாண்டிலிருந்து 15 ஆம் நூற்றாண்டுவரை சமூக மாற்றம் நிகழ்ந்து கொண்டேயிருந்தது. முதன் முதலில் சமவெளியிலிருந்த பழங்குடிகள் சமூக நிரோட்டத்தில் இணைக்கப்பெற்றனர். எந்த நேரமும் மாட்டிற்காகவும், மேய்ச்சல் நிலங்களுக்காசவும் பூசலிட்டுக் கொண்டிருந்த சமூகப் பிரிவுகளை ஒரே குடையின் கீழ் கொண்டு வந்தனர். அதன் விளைவாக முரண்பட்ட நிலை மாறி இணைந்து வாழ்ந்தனர்.

வரிசைகள்

இம்மாவட்ட கல்வெட்டுகள் அரசர்கள் மக்கள் குழுவுக்கும் தனி நபர்களுக்கும் அளித்த வரிசைகளைப் (சலுகைகள்) பற்றிக் கூறுகின்றன. பார்ப்பார் சான்றார், கோயில் நிமந்தகாரர், தட்டார், கம்மாளர் ஆகியோர் பெற்ற வரிசைகளைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவ்வரிசைகள் அரசு கருவூலத்தில் காசு கட்டிய பின்பே அளிக்கப் பெற்றன. வடபரிசார நாட்டுப் பார்ப்பார் சான்றார்க்குக் கொடுத்த ஆணையில் 'இவர்கள் சரக்குக்குப் பொன் வைத்தமையில் இவர்களுக்கு நாம் குடுத்த வரிசையாவது' என்று அவிநாசிக் கல்வெட்டு கூறும். கோவை மாவட்டத்தில் அபிமான சோழன் என்ற மன்னன் அளித்த வரிசைகள் பற்றிய கல்வெட்டுதான் காலத்தால் முற்பட்டது. அக்கல்வெட்டு கி.பி. 1085ல் பொறிக்கப்பட்டது. இருகூர் செப்பேடு ஒரு பிராமணக் குடும்பத்திற்கு அளிக்கப்பெற்ற உரிமைகளைப் பற்றிக் கூறுகின்றது. அதற்குக் காரணமும் கூறப் பெறுகின்றது. இந்தப் பிராமணக் குடும்பத்தினர் வீரகேரள மரபிற்கு அமரபுயங்கன் காலம் முதல் செப்பேட்டை அளித்த இராஜராஜன் காலம் வரை செய்த பணியைப் பாராட்டி இந்த வரிசைகள் அளிக்கப்பெற்றன. கொழுமம், கடத்தூர், குடிமங்கலம் (?) கரப்பாடி, பேரூர் ஆகிய ஊர்களில் கண்மாளர்க்கு அளித்த வரிசை பற்றிய கல்வெட்டுகள் பொறித்து வைக்கப் பெற்றன. இக்கல்வெட்டுகள் 'தென் கொங்கில் கண்மாளர்க்கு' என்று கூறும். ஆனால் வடகொங்கில் ஒவ்வொரு உட்கிடை நாட்டு (Micro region) கண்மாளர்க்கும் வரிசை அளித்த செய்தி கூறப்பெறுகின்றது. வெங்கால நாட்டுக் கண்மாளர், பூந்துறை நாட்டுக் கண்மாளர், காஞ்சிக்கூவல் நாட்டுக் கண்மாளர் என ஒவ்வொரு உட்கிடை நாட்டிலும் வாழும் கண்மாளர்களுக்கு வரிசை வழங்கிய செய்தி அளிக்கப்பெறுகின்றது. அதனால் தென் கொங்கில் உட் கிடை நாடுகள் ஏற்பட்ட நிலையிலும் மக்கள் கூட்டத்தை தென்கொங்கு முழுவதற்குமான குழுவாகக்

கொண்டுள்ளனர் எனலாம். தென் கொங்கு உட்கிடை நாடுகள் எழுச்சியும் அமைப்பும் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு வரை முழுமை பெறாததாக இருந்தது எனலாம்.

காணி ஆட்சி

இம்மாவட்டத்தில் கிடைக்கும் நூற்றுக்குமதிகமான கல்வெட்டுகளில் 'காணியுடைய சிவப்பிராமணன்' என்று கூறப் பெறுகின்றது. காணியாட்சி என்பதற்கு வழிவழி உரிமை என்று ஏ. அப்பாதுரை பொருள் கூறுவார். மற்றொரு சாரார் உழவுத் தொழில் செய்யும் உரிமை என்று பொருள் கூறுவர். எது எப்படி இருந்தபோதிலும் கொங்கு நாட்டில் காணியாட்சி என்பது ஒரு குறிப்பிட்ட தொழிலில் உள்ள வழிவழி உரிமை என்ற பொருளில் தான் வழங்கப்பெற்றது. காணி ஆட்சி உரிமையை அளிக்கும் அதிகாரம் அரசனிடம் இருந்துள்ளது. குறிப்பிட்ட தொழிலில் காணியாட்சி பெற விரும்புபவர் அரசன் கருவூலத்தில் காசு அளித்துப் பெற்றுக் கொண்டனர். அதற்குப் பல சான்றுகள் உள்ளன. சர்க்கார் பெரிய பாளையம் கல்வெட்டு ஒன்று அன்னூரைச் சேர்ந்த சிவப்பிராமணன் ஒருவன் அரசனிடம் முப்பதுகாசு கொடுத்து முகுந்தனூர் ஆளுடையார் கோயிலில் காணி தரவேண்டும் என்று கேட்கிறான். அரசன் காசினைப் பெற்றுக் கொண்டு காணி ஆட்சியை அளிக்கிறான். காணி ஆட்சி என்பது கோயில் பூசை உரிமை மட்டுமின்றி குறிப்பிட்ட கோயிலுக்குரிய தேவதான நிலங்களின் வருவாயிலும் அவனுக்கும் பங்கு உண்டு என்பது மற்றொரு கல்வெட்டால் விளங்கும். தான் பெற்ற கடனை திருப்பிச் செலுத்த வியலாத சிவப்பிராமணர்கள் காணியாட்சி உரிமையை விற்றுச் செலுத்தியுள்ளனர். பல்வேறு காரணங்களுக்காகவும் காணியாட்சியை விற்றுள்ளனர்.

மன்றாட்டு

மன்றாட்டு, மன்றாட்டுக்காணி, மன்றாட்டு நிலம், மன்றாட்டுத் தோட்டம், மன்றாட்டு பேறு எனப் பல சொற்கள் கோவை மாவட்டத்துக் கல்வெட்டுக்களில் கூறப்பெறுகின்றன. மன்றாட்டு தொடர்புடையதாக கொழுமம், கடத்தூர், சோழமாதேவி, பேரூர், அன்னூர், சேவூர், அவினாசி, திருமுருகன்பூண்டி ஆகிய ஊர்களில் இச்சொற்கள் பயின்று வருகின்றன.

மன்றாட்டு, விலை கொடுத்து வாங்கும் நிலையிலிருந்தது. மன்றாட்டினை வழங்கும் அதிகாரத்தினை அரசனே வைத்திருந்தான். அரசனுக்கு எதிராகச் செயல்பட்ட மன்றாடிகளின் மன்றாட்டினை அரசன் பறிமுதல் செய்துள்ளான். மன்றாட்டு சீவிதக்காணியிலிருந்து கோயிலுக்கு நிலக்கொடை அளித்த மன்றாடிகளும் உண்டு. மன்றாட்டு தேவதான ஊர்களில் இருந்துள்ளது. வணிகர் தங்குமிடமான தாவளத்திலும் மன்றாட்டு இருந்துள்ளது. மன்றாட்டு தென் கொங்குப் பகுதியிலும், வட கொங்கில் வடபரிசார நாட்டில் மட்டும் இருந்துள்ளது. வட பரிசார நாடு தென்கொங்கு வட கொங்கு ஆகிய இரு பகுதிகளின் கூறுகளையும் பெற்று விளங்கியது. அதனால் வடகொங்கில் அப்பகுதியில் மட்டும் மன்றாட்டு இருந்துள்ளது.

மன்றாட்டு என்பதற்கு நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பது என்று பொருள் கூறப்பெறுகின்றது. மற்றொரு சாரார் கோயில் நிருவாகத்தில் பங்கேற்பது என்று கூறுகின்றனர். ஆனால் கோவை மாவட்டத்துக் கல்வெட்டுகளில் இச்சொல் பயின்றுவரும் இடம் நோக்கி பொருள் கொண்டால் இவ்விரு பொருளிலிருந்து வேறு பொருளைக் கொள்ளும் படி அமைந்துள்ளது. இதற்கு திருமுருகன் பூண்டிக் கல்வெட்டு துணையாக நிற்கின்றது. அக்கல்வெட்டு வாசகம்:

> 'நம்பக்தன் ஆழ்வான் அண்ணாமலையானுக்கு நம் ஓலை குடுத்தபடியாவது உடையார் திருமுருகன் பூண்டி ஆளுடைய நாயானர் கோயிற் தானத்தாருடன் இக்கோயிலுங்கேட்டு ஊர்மன்றாட்டும் ஆள்வதாக இவனுக்கு நாம் மன்றாட்டுக் குடுக்கையில். . . . . நாங்குடுத்த தானத்தார் மன்றாட்டு ஒன்று இம்மன்றாட்டு ஒன்றும் முன்பு நடந்து போதும் தானத்தார் மன்றாட்டு ஐந்தும் ஆகத் தானத்தார் மன்றாட்டு ஆறு. . . . . மற்றும் எப்பேற்பட்ட சர்வ பிராப்திகளும் ஆறு மன்றாட்டிலே வகையிட்டு ஆறிலொன்று இவன் மக்கள் மக்கள் சந்திராதித்தவரை அனுபவித்து வருவதாகவும்.'

இக்கல்வெட்டு வாசகம் மன்றாட்டு என்று சொல்லை விளங்கிக் கொள்ள உதவும். ஏற்கெனவே உள்ள தானத்தார் மன்றாட்டு ஐந்து அண்ணாமலையானுக்கு அளிக்கப் பெறும் மன்றாட்டு ஒன்றையும் சேர்த்து தானத்தார் மன்றாட்டு ஆறாக அளிக்கப் பெறுகின்றது. ஊர் வருவாய் அனைத்தும் ஆறு கூறாகப் பிரித்து அவற்றில் ஒரு கூறினை அண்ணாமலையான் குடும்பத்திற்கு அளிக்க வேண்டும் என்று கூறுகின்றது. அதனால் மன்றாட்டு என்பது கால் நடை வளர்ப்பு சமூகத்திலிருந்து வந்த ஊர் வருவாயிலிருந்து உருவாக்கப்பட்ட பங்கு முறை யாகும். வேளாண்மை வளர்ந்து கால் நடைவளர்ப்பு பின்னுக்குத் தள்ளப் பட்டபின் அச்சொல் புதுப் பொருளைத் தந்தது எனலாம். கால்நடை வளர்ப்புச் சமுகத்தோடு தொடர்புடைய மன்றம் என்ற சொல்லிருந்து மன்றாட்டு வந்தது. மன்றாட்டை நிருவகிப்பவன் மன்றாடி எனப் பெற்றான்.

இடங்கைக் கல்வெட்டு

கோவை மாவட்டம் உடுமலை வட்டம் உருத்திராம்பாளையம் இடங்கை தொண்ணூற்றெட்டு சாதியார் பற்றிய கல்வெட்டு இத்தொகுப்பில் உள்ளது. அரசன் சதுர்வேதி மங்கலத்து நிருவாகத்தை இடங்கைச் சாதியார் பொறுப்பில் விடுகிறான். அவர்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின் அவர்கள் நிருவாகத்தன்மையை விளக்கிக் கல்வெட்டினைப் பொறித்துள்ளனர். 'இக்கல்வெட்டில் இச்சதுர்வேதிமங்கலமும் இதன் பிடாகைகளும் தாங்கள் நிருவகித்துக் கொள்ளவும் வரியினை தாங்களே வாங்கிக் கொள்ளவும் அரசன் ஆணை அளித்துள்ளான். அதனால் அந்த சதுர்வேதி மங்கலத்திலும் இதன் பிடாகைகளிலும் குற்றம் செய்பவர்களைப் பற்றி சபையாருடன் சேர்ந்து ஆராஞ்சு தீர்ப்பு சொல்லுவோம். கன்றுக்குக்குண்டை கட்டினாருண்டாகில்

பன்றியிலொன்றாகக் குத்தித் தூக்குவோம்' என்று இடங்கை சாதியார் உறுதி கூறுகின்றனர். மேலும் இவர்கள் தங்களால் தீர்க்க முடியாததை அரசனுக்கு விண்ணப்பம் செய்து தீர்த்து வைப்போம் என்று கூறுகின்றனர்.

இக்கல்வெட்டு தவிர மற்றொரு கல்வெட்டு இடங்கை சாதியர் பற்றிக் குறிப்பிடுகின்றது. அது விஜயமங்கலத்தில் சித்திரமேழி விண்ணநகரத்தில் பொறிக்கப்பெற்றுள்ளது. கொங்கு நாட்டில் வலங்கை பற்றிய கல்வெட்டு ஏதும் கிடைக்க வில்லை.

கல்வெட்டில் கட்டடக்கலை, சிற்பங்கள், செப்புத் திருமேனிகள்

கோவை மாவட்ட கல்வெட்டுகளில் கட்டடம் பற்றியும், கட்டட உறுப்புகள் பற்றியும் செய்திகள் குறிக்கப்பெறுகின்றன. மேலும் சிற்பங்கள், செப்புத் திருமேனிகள் பற்றிய செய்திகளும் உள்ளன. சேவூர்க்கல்வெட்டில் பாண்டி நாட்டு வியாபாரி ஒருவன் சுப்ரமணிய பிள்ளையார் கோயிலைக் கட்டியுள்ளான். அக்கோயில் முழுமையும் இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருகின்றது. கல்வெட்டு கி.பி. 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

அவினாசிக் கல்வெட்டில் விஸ்வேசுவரர் சிற்பத்தைச் செய்தளித்த செய்தி கூறப்பெறுகின்றது. சேவூர்க் கல்வெட்டு அழகிய மணவாளர், திருமகள், பூமகள் ஆகியோர் செப்புத் திருமேனிகளைச் செய்தளித்தமைபற்றிக் கூறுகின்றது. பெற்ற நாச்சியார் (செப்புதிருமனி?) சிற்பத்தை செய்தளித்தமை பற்றி ஆனைமலைக் கல்வெட்டுக் கூறுகின்றது. அவினாசியில் கி.பி. 13-14 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த மாணிக்க வாசகர் செப்புத் திருமேனி ஒன்றுள்ளது. அத்திருமேனியின் பீடத்தில் நந்தி நாகரி பொறிப்பு ஒன்றும் உள்ளது.

கி.பி. 13 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் சந்திரசேகரர், திரிபுராந்தகர், சுந்தரர், பரவைநாச்சியார், க்ஷேத்திர பாலப் பிள்ளையார் ஆகிய செப்புத் திருமேனிகள் செய்து வைத்தமை பற்றிக் கூறுகின்றன.

மடம்

கோவை மாவட்டத்தில் இருப்பதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகளில் மடம், மடவிளாகம் குறிக்கப் பெறுகின்றது. மடத்திலும், மடவிளாகத்திலும் தபசியர், தேசாந்திரிகள், பரதேசிகள், கைக்கோளர் (படைவீரர்) ஆகியோர் தங்கியிருந்தனர். உருத்திர கணிகையர் இருந்தமை பற்றி சில கல்வெட்டுகள் கூறும். கோவை மாவட்டம் அன்னூரில் திருஞான சம்பந்தர் மடம் என்ற பெயரில் ஒருமடம் இருந்துள்ளது. கொழுமத்தில் திருத்தொண்டத் தொகையான் மடம் என்ற பெயரில் ஒருமடம் இருந்துள்ளது. காலப்போக்கில் மடம் கோயில் நிருவாகத்தில் அதிகாரம் பெற்றது.

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 775 /2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	4
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1152
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டுஅறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு		
மன்னன்	:	முதல் குலோத்துங்கன்	எண்	:	1

இடம்: கருணாம்பிகை கோயில் வடக்குச்சுவர் மடிப்பில் உள்ள கல்வெட்டு

குறிப்புரை: வடபரிசாரநாட்டு ஆலத்தூரை அவினாசி ஈஸ்வரன் கோயிலுக்குத் தேவதானமாக அளித்தமை பற்றி இக்கல்வெட்டு கூறுகின்றது. ஆலத்தூர்க்கு நிலைமை அழகிய சோழ நல்லூர் என்று பெயரிடப்பட்டுள்ளது. வளஞ்சியன் பள்ளம் என்ற பெயர் இவ்வூரில் வளஞ்சியர் பெருமை பெற்றிருந்தனர் என்பதைச் சுட்டுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்
2. மை கொண்டான் குலோத்துங்க சோழதேவ
3. னேன் நமக்குச் செல்லாநின்ற யாண்டு நாலாவது தை மாதம்
4. வட பரிசார நாட்டு உடையார் அவினாசி ஆளுடைய நாயனாற்கு நாம்
5. குடுத்த ஊராவது இந்நாட்டு ஆலத்தூரான நிலைமை அழகியசோ
6. ழ நல்லூர் இன் நாயனாற்கு நாம் குடுக்கையில் இ
7. வூரால் வரும் நத்தவரி மன்றுபாடு தெண்டக்குற்றம்
8. மற்றும் எப்பெற்பட்ட இறை புரவு சிற்றாயம் உள்ள
9. து இன் நாயனாற்கு அமுதுபடி சாத்துப்படி திருப்ப
10. ணிக்குக் குடுக்கையில் இ[வ்]வூற்கு எல்லையாவது கீ
11. ழ்பாற்கெல்லை கீளாநாலிக்கு மேற்கும் மேல்பா

12. ற் கெல்லை மூழ்கு சுனைப்பாழிப் பள்ளத்துக்குக் கிழக்கும்
தென்[பா]
13. ற் கெல்லை வளஞ்சியன் பள்ளத்துக்கு வடக்கும் வட பாற் [கெல்லை]
14. கோழிப்பாழி ஒழுகறை ஒரு கல்லுக்குத் தெற்கும் இன்னா [ன்கெ]
15. ல்லைக் குட்பட்ட நன்செய் புன்செய் மேனோக்கிய மரமும் கீழ்
16. நோக்கிய கிணறு தட்டங் கோற்குத் தொழியாமல் இன் நாயனாற்கு
17. [த]ாரை வா[ர்]த்துக் குடுத்தேன் இப்படி
18. . . . ாநன் தனாப்பெற
19. . . . யாண்டு நாலாவது நாள் ாஅயச இப்படிக்கு . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 776 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	12
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1160
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	2
மன்னன்	:	முதல் குலோத்துங்கன்			

இடம்: அவிநாசியப்பர் கோயில் கருவறை வடக்குச் சுவர் குமுதவரியில் தீர்த்த குழிக்கு மேற்கில் உள்ள கல்வெட்டு.

குறிப்புரை: அவினாசி ஈஸ்வரன் கோயில் அர்த்தசாம பூசைக்கு பாலமுது அளிக்கவும் விளக்கு ஒன்று வைக்கவும் அரசனே முப்பது பசுக்களை அளித்துள்ளான். கொங்குநாட்டில் கோயிலுக்கு அரசனால் பசுக்கள் அளிக்கப் பெற்றமைப் பற்றிக் கூறும் கல்வெட்டு இது ஒன்றே ஆகும். சாமம் என்பது 'யாமம் என்று கூறப் பெறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவனேந் எமக்குச் செல்லாநின்ற யாண்டு ப
2. ந்நிரண்டாவது அவிநாசியாளுடையாற்கு திருவத்தயாமத்துக்கு பாலமுது...
3. ரிசி பெரிய சீகாழியாந் வசம் நாங் குடுத்த பசு முப்பதுங் கைக் கொண்டோம்
4. நாளொன்றுக்கு பரகேசரி அறு நாழி பாலமுதும் திருநந்தா விளக்கு ஒன்றும்.....[1]

---

1 கல்வெட்டு தரையில் மறைந்துள்ளது.

த.நா.அ. தொல்லியல்துறை **தொடர் எண்: 777 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	11 + 1
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1160
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	3
மன்னன்	:	முதல் குலோத்துங்கன்			

இடம்: கருணாம்பிகைக் கோயில் மகாமண்டபத் தெற்குச் சுவர்

குறிப்புரை: அவிநாசி அம்மன் கோயிலுக்கு வரியாக வரும் கம்பினை கொடையளித்துள்ளனர். இது ஒரு குடி (House hold) அளித்த வரி ஆகும். வட பரிசார நாட்டு ஊர்களில் வெள்ளானூர், பூலுவனூர் என்ற ஊர் அளவில் சபைகள் இருந்தன. கம்பு என்பது கண்பு என்று உள்ளது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்தி ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லி
2. யாண்டு பதினொன்றாவதுக்கு எதிராவது வடபரிசார நாட்டு வெள்ளானூரோம் ஆளுடையார் அவிநாசியாளுடையார்
3. திருக்காமகோட்டத்து நாச்சியார் பெருங்கருணைச் செல்வியார்க்கு நாங்கள் அமைஞ்சு குடுத்தபடியாவது ஒரு குடிக்காணம் குறுணி
4. நானாழி கண்பு ஆண்டு வரை தோறும் குடுத்து வருவோமாகவும் இதுசந்திராதித்தவரை ஆண்டார் மஹா தேவாண்டார் செய்ய . . . [1]

---

1 தொடர்ச்சி தரையில் மறைந்துள்ளது.

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	15
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1222
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	4
மன்னன்	:	வீரராசேந்திரன்			

இடம்: கருணாம்பிகை கோயில் அர்த்தமண்டப வடக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை: அரசன் வட பரிசார நாட்டுப் பார்ப்பார் சான்றார்க்கு வரிசைகள் அளித்தமை பற்றிக் கூறுகின்றது. இந்த வரிசைகள் கருவூலத்தில் பொன் வைத்த பின்பே அளிக்கப் பெற்றுள்ளன. பல வரிசைகள் மற்ற சாதியார்களுக்கு அளிக்கப் பெற்றிருந்த போதிலும் சீனக்குடை (பட்டுக்குடை) பிடித்துக் கொள்ள உரிமை அளித்தது குறிப்பிடத்தக்கது. மேலும் தழைக்குடை என்று கூறுவது கேரளத்தில் நம்பூதிரி பிராமணர்கள் இன்று வரை பிடித்துவரும் பனையோலைக் குடையாகலாம்.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநசக்கரவர்த்தி கோநேரிந்மை கொண்
2. டாந் வட பரிசாரநாட்டிற் பாப்பார் சாந்றாற்கு நம் மோலை குடு
3. த்த படியாவது இவர்கள் நம் சரக்குக்குப் பொருள் வைத்தமை
4. யில் இவர்களுக்கு நாம் குடுத்த வரிசையாவது மேலே
5. ற்றமுந் துலாகமுங் கீழேற்றங் குதிரையுந் தழையுஞ்
6. சீனக்குடையுஞ் சேகண்டியும் பெற்று வருவார்களாக
7. வும் மைச்சுக்கு சாந்திடப் பெறுவார்களாகவும் இரட்டை
8. த்தலைக் கடைக்குக் கோற் கட்டிக் கொள்ளப் பெறுவார்
9. களாகவும் படைக்கணிக்கு ஆரம் பூணப் பெறுவார்களாகவு

10. ம் பச்சைப் பிடாம் போர்க்கப் பெறுவார்களாகவும் தங்
11. கள் மக்களுக்குப் பொந்நிந் காறைக் கட்டப் பெறுவார்கள
12. ாகவும் கல்லியாணத்துக்கு கட்டணங்கட்டி யேறி ஊர்
13. சூழப் பெறுவார்களாகவும் இவ்வரிசைகள் இவர்கள் மக்கள்
14. மக்களுக்கு சந்திராத்தவரை செல்வதாகவும் இப்படி ெ
15. சம்பிலுஞ் சிலையிலும் வெட்டிக் கொள்ளப் பெறுவார் கள
16. ாகவும் நம் மோலை குடுத்தோம் இவை எல்லாம் வல்ல சோ
17. ழ மூவேந்த வேளாந் எழுத்து யாண்டு பதிநஞ்சாவது
18. நாள் முந்நூற்றிருபத்திரண்டிநால் இப்படிக்கு வாண
19. ராய தேவந் எழுத்து

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 779 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	16
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1223
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	5
மன்னன்	:	வீரராசேந்திரன்			

இடம்: கருணாம்பிகைக் கோயில் வடக்குச் சுவர் குமுதவரி

குறிப்புரை: பெருங்கருணை செல்விக்கு அமுது படி வழிபாடு செய்ய கொழிஞ்சிப்பாடியில் குலோத்துங்க சோழ மன்னறையில் நிலக்கொடை அளிக்கப் பெற்றுள்ளது. மந்நறை என்பது வளம் மிக்க நிலம் உள்ள பகுதி.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்தி ஸ்ரீ ஸ்ரீ வீரராஜேந்திர தேவற்கு யாண்டு பதினைஞ்சாவதற் கெதிராவது பொங்கலூர்கா நாட்டுக் காநூர் முதலிகளில் அட்டாலைச் சேவகந் வளத்து வாழ்வித்தா நாந வீரராசேந்திர இருங்கோ
2. ளநாந வீரராசேந்திர இருங்கோளர் மனைக்கிழத்தி சடைமேலிருந்தாளும் இவ்விருவோம் ஆளுடையாரவிநாசி யாண்டார் பெருங் கருணாலயச் செல்வி
3. அமுதுபடிப் புறமாவது கொழுஞ்சிபாடியாந உடையபிராட்டிச் சதுர் வேதிமங்கலத்து ஊர்கு தெற்கு குலோத்துங்க சோழ மந்நறையில் எங்கள் ஊராண்மைக் காணி நிலத்தில் பிரா
4. . . . வக்கில் கதவல் மடையிலே ஒருமாச் செய்

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 780 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1207 - 56
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	6
மன்னன்	:	வீரராசேந்திரன்			

இடம்: அவிநாசிலிங்கேஸ்வரர் கோயில் மகாமண்டப மேற்குச் சுவர் சண்டேசுரரர் கோயில் கிழக்கில் உள்ளது.

குறிப்புரை: அவிநாசி ஈசுவரன் கோயில் திருக்காமக் கோட்ட நாச்சியார்க்கு அரசி மாதேவி சிலம்பாழ்வி கொடை அளித்துள்ளாள். இக்கொடை அம்மன் விழாவிற்கு அளிக்கப் பெற்றது.

கல்வெட்டு:

1. ஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு . . . காவது
2. ஆநி மாதத்து அவிநாசி யாளுடையார் திருக்காம கோட்
3. ட நாச்சியார் பெருங்கருணைச் செல்வி [யார்க்கு]. . . [பிரா]ட்டி
4. மாதேவி சிலம்பாழ்வியேந் எங்கள். . . கா . . . ா
5. கத்தாலே எழுந்தருளுவிச்சு இவற்கு அமுது [படி ஒன்]
6. றுக்கு இருநாழியும் திருமுன்னொடுக்கிக் கு [டுத்த அரி]சி நாழி யரிசியு
7. ம் ஆக அரிசி முந்நாழி உரிக்கு ஒரு. . . விஞ்சநமுட்பட . . .

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 781 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	40
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1247
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	7
மன்னன்	:	வீரராசேந்திரன்			

இடம்: கருணாம்பிகைக் கோயில் மகா மண்டபம் வடக்கு உபபீடம்

குறிப்புரை: இக்கல்வெட்டு அந்நாளைய கோயில் நிருவாகத்தை அறிந்து கொள்ள பல செய்திகளைக் கொண்டுள்ளது. சிவப்பிராமணர்கள் கோயில் கொடைகளைப் பெற்று நடத்துவதிலும், கோயில் கருவூலத்தைப் பாதுகாக்கும் பொறுப்பைப் பெற்றிருந்ததிலும் ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் பணியில் ஏற்பட்ட குறையைத் தங்கள் காணியுரிமையை (பூசையுரிமை) விற்றுச் சரிசெய்தார்கள்.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவணச் சக்கர வர்த்திகள் கோநேரின்மை கொண்டாந் ஆளுடையார் அவிநாசி ஆளுடையார் கோயில் தேவகந்மிகளுக்கு ஓலை குடுத்தபடியாவது இக்கோயிற் காணியுடைய சிவப்பிராமணர் காசிவ கோத்ரத்து அவிநாசி அவிநாசியாந் சீகாழியாநும் அ

2. விநாசி சாந்தாரைக் காப்பாநும் இவர்கள் பாட்டமாரும் தமப்பநும் இவர்கள் தாங்களும் இக்கோயிலில் உபையம் உள்ளிட்டவை செலுத்த மாட்டாமையால் பண்டாரத்துக் கெட்ட திருவாபரணங்களில் பொந்நும் அச்சும் இறுக்க மாட்டாமையாலும் பிந்பு இவர்கள் இந்நா

3. யநார் பண்டாரத்திலே சிறிது அச்சு வாங்குகையாலும் இவையிற்[றா]ல் வந்த முதல் இவர்கள் குடுக்க மாட்டாமை

தண்டேசுரப் பெருவிலையாக இவர்கள் காணியுள்ளது அறவிலையாக எழுதிக் குடுத்தமையில் இவர்கள் இப்படி செய்கையால் காணியற விட்டமையில் இக் கோயிலுக்குக் கா

4. ணியாளரை வேறேயிட்டுக் கொண்டு காணியாளரை வேறேயிட்டுக் கொண்டமைக்கு இப்படி செம்பிலுஞ் சிலையிலும் வெட்டிக் கொள்வாராக நம் ஓலை குடுத்தோம் இவை எல்லாம்வல்லசோழ மூவேந்தவேளாநெழுத்து யாண்டு சய வது நாள் ௩ாக இவை விசையசிங்க

5. தேவந் எழுத்து இவை தியாகவிநோத தேவந் எழுத்து இவை காடுவெட்டி எழுத்து இவை வாணவராயன் எழுத்து இவை விலாட சிங்கதேவந் எழுத்து.

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 782 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	42
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1249
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச் சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	8
மன்னன்	:	வீரராசேந்திரன்			

இடம்: பள்ளியறை கிழக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை: உத்தம சோழ சதுர்வேதி மங்கலத்து உத்தம சோழீசுரத்து காணியுடைய சிவப்பிராமணன் அவினாசிஈசுரர் கோயிலுக்குக் காசு கொடையளித்துள்ளான்.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்திர தேவற்கு யாண்டு சயஉ வது வீரசோழ
2. வளநாட்டு வயிரம்பள்ளியான உத்தம சோழச் சதுர்வேதிமங்க
3. லத்து உத்தம சோழீஸ்வரமுடையார் கோயில் காணியுடைய
4. சிவபிராமணந் சாலங்காய கோத்திரத்து உடையான் முதலியா
5. ன சைவ புரந்தரச் சக்கரவர்த்தியேந் அவிநாசியாளுடை[யா]
6. ற்கு னாந் வைத்த சந்தியாதீபம் ஒன்றுக்கு ஒடுக்கின பழஞ் சலாகை
7. அச்சு ஒன்று . . .
8. ரை செல்வதாக இது பன்மாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 783 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	_
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	சகம் 1272 கி.பி. 1350
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	_
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	_
அரசு	:	_	ஊர்க் கல்வெட்டு எண்	:	9
மன்னன்	:	_			

இடம்: பெருங்கருணாம்பிகை கோயில் மகாமண்டப வடக்குச் சுவரில் உள்ளது.

குறிப்புரை: இக்கல்வெட்டு நிலம், நீர்ப்பாசனம், சுற்றுச் சூழல் ஆகியவற்றை அறிந்து கொள்ள பல செய்திகளைக் கொண்டுள்ளது. சோழமண்டலத்து ஸ்ரீ வீரநாராயண சதுர்வேதிமங்கலத்து ஸ்ரீ கற்பகச்சேரியைச் சேர்ந்த சிரிரங்கநாதபட்டன் என்பவன்அவினாசி ஈசுவரன் கோயிலில் சிறுகாலை சந்தி (வைகறை)க்கு நிலக்கொடை அளித்துள்ளான். நிலம் கரைவழிநாடு, பேரூர் நாடு ஆகிய பகுதிகளில் இருந்த தன்னுடைய சொந்த நிலங்களிலிருந்து தரப்பெற்றுள்ளது. எல்லை கூறும்போது தோட்டம், கவரு (கவறு) செவ்வை ஆகிய சொற்கள் அடிக்கடி பயன்படுத்தப் பெற்றுள்ளன. கவரு என்பது கண்ணாறு என்று கொள்ளலாம் . செவ்வை, நீர் செல்லும் சிறு கால்வாய் ஆகலாம்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ சகாத்தம் சூஉாஎயஉ மேல் செல்லாநின்ற . . . விரோதி[ஸம் வத்ஸரத்து] கற்கடக நாயிற்று வ॰வவக்ஷத்து திதியும் நாயற்றுக் கிழமையும் பெற்ற மூலத்து நாள் கொங்குமண்டலத்து வடபரிசார நாட்டு உடையார் அவிநாசி ஆளுடைய நாய [னார்] க்கு சோழமண்ட . . .

2. ட்டுத் தனியூர் ஸ்ரீ வீரநாராயணச் சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீ கற்பகச்சேரிக் குண்டூர் சீரங்க நாதபட்டன். ..கன.... தவிபட்டனான நாயனேன் இன்னாயனார்க்கு குண்டூரான் சந்தி என்று நான் கட்டிய சிறு காலைச் சந்தியில் இடைத் தூபத்தில் கட்டின சந்திக்கு அமுது செ[ய்ய]

3. அரிசி... பருப்பு உ நாழி கறியமுது பலம் ரு உப்பு அமுது ஆழாக்கு மிளகு அமுது உயரு செவிடு நெய் அமுது ரு இலை ஆழாக்கு தயிர் அமுது அடைக்காய் அமுது ரு இலை அமுது ௬ய ஆக ஆண்டுக்கு நாள் ௩ாசுயரு அரிசிக்கு உருப்படி இந்த வகைப்படி விஞ்சனத்துக்கு விலைபடியும் நிரவி . . .

4. ங்க கடா . . . களலுக்குறும் மான்யமாகக் கொண்டுடையேனாய் அனுபவித்துப் போந்த . . . ங்கரயக . . . ஒரு பூ நிலத்தில் விட்ட நிலமாவது கரைவழிநாட்டு திருவாலந்துறையான விக்கிரம சோழச் சதுர்வேதி மங்கலத்து உ

5. ட்கிடை . . . நிலத்தில் விட்ட நிலத்துக்கு எல்லையாவது சோழ நாகன் பற்று கீழ்பாற்கெல்லை ஏழூர் . . . க்கு . . . ட்ட பாய்கிற வடக்கோடிய உட்ச்சிறு கவறு செவ்வைக்கு மேற்கும் தென்பாற்கெல்லை கிழக்கோடிய காணிக் கவறுச் செவ்வைக்கு வடக்கும் மேற்பாற்கெல்லை

6. வாச்செவ்வைக்கு கிழக்கும் வடபாற்கெல்லை ஏழூர் ஊர் குடுத்த நிலத்துக்கு தெற்கும் இந்தப் பெருநான் கெல்லைக்குட்பட்ட . . . கறக்கு ஒருங் . . . வ்வுட்பட்ட தடி பலவினால் நெல்விதை எ கலம் . . .

7. று பொன் நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை தோட்ட கவறுக்கு மேற்கும் தென்பாற்கெல்லை ஏழூர் ஊர் நிலத்துக்கு [வடக்]கும் மேற்கெல்லை இந்த ஸபைப் பற்று நிலத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லை அழகிய திருச் சிற்றம்பல முடையார் தேவதான

8. தா[ர்] க்கு விட்ட நிலத்துக்கு தெற்கும் ஆக இந்நான்கெல்லைக்கு உட்பட்ட தடி உ ல் நெல்விதை முந்திரியினால் நிலம் 6 மா ஆக நிலம் அ மாவும் பேரூர் நாட்டுக் குலசேகரநல்லூரில் நான் விட்ட நிலம் ஆவது அத்தியன் பட்டகள் நிலத்துக்கு கீழைவயலிலே வி[ட்டநிலத்துக்கு]

9. கீழ்பாற்கெல்லை தோட்டக் கவறு [க்]கு மேற்கும் தென்பாற்கெல்லை உடையார் திருவான்பட்டி ஆளுடைய நாயனார் தேவதானம் சபைப் பற்றுக்கு வடக்கும் மேற்பார்கெல்லை அத்தியன் பட்டகள் நிலம் அழ

10. கிய திருச்சிற்றம்பலமுடையார் தேவதானத்துக்கு தெற்கும் ஆக இந்நான்கெல்லைக்குட்பட்ட தடி நாலினால் விதை உா கும் உட்பட்ட நிலமாவது கீழ்பாற்கெல்லை இவ்வூரவர் நிலத்துக்கு மேற்கு தென்பாற்கெல்லை தோட்ட கவறுக்கு வடக்கு . . .

11. ம் வட பாற்கெல்லை குலசேகர நல்லூர் ஊரவற்கு நீங்கின எல்லை வரம்புக்குக் கிழக்கும் தெற்கும் உட்பட்ட தடி இரண்டினால் நிலம் ரூய மாஆக நிலம் உா மாவும் வட பரிசாரநாட்டுப் புக்கொளியூர்க் குள வயலில் என் இறையிலி . . .

12. நிலம் ரூா மா ஆக நிலம் இன்னிலம் அரைக் காணியும் நான் கட்டின குண்டூரான் சந்திக்கு வைத்த . . . க்கு உாஅயசூ மா புக்கொளியூர் குளவயல் நிலம் ய மா[வு]க்கு அளக்கும் நெல் சூய . . .

13. தான் வேண்டிய பயிர் செய்து பண்டாரத்தில் ஆண்டு ஒன்றுக்கு மாத்தாய் உயசூ . . . இறுக்கு அளவு ஆக உதகம் பண்ணிக் குடுத்தேன் குண்டூர் நாயனேன் இந்நிலம் ஒன்பது மா அரைகாணியு முதலைக்குளத்திலே முதலைவாய்ப் பிள்ளைக்கு . . .

14. டி அளந்த நெல்லு திருமலையிலே கல்வெட்டியபடி தேவதானத்தில் எருத்திலே ஸ்ரீ பண்டாரத்தார் எடுத்துக் கொள்ளக் கடவார்களாகவும் இப்படிக்கு செம்பிலுந் சிலையிலும் வெட்டிக் கொண்டு சந்திராதித்தவரையும் செல்வதாகவும் இப்படிக்குக் குடுவை குண்டூர் ஸ்ரீரங்க நாதபட்டன் . . .

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 784 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	12
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1267
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	10
மன்னன்	:	மூண்றாம் விக்கிரம சோழன்			

இடம்: அர்த்த மண்டப வடக்குச் சுவர்

குறிப்புரை: வடபரிசார நாட்டு ஆலத்தூரில் உள்ள பூலுவ மரபினைச் சேர்ந்த குடிகள் தாங்கள் செலுத்த வேண்டிய வரியை அவினாசி கோயிலுக்கு அளிக்கும்படி பூலுவநாட்டார் சபை ஒப்புக் கொண்டு கல்வெட்டிக் கொடுத்துள்ளது.

கல்வெட்டு:

1. கோப்பரகேசரி பன்மரான திரிபுவனசக்கர வர்த்தி விக்கிரம சோ
2. ழ தேவற்கு திருவெழுத்திட்டுச் செல்லானின்ற திரு நல்லியாண்டு ௰உ வ
3. து வடபரிசாரநாட்டில் பூலுவநாட்டோ[ம்] திருவேகம்பமுடையாரான
4. மாதேவராண்டாற்கு அமைஞ்சு குடுத்த பரிசாவது ஆலத்தூரில் பூலுவ குடிக்கு நாட்
5. டில் வரிப்பெருமாள் மேடு வேண்டுகோள் சாமந்த பேரெடு கொண்டு எங்கள் நாட்டைத் தெடு பெ

6. று . . . குடிவிழுக்காடும் தேவர் பாண்டாரத்துக்கு நாங்கள் புடவை முதந்து அம்மைஞ்சு

7. குடுத்தோம் பூலுவ நாட்டோம் . . .

8. ச்சு போதுவார் இது செம்பிலும் சிலையிலும்

9. விலங்கல் சொல்லும் ஒருவன்அல்லுறுவதாகவும்

10. அவன் வழி [ஏழெச்ச] மறுவான்

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 785 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	22
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14 ஆம் நூ.ஆ.
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	
அரசு	:	கொங்குப்பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	11
மன்னன்	:	சுந்தரபாண்டியன்			

இடம்: கல்யாண மண்டபம் தெற்குக் குமுதம்

குறிப்புரை: கல்வெட்டு முக்கிய இடங்களில் சிதைந்துள்ளது. வணிக மரபினைச் சேர்ந்த ஆதித்தன் ஒருசந்தி விளக்கு எரிக்க பத்து பணம் கொடையாக அளித்துள்ளான். வணிக வீரர்கள் தங்கியிருக்கும் அடிக்கீழ்தளம் குறிக்கப் பெறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சட பந்மரான [திரிபுவனச் சக்கரவர்த்தி]கள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு
2. யாண்டு உயஉ வது புரட்டாசி மாதம் உயஎ தியதி செ . . . னிகரை இராசரி . . . ரவளநாட்டு . . . ந்தது . . . மாகாபா . . . ர்பா [அடி]
3. க்கீழ் தளத்துழான் தேவன் உடையான் வணிகராதித்தனேன் உடையார் அவிநாசி ஆளுடைய நாயனார்க்கு
4. தீபவிளக்கு ஒன்றுக்கு இ[ற்]றை நாளில் ஸ்ரீபண்டாரத்துக்கு ஒடுக்கின பணம் பத்துக்கு இந்த சந்தியா தீபம் . . .

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 786 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	27
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1345
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குப்பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	12
மன்னன்	:	சுந்தர பாண்டியன்			

இடம்: நுழைவாயிலில் விநாயகர் கோயில் மண்டபத் தூண்.

குறிப்புரை: பாண்டி மண்டலத்து திருக்கானப்பேற்றில் வாழ்ந்த காளையப்பெருமாள் அதளையூர் நாடாழ்வான் அவினாசி ஈசுவரன் கோயிலுக்கு விளக்கெரிக்க காசுக் கொடை அளித்துள்ளான். கானப்பேற்றிற்கு காளையார் கோயில் என்ற பெயர் ஏற்பட்ட காலத்தை இக்கல்வெட்டு சுட்டுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ சுன்திர பாண்டிய தேவற்கு யாண்டு உ௰எ வது பாண்டிமண்
2. டலத்து திருக்கானப்பேற்றில் காளைய் [ப்] பெருமாளான அதளையூர் நாடாழ்வா
3. னேன் அவினாசி ஆள்உடையாற்க்குச் சந்தியாதீபம் திருவிளக்கொன்றுக்கு ஒடுக்கினப
4. ணம் உ . . . ம் சந்தியா . . . தல் விளக்கு ஒன்று எரிவதாக இ . . .

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	28
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1346
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குப்பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	13
மன்னன்	:	சுந்தர பாண்டியன்			

இடம்: கல்யாண மண்டபம் தூணில் உள்ள கல்வெட்டு

குறிப்புரை: இக்கோயில் திருமடை விளாகத்திலிருக்கும் தபசியர்களில் முத்தின் சிவிகை பெற்றான் சண்டேசுர நாயனாரை எழுந்தருளப் பண்ணினார். சோபானம், உபானம் போன்றவற்றிற்குத் திருப்பணி செய்தார். வீரபாண்டியன் திருவோலக்க மண்டபம் குறிப்பிடப்படுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடப்பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவற்கு
2. யாண்டு உ௰அ வது அவினாசியாளுடைய நாயினார் கோயில்
3. திருமடை விளாகத்து கும்பிட்டிருக்கும் தவசியரில் முதலி முதலியான முத்தின் சிவிகை பெற்றானேன் திருநடை மாளிகையில்
4. சண்டெஶ்வர நாயினார் ஏறியருளப் பண்ணினேநும் இரண்டாம் பிரகாரத்து வீரபாண்டியன் திருவேலாக்க மண்டபத்து தேவர் ஸ்ரீனில சோபானம் உபானம் துடங்கி
5. பாலறுதியாக உள்ளதில் திருப்பணி செய்வித்தேன் முதலி முத்தின்சிவிகை பெற்றானேன் இது என் தன்மம் பன்மாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 788 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	19
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 127 4
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குப்பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	14
மன்னன்	:	வீரபாண்டியன்			

இடம்: கருணாம்பிகை கோயில் மகாமண்டப வடக்குச் சுவர்.

குறிப்புரை: மலைமண்டலத்து (கேரளம்) வாலி சேரியைச் சேர்ந்த சேவேரக்கோட்டு இராமன் சங்கரன் அவினாசி ஈஸ்வரன் கோயிலில் விளக்கெரிக்க 100 பணம் கொடையாக அளித்தான் . விளக்கெரிக்கும் பொறுப்பினை மாகேஸ்வரர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு பத்தொன்பது அற்பசி மாதம் மலைமண்டலத்
2. து வாலிசேரியிலிருக்கும் செவ்வெரக் கோட்டு இராமன் சங்கரனேன் உடையார் அவிநாசி யா
3. ஞுடைய நாயநானாற்கு நான் வைத்த திருநந்தா விளக்கு ஒன்றுக்கு ஸ்ரீ பண்டாரத்தில் ஒடுக்கி
4. ன பணம் நூறு இப்பணம் நூறும் ஸ்ரீபண்டாரத்திலே கைக்கொண்டு சந்திராதி வரையா
5. க இந்நாயனார் திருமுன்பே எரித்தும் போதுவதாக இது பன்மாஹேஸ்வர ரக்ஷை.

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 789 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	27
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1292
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	—
அரசு	:	கொங்குப்பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	15
மன்னன்	:	வீரபாண்டியன்			

இடம்: கருணாம்பிகை கோயில் வடக்கு ஜெகதி வரியில் உள்ளது.

குறிப்புரை: வேணாடுடையார் அவினாசி ஈஸ்வரன் கோயிலில் எழுந்தருளுவித்த விஸ்வேஸ்வர தேவர்க்கு கரைவழி நாட்டுப் புத்தேற்றூர் வரிகளைக் கொடையாக ஊராரும் ஊராளிகளும் அளித்துள்ளனர். இக்கொடை அரசன் ஆணைப்படி அளிக்கப் பெற்றுள்ளது.

கல்வெட்டு:

1. . . . பாண்டிய தேவற்கு உ௰௭ வது உடையார் அவினாசி ஆளுடைய நாயனார் சீபண்டாரத்தாற்கு இன்நாயனார் தேவதானமாக கரை வழிநாட்டு புத்தெற்றூரான அ
2. . . .லே உடையார் வேணாடுடையார் எழுந்தருளுவித்த நாயனார் விஸ்வேஶ்வர தேவற்கு தேவதானமாக எங்களூரில் திருமுகப்படி திருத்திக் கார் ஒரு பூவாகப் பயிர் செய்த நி[லம்]
3. . . . கோலாலே அளந்து கண்ட நிலத்துக்கு எண்கலமாக வந்த நெல்லும் அச்சுவற்கத்து தந்த வரி எலவை திருமுன் காட்சி கொண்டது முதல் குற்றதெண்டம் காற்
4. . . . வற்கத்துக்கும் கலத்துக்குப் பத்தரையாக வந்த பணமும் உடையார் அவிநாசியாளுடையார் கோயிற் கணக்கர் எழுதிந [தர]விந்படிக்கு இவ்வாண்டு முதல் ஆண்டு தோறு
5. . . . ஊரும் ஊராளிகளோம் இது பன்மாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 790 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13 ஆம் நூ.ஆ.
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	-
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
அரசு	:	கொங்குப்பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	16
மன்னன்	:	-			

இடம்: கருணாம்பிகைக் கோயில் மகாமண்டம் வடக்குச் சுவர்.

குறிப்புரை: குண்டூர் நாயன் சீரங்கநாத பட்டன் என்பவன் தான் வைத்த குண்டூரான் சந்தி அழுதுபடி செய்யும்போது பன்மாகேஸ்வரர்களுக்கு சோறு அளிக்க ஏற்பாடு செய்தமை பற்றி இக்கல்வெட்டு கூறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ ச[illegible]ஸ்வரு ஓலை சாகரஞ் சூழ் வையகத்து கண்டீஸ்வரு கருமமாராய்க பண்டே அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம் திறம்பாமல் சென்னிமேல் வைத்து.

2. சூஷெஸ்ஷ நம் ஹமதன் குண்டூர் நாயனுக்கு நம் ஓலைகுடுத்த படியாவது உடையார் அவினாசி ஆளுடைய நாயனாற்கு விரோதி சம்வத்சரத்து [illegible] வக்ஷத்து

3. மூலத்துநாள் குண்டூரான் சந்தி என்று சிறுகாலைச்சந்தி இடையபத்தில் தான் கட்டின ஸந்தியில் அமுது செய்தருளின பிரசாதத்தினால் சோறு பதக்குப் பெற்று போமகனுக்குத் திருமுன் ஓடும்

4. இரு நாழி உரி கடவ[தாக] பன்மஹேஸ்வரரர் பேர் ஏழுக்குச் சோறுஅ... மாஹெஶ்வரரர் பேர்மூன்றுக்கு பேர் ஒன்றுக்கு சோறு நாழி உரி ஆக நா... ஆகச் சோறு உ பதக்கும் தவ

5. . . . ச் சந்திக்கு ஆண்டு ஒன்றுக்கு நெல்லு நூற்று ஐம்பத்திரு கலனேக . . . ளந்து போதக் கடவார்களாகவும் இப்படி செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்ளவும்

6. இதற்கு சில[வு] இரண்டு படி அரிசி ப . . . கையிலே ஷுதிதிவரையும்அ. . . மாதேவாண்டான் எழுத்து இப்படிக்கு ஆளுடையான் எழுத்து . . . ஸ்ரீகரணத்தான் சம்பந்தன் எழுத்து . . .[1]

7. னதட்டுருவவிட்ட சுந்தரபாண்டிய சக்கரவர்த்தி எழுத்து இப்படிக்கு தேவேந்திரப்பன் எழுத்து . . .

8. இப்படிக்கு ஆளுடையநாயன் எழுத்து இப்படிக்கு கூத்தப் பெருமாள் எழுத்து . . .

9. இவை ஆடிமாதம் இருபத்தொன்பதாம் தியதி முதல் ஷுதிதிவரை செல்வதாக . . .

---

1 ஆறாவது வரியிலிருந்து இறுதிப் பகுதி பள்ளியறை சுவரில் மறைந்துள்ளது.

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 791 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13 ஆம் நூ.ஆ.
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குப்பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	17
மன்னன்	:	–			

இடம்: கருணாம்பிகைக் கோயில் அர்த்தமண்டபம் மற்றும் கருவறை குமுதவரி

குறிப்புரை: அவினாசி ஈஸ்வரன் கோயிலில் காணியுடைய தச்சன் கொல்லன், தட்டான் ஆகியோருக்கு அரசன் சில வரிசைகளை அளித்த செய்தியை இக்கல்வெட்டு கூறுகின்றது. 'காணியுடைய' என்பது இம்மூன்று பிரிவினரும் கோயிலில் அவர்கள் பணி செய்து வருமானம் பெறுவதற்கான உரிமையைக் குறிக்கும்.

கல்வெட்டு:

1. சுபமஸ்து சண்டேஸ்வரன் ஓலை சாகரஞ் சூழ்வையகத்து கண்டீஸ்வரன் கரும மாராய்க பண்டே அறஞ் செய்தான் செய்தானறங் காத்தான் பாதம் திறம்பாமல் சென்னிமேல் வைத்து சண்டேஸ்வரன் ஆதேசம் நம் உடையார் அவிநாசி ஆளுடைய நாயனார் . . . நப்பதியில் காணி உடைய கொல்லன் தச்சன் தட்டானுக்கு

2. நம் ஓலை குடுத்தபடியாவது இவர்கள் நன்மைத் தீமைக்கு சங்கும் பேரிகையும் புகுந்து கொட்டி சங்கு ஊதக் கடவதாகவும் இவர்கள் மக்கள் மக்கள் சந்திராதித்த வரைக்கும் இச்சங்கும் பேரிகையும் குடுத்தோம் இது செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்க

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 792 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	கி.பி. 13 ஆம் நூ.ஆ.
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	–
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குப்பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	18
மன்னன்	:	–			

இடம்: கருணாம்பிகை கோயில் மகாமண்டபத்தென் சுவர்

குறிப்புரை: சோழமண்டலத்து இராசராச வளநாட்டுப் பெரும்புலியூரைச் சேர்ந்த எழும்போதழகியான் என்பவனுக்கு ஊர்கணக்கு, கோயில் கணக்கு, வீட்டு மனை, இறையிலி நிலம் அளித்த செய்தியை இக்கல்வெட்டு கூறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ சணெஸ்வரநு ஓலை சாகரஞ் சூழ் வையகத்துக் கண்டீஸ்வரநு கருமமாராய்க பண்டே அறஞ்செய்தான் செய்தானறங்காத்தான் பாதம் திறம்பாமல் சென்னிமேல் வைத்து அருளால்

2. சூதிசணெஸ்வரநு சூஷேமமு நடு ஹுதன் சோழ மண்டலத்து ராஜராஜ வளநாட்டு பெரும்புலியூருடையான் எழும்போதழகியான் திருவிடையாட்ட முடையானான.. [முதலை வாய்ப் பிள்ளைக்கு] குடுத்த வேளானுக்கு

3. நம்மோலை குடுத்தபடியாவது ஊரணஸம்வத்சரத்து விக்ரம நாயற்று வமவுவக்ஷத்து தஶமியும் திங்கட் கிழமையும் பெற்ற உத்திராட நாள் வட பரிசார நாட்டு உடையார் அவிநாசி ஆளுடைய நாயனார்.

4. கோயில் கோயில் கணக்கும் திருமடைவிளாகம் கால்பாடு உட்பட ஊர்கணக்கு மகாநி....தேவர்க்கும் குடுத்தபடியாவது

5. சன்நதித் தெருவில் கீழ்சிறகில்மனை ... னையாவது தெருவில் சதாக...க்கு மேற்கும் தென்பாற்கெல்லை வடக்கும்.

6. இந்த முதலைவாய்ப்பிள்ளைக்குக் குடுத்த வேளான் கோட்டையமனைக்கு..ல் கிணற்றில் ஒன்றுபா . . .கிழக்கும் வடபாற்கெல்லை நாற்பத்தெண்ணாயிரவன்

7. தெற்கும் இன்னான் கெல்லைக்குள்பட்ட ... ரும் தென்பாற்கெல்லை புக்கொளியூர் குளத்துக்கு வடக்கும் மேற்பாற்கெல்லை பள்ளித் திருவெகம்பமுடையான்.

8. கெல்லை தான[த்]தாரில் ஆளுடைய நாய ..... மேற்கும் தென்பாற்கெல்லைக் குட்பட்ட நிலமும் இதில் கீழ்நோக்கிய கிணறும் மேல்னோக்கிய மரமும் எழுவனமு ....

9. தோட்டத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்[லை] நாள்ளாற்றுக்குத் தெற்கும் இன்னான்கெல்லைக்கு கோயிலில் பெறும் இலக்கை ஒரு நிமந்தத்துக்கு மாதம் ஒன்றுக்கு காலால் . . .

10. [ளை]ப்ன் மற்றும் எப்பெற்ப்பட்டனவும் குடுத்து இவனுக்கு அள[ந்]தது அறுபதும் தனக்கு உள்ளது அறுதியாகப் பெறக்கடவானாகவும் இக்கோயில்

11. நெல்லுப் பதினைங்கலமும் ஆண்டொன்றுக்கு பிடவை முதல் பணமும் .... கைபெற்று எழுது வானாகவும் விஷு ...அயநஃ திருனாள் பெறுவானாகவும் இக்கோயில் ...

12. வரும் திரு... ணக்கும் மற்றும் உள்ள கணக்கானவை . . . ஊகணக்கில் உள்ள ஸ்வஃஜ்ரங்களும் இறையிலியாக உழுது போதுவானாகவும் இவனுக்குக் காண

13. ற்று மற்றும் எப்பெற்பட்டனவும் பெறக்கடவானாகவும் [இ] யநவ்ரா வமற்றும் எப்பெற்பட்டன உரித்தாவதாக இவன் மக்கள்

14. மக்கள் செல்வதாக நம் ஓலை குடுத்தோம் முதலைவாய்ப்பிள்ளை குடுத்த வேளானுக்கு இப்படிக்குச் செம்பிலும் சிலையிலும்.

15. வெட்டிக் கொள்க இப்படிக்குஅருளால் சீகாழி மொழி பாகன் எழுத்து இப்படிக்கு.... யான் தட்டுருவ விட்ட சு[ந்த]

16. ர பாண்டியன் சக்கரவர்த்தி எழுத்து இப்படிக்கு மாதேவாண்டான் எழுத்து இப்படிக்கு ஆளுடையான் எழுத்து இப்படிக்கு திருகல் இராமபிச்சன் எழுநிலை . . .

17. த்து இப்படிக்கு ஆளுடைய நாயன் எழுத்து இப்படிக்கு கூத்தப் பெருமாள் எழுத்து இப்படிக்கு...

18. அருளால் ஆதி ஸ்ரீ கரணத்தான் எழுத்து இது பன்மாஹே . . .

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 793 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14 ஆம் நூ.ஆ.
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	போசளர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	19
மன்னன்	:	–			

இடம்: கல்யாண மண்டபம் வடக்கு அதிட்டானத்தில் உள்ளது.

குறிப்புரை: இக்கல்வெட்டு போசளர் கல்வெட்டாக இருப்பினும் கொங்குச் சோழர் கொங்குப் பாண்டியர் வரிநிருவாகத்தைச் சுட்டுகின்றது. இக்கல்வெட்டில் கூறப்பெறும் கரைவழிநாடு நீர்வளம் மிக்க பகுதி, அதனால் அப்பகுதியிலிருந்து நீண்ட தொலைவில் உள்ள அவினாசி கோயிலுக்கு நிலம் அளிக்கப் பெற்றுள்ளது. போசளர் ஆட்சியின் இறுதி நாள்களில் தண்ட நாயக்கர்களே செல்வாக்கு பெற்றிருந்ததை இக்கல்வெட்டு உறுதிப்படுத்துகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்தி ஸ்ரீ மகாபிரதானி இம்மடி [இராகு] த்தராயன் சிங்கய தண்ணாயக்கர் அவிநாசி ஆளுடையார் கோயில் தானத்தார்க்கு நம் ஓலை குடுத்த தன்ம மாவது நாயனார்

2. அவிநாசி யாளுடையார்க்கு சிதகரகண்டன் சந்திக்கும் [சி]தக[ர]கண்டன் திருநாளுக்கும் நித்த நிமந்தங்க[ளுக்கு]ம் உடலாக கரைவழிநாட்டு . . .

3. . . . ஸ்ரீமுக ஸம்வத் சரத்து ஐப்பசி மாதமுதல் முதலாக இறையிலி [தெ] வதானமாக குடுத்தோம் இவ்வூர் நான்கெல்லைக்கு உட்பட்ட நன்செய் புன்செய்

4. மேனோக்கிய மரம் கீழ்நோக்கிய கிணறு இறை புரவு சிற்றாயம் எலவை உகவை மன்றுபாடு தெண்டக்குற்றம் சுங்கம் செலுபடி சு[ங்]கம்

5. . . . ரக. . . ஓலைச் சம்படம் அச்சு. . .க்கும் யா... வழுவரில் வரி தறிஇறை கடமை மற்றும் எப்பேர்ப்பட்ட இறைகளும் ச. . .ம். . .

6. . . .ளுடைய நாயனார்க்கும். . . கல்லிலும் செம்பிலும் வெட்டிக் [குடுத்தோம்] சந்திராதித்த வரை செல்லுவதாக

7. . . . நந்த மாரனார் எப்பேர்ப்பட்டாரும் பாற்படுத்துக் குடுக்க இத் தன்மத்தை அழிவு செய்வான் வழி யேழெச்ச மறுவான் இது பன்மா ஹேஸ்வரரக்ஷை.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY.
Acc No 1778
Date
MADRAS

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 794 / 1974**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14ஆம் நூ.ஆ.
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	போசளர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	20
மன்னன்	:	மூன்றாம் வள்ளாளன்			

இடம்: பள்ளியறை கிழக்குச் சுவரில் உள்ள கல்வெட்டு

குறிப்புரை: அவினாசி ஈஸ்வரன் கோயிலில் மூன்று விளக்குகள் எரிப்பதற்கு 360 பணம் பெம்மசெட்டியிடமிருந்து மூன்று சிவப் பிராமணர்கள் பெற்றுக் கொண்டு விளக்கெரிப்பதாக உறுதி அளித்துள்ளனர். காப்பிய கோத்திரம் குறிக்கப் பெறுகின்றது. நாற்பத்தெண்ணாயிரச் சக்கரவர்த்தி என்ற பெயர் குறிப்பிடத் தக்கது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரவள்ளாள தேவர் வ்ருதிவிராஜ்ய பண்ணி
2. ணியருளாநின்ற வெகுதான ்[ஸ்] ஸம்வத்ஸரத்து மார்க
3. ழிய் முதல் உடையார் அவிநாசி ஆளுடைய நாயனார் கோ
4. யில் காணி உடைய சிவபிராமணரில் காசிப கோத்திரத்து சாந்தாரைக் காப்பான் குருவகம்பன் நாற்பத்தெ
5. ண்ணாயிரச் சக்கரவர்த்தியும் இக்கோத்ரத்து சீயாழி முருகன் அவிமுத்த நாயக
6. நம்பி உள் இட்டாரும் காப்பிய கோத்ரத்து அவினாசி அவிமுத்தன் ஆன அவிநாசி யாண்டான் உள்ளிட்டாரும் இ

7. ம் மூவரோம் பெருமா காலால் விண்ட [செமயார்] செட்டி மகன் ெ[பம்ம] செட்டி

8. .... நாங்கள் கல்வெட்டிக் குடுத்தபடியாவது உடையார் அவிநாசிஆ

9. ளுடைய நாயனார்க்கு இவர் வைத்த நன்தா விளக்கு மூன்றுக்கு இற்றை நாளில்

10. நாங்கள் பற்றிக் கொண்ட பணம் ௩ாசுயி இப்பணம் முன்நூற்றறுபதுக்கும் இத்திரு

11. நன்தாவிளக்கு மூன்றும் எங்கள் மக்கள் மக்கள் குடங் கொண்டு கோயில் புகுவான்

12. இந்த விளக்கு மூன்றும் சந்திராதித்த வரை செலுத்தி போதக்கட வோம்மாக கல்வெட்

13. டிக் குடுத்தோம் பெம்ம செட்டியார்க்கு நாற்பத்தெண்ணாயிர சக்கரவர்த்தியும் சீயா

14. ழி முருகநான அவிமுத்த நாயக நம்பி உள் இட்டாரும் அவிநாசி பண்டிதர் உள் இட்

15. டாரும் இவனைவோம் இப்படிக்கு நாற்பத்தெண்ணாயிர சக்கரவர்த்தி எழுத்து

16. இப்படிக்கு சீயாழி முருகநான அவிசத்த நாயக நம்பி உள் இட்டார் எழுத்து

17. இப்படிக்கு அவிநாசி அவிமுத்தநான அவிநாசி பண்டி[த]ஞ் எழுத்து

18. பன்மாஹேஸ்வரரரெக்ஷ

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 795 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	கலியுகம் 4749
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1648
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	
அரசு	:	இல்லை	ஊர்க் கல்வெட்டு எண்	:	21
மன்னன்	:	இல்லை			

இடம்: அவிநாசிலிங்கேஸ்வரர் கோயில் முன்மண்டபம் (கொடிக் கம்பமண்டபம்) தூணில் உள்ள கல்வெட்டு

குறிப்புரை: வெள்ளாளரில் பிள்ளந்தை குலத்து காழியப்ப கவுண்டன் ஓட்டுக் கால்மண்டபத்தைக் கட்டியுள்ளார். காழியப்பன் நாலூர் பற்று நாட்டுக் கவையன்புத்தூரில் வாழ்ந்தவர். கவையன்புத்தூர் இன்றைய சர்க்கார் சாமக்குளம்

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கலியுக சகாத்தம்.
2. சதூளாசயகூ க்கு
3. மேல் செல்லா னி
4. ன்ற சித்தார்த்தாதி
5. சித்திரை ௩ [தியதி]
6. நாலூர் பற்று
7. நாட்டு கவையம்
8. புத்தூரில் இருக்
9. கும் வெள்ளாளர் பி

10. ள்ளந்தைக் குலத்

11. தில் பெரிய காழிய

12. ப்ப கவுண்டர் அவர்

13. கள் சின்னக் காழிய

14. ப்ப கவுண்டர் அவர்

15. கள் உபையம் ஆன

16. ஒட்டுக்கால் மண்ட

17. பம் கட்டி முடித்த

18. ார் அவினாசிலி

19. ங்கர் லட்சிப்பார்.

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 796 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1538
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	விஜயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	22
மன்னன்	:	அச்சுதராயர்			

இடம்: அவிநாசி சங்கமண்குளத்தின் கிழக்கில் புஞ்சைக் காட்டில் உள்ள குத்துக்கல்லில் உள்ள கல்வெட்டு.

குறிப்புரை: கர்நாடக அரசர்களில் உடையார் மரபினைச் சேர்ந்த இலிங்கண உடையார் பாலராசசமுத்திரம் என்ற குளத்தின் அருகில் சாலிங்க சமுத்திரம் என்றபேரால் ஒரு குளம் அமைத்தார். அந்தக் குளத்து நீர் பாயும் வயல்களில் கிடைக்கும் மேல்வாரத்தில் ஒரு பாதியை அவினாசி லிங்கேஸ்வரர் கோயிலுக்கும் மறுபாதியை அரசுக்கும் அளிக்கும்படி ஆணையிட்டுள்ளார்.

கல்வெட்டு: முன்பக்கம்

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமன்மகாமண்ட
2. லேசுரன் அரிய விபாடன் பா
3. ஷைக்கு தப்புவராய கண்
4. டன் மூவர் மாகண்டன் க
5. ண்ட நாடு கொண்டு கொண்
6. டநாடு குடாதான் பூறுவ ெ
7. தக்ஷிண உத்தர பச்சிம சதுச
8. முத்திராதிபதி ஈளமுதலாக எ
9. மண்டலமுங் கொண்டரு

10. ளிய இராசாதிராசன் ராசபரமெ

11. ஸ்வரன் நரவாகன சக்கிரவ

12. த்தி நரலோக சூரியன் பத்திநெ

13. ட்டு கோட்டத்து வன்னியர்க

14. ண்டன் துலுக்கற் தளவிபாடன்

15. துலுக்கர் மோகம் தவிழ்த்தான்

16. இராயர் மகாராயர் கிருஷ்ணராயர்இ

17. ம் முடி அச்சுத தேவ மகாராயர்

18. பிறுதவி இராச்சியம் பண்ணி அ

19. ருளாநின்ற சகாத்தம் சூசாகூ

20. க்குமேல் செல்லாநின்ற ன

21. ந்தன வருஷம் சித்திரை மாதம்

22. முதல் இறாயசத்துக்கு கொண்டமா

23. தய்யன் குமாரன் திம்மப்ப ணாயக்

24. கருக்கு தெக்ஷிண புசமான பாலறா

25. ச உடையாருக்கு செல்லாநின்ற

26. கொங்கு மண்டலத்து ஸ்ரீமன் மகா

27. தேவ தேவொத்தமன் ஸ்ரீஅவிந

28. ாசிலிங்கர் திருப்படிக்கு பா

29. லதேவ மகாராசாவின் ஊளியத்து

30. பகவரான ராயசத்துக்கம் தானீக அவி

31. நாசியப்பன் உள்ளிட்டாரும்

32. ஸ்ரீமது அனேக பிரும்மாண்ட

33. பாண்ட கெற்ப கெற்பிகிறுதி

34. வித மது சூதன.திருகாதீஸ்வர

35. ற் அனேக தேவமகுட மணிகிற

36. . . . சிவல்லவாக அவ . . .

37. . . . னகும்ப்பதேவன

38. . . . விம.

பக்கம் 2

39. இராசா புரத இலிங்கண உ

40. டயார் தேவர்க்கு இத்தடாக நின்ன

41. மயசாதனம் குடுத்த படியாவது

42. இற்றைநாள் அவினாசி கிராம

43. த்துக்கு வடக்கு முன்னாள்

44. பளையகும் பால ராற உ

45. டயார் பொன்னிட ஒத்தட்டுவி

46. த்து தம்மிட பெரால் பாலசமுத்தி

47. ரம் என்று கட்டின அந்த பாலசமுத்தி

48. சமுத்திரத்துக்கு தென்கீளை மூ

49. லையில் அவினாசி லிங்கன் தே

50. காயிலுக்கு ஈசான மூலையில்

51. இலிங்கண உடைய தேவர் த

52. ம்மிட பேரால் தம்மிட தன்மம

53. ாக சாலிங்க சமுத்திரம் என்று ஒ

54. ரு குளம் கட்டக் கடவராகவும்

55. கட்டுமிடத்தில் முட்டின பொன்

56. தம்மிட கையில் இட்டுக் கட்ட

57. கடவாராகவும் அந்த சாலிங்க

58. சமுத்திரத்தின் கீழே நீர்பாச்சல் நி

59. லம் உள்ளதில் பயிர் நஞ்செய் நெ

60. ல் விளைச்சல் கமுகு தென்னை

61. மரம் வெற்றிலை வாழை மற்றும்

62. உண்டான நீர்பயிர் சகல சுவாமி

63. யங்களில் உண்டான சகல ஆத

64. ாயத்தில் அவினாசிலிங்கன் கோ

65. யில் பண்டாரத்துக்கு பாதியும்

66. இலிங்கண உடையர் சிங்காத

67. னத்துக்கு பாதியுமாக சந்திராதி

68. த்திய வரைக்கும் செல்லக்கட

69. வதாகவும் இந்த சாதனம் செம்

70. பிலும் சிலையிலும் வெட்டுவித்து

71. க் கொள்ளக் கடவாராகவும் குளத்து

72. பாச நமறுதி கிரையம் குளத்துக்கு இ

73. டக் கடவாராகவும் இப்படி சம்மதித்து

74. இந்த தடாக நின்மைய சாதனம் குடு

75. த்தோம் பாலைய தேவ மகாராசா

76. வின் உள்ளம்படி எழுத்து

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 16 ஆம் நூ.ஆ.
ஊர்	:	அவிநாசி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	கன்னடம்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	நந்தி நாகரி	முன் பதிப்பு	:	–
அரசு	:	விஜயநகரர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	23
மன்னன்	:	மகாரயர்			

இடம்: கோயிலில் உள்ள மாணிக்கவாசகர் செப்புத் திருமேனிப் பீடத்தில் உள்ளது.

குறிப்புரை: கோதாவரி தேவி என்பவள் மகாராயருடைய மகள் ஸ்ரீபுவனேஸ்வரி தேவியின் திருமணத்தின் போது அமுதுபடி செய்ய ஏற்பாடு செய்த செய்தியை கூறுகின்றது. திருமேனிப் பீடத்தில் மேலும் நான்குவரி உள்ளது. படிக்க இயலவில்லை.

கல்வெட்டு:

१ महारायर कमारित्ति श्री भुवनेश्वरि दे
२ वि मदुवयलुन्नवरत्नदल्लिधुरेगलानु
३ आरोगणेयनु माडिशिद रायराणिर दा
४ नि गुरु गोदावरिदेवियरु श्री अवि
५ नाशि देवर प्रित्यर्त्थ

Transliteration:

1 mahārāyara kamāritti śrī bhuvanēśvari dē
2 vi maduvayalunnavaratnadallidhurēgalānu
3 ārōgaṇeyanu māḍiśida rāyarāṇira dā
4 ni guru gōdāvaridēviyaru śrī avi
5 nāśi dēvara prityarttha

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 798 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	27
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13 ஆம் நூ. ஆ.
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	581 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
மன்னன்	:	வீரராசேந்திரன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை தென்சுவர்

குறிப்புரை: அம்மன் கோயிலில் விளக்கெரிக்க இரண்டரை அச்சு கொடையாக அளிக்கப்பெற்ற செய்தி கூறப்பெறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்ரதேவற்கு யாண்டு இருபத்தேழாவது
2. . . . வஙவ ரிசார நாட்டில் மன்னியூர்
3. . . . த்தில் உடையான் . . . வீர. . .
4. . . . காசுவ கோத்திரத்தில் ஆழ்வாந் திநெ . . .
5. . . . ஆமட்டம் கண்டன் . . . சேநாபதிகளில் தேவந் முத்
6. தி உடையாநும் பெருமாள் . . . தியாக கங்க தேஸந் பக்கல் நாச் . . .
7. செல்வியாராந அரயான். . . சந்தியாதீபம் இரண்டுக்கு நாங்கள் கொ
8. ண்ட அச்சு இரண்டரையும் . . . எண்ணை வாத்துக் கொளு. . .
9. . . . அச்சு ஒன்றேகால் . . . றை செலுத்துவோமாகவும்

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 799 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	14
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1221
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	582 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	2
மன்னன்	:	வீரராசேந்திரன்			

இடம்: மன்னீசர் கோவில் கருவறை தென்சுவர்

குறிப்புரை: பாரசிவர் மரபினைச் சேர்ந்த பெரியான் கத்தியான் மன்னியாண்டார் கோயிலில் சந்திவிளக்கெரிக்க ஒன்றேகால்கழஞ்சு பொன்னைக் கொடையாக அளித்துள்ளான்.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்ர தேவற்கு யாண்டு பதிந் மூன்றாவதிந் நெதிர் வடபரிசாரநாட்டி
2. ற் காணியுடைய பாரசிவரிற் பெரியாந் கத்தியேந் ஆளுடையார் மன்னீயூரா
3. ண்டாற்குச் சந்தியாதீபம் ஒந்றுக்கு ஒடுக்கின பொந் கழைஞ்சே காற்பொந்நு
4. இக்கோயிலின் காணியுடைய சிவப்பிராமணரோங் கைக்கொண்டு இசந்தியாதீபம் இக்
5. கோயிலிற் குடங்கொண்டு கோயில் புகுவாந் சந்திராதித்தவரை செலுத்துவோமாக இதுபந்
6. மாகேசுர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 800 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	9
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1265
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	583/ 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	3
மன்னன்	:	இரண்டாம் விக்கிரமசோழன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை தென்சுவர்

குறிப்புரை: சாத்து வாணிகன் மாலன் மனைவி கௌரி என்பவள் சந்தி விளக்கெரிக்க 29 பணம் கொடையாக அளித்த செய்தியைக் கூறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்தி ஸ்ரீ விக்கிரம சோழ தேவற்கு யாண்டு ஒந்பதாவது... திங்கள் வடபரிசாரநாட்டு....

2. ரிலிருக்கும் சாத்து வியாபாரிகளில் மாலந் மனைக்கிழத்தி கௌரியேந் ஆளுடையார் மந்நியூர் .... சந்

3. யாதீபம் இரண்டுக்கு நாந் ஒடுக்கிந பணம் இருபத்தொந்றும் ஸ்ரீ பண்டாரத்தே ஒடுக்கின....

4. ந் இது சந்திராதித்தவரை செல்வதாக இது பந்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 801 / 1975**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	15+7
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13 ஆம் நூ.ஆ
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	584 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	4
மன்னன்	:	வீரராசேந்திரன்			

இடம்: மன்னீசர் கோவில் கருவறை தென்சுவர்

குறிப்புரை: இக்கல்வெட்டு அரசன் ஆணையாகப் பொறிக்கப் பெற்றுள்ளது. மன்னியூரில் வாழும் அதிகாரிகளில் குலோத்துங்க சோழ தேவன் குறவன் 95 அச்சு (காசு) கொடையளித்தமையால் வடவிளத்தலை முதலிய இடங்களில் உள்ள நிலத்தைத் திருத்தி விளை நிலமாக்கிக் கொள்ள ஆணை அளித்துள்ளான்.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ த்ரி஭ுவநச் சக்கரவத்தி கோனேரிமேல் கொண்டான் வட
2. பரிசார நாட்டு மன்னியூர் ஆளுடையார் தேவகன் மிகளுக்கு
3. நம் ஓலை குடுத்த படியாவது மன்னியூர் குடியிருக்கும் பிள்ளைகளி
4. ல் குலோத்துங்கசோழ தேவன் குறவநேன் . . .ற்கு குடுத்தமைய. . . அ
5. ச்சுத் தொன்னூற்றஞ்சும் வைச்சமையில் இக்கு. . .
6. லையும் வடவிளந்தலையும் உட்பட்ட நிலம் திருத்திக் கொள்வாராகவும் இப்படிசெம் . . .
7. வதாக சந்திராதித்தவரை செல்வதாக நம் ஓலைகுடுத்தோம் இவை விரத முடித்தசோ. . .
8. வை வாணராயதேவன் எழுத்து யாண்டு பதினஞ்சாவது எதிர் எழாவது நாள்
9. இரு நூற்றொருபத்தேழு

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 802/2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	8
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1264
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	586 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	5
மன்னன்	:	இரண்டாம் விக்கிரமசோழன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை தெற்குச் சுவர்.

குறிப்புரை: அரசன் அதிகாரிகளில் வல்லங்கிழான் மல்லன் அழகியதிருச் சிற்றம்பலமுடையான் ஆனமுனைய தரையன் அமாவசை நாளில் இறைவன் எழுந்தருளும் போது அமுது படி செய்ய ஆறுபழஞ்சலாகை அச்சுகளைக் கொடையாக அளித்துள்ளான். இவன் முனையதரைய மரபினைச் சேர்ந்தவன்.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கேப்பர கேசரிபன்மரான த்ரி஭ுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீ விக்கிரம சோழதேவற்கு யாண்
2. டு அ வது வைகாசித் திங்கள். . . பெருமாள் முதலிகளில் வல்லங்கிழான் மல்லன்
3. அழகிய திருச்சிற்றம்பல முடையானான முனையதரையனேன் செய்ததம்ம
4. மாவது ஆளுடையார் மன்னியூருடையாற்கு உவாப்படி எழுந்தருளுகைக்கு நான் பண்டா
5. ரத்தில் ஒடுக்கின பழஞ்சலாகை அச்சு ஆறும் கொண்டு உவா ஒன்றுக்
6. கு அமுதுபடிக்கு காலாய். . . குறுணி அரிசியும் எழுந்தருளுகை
7. க்கு காலால் நாழி. . . எழுந்தருள. . . வேண்டும் விஞ்சனமும் இ
8. ட்டு எழுந்தருளுவதாக இ.... சந்திராதித்தவரை செல்வதாகக் கல்வெட்டிவித்தேந் மு
9. னையதரையனேன் இது பன்மாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 803/2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	21
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1228
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	585 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	6
மன்னன்	:	விரராசேந்திரன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை தெற்குச் சுவர்

குறிப்புரை: அரசன் அதிகாரிகளில் பிறைசூடும் பெருமாள் குன்றமெறிந்த பெருமாள் சுட்டியான், பழஞ்சலாகை அச்சு 4 கொடையாக அளித்துள்ளான். ஞாயிற்றுக் கிழமைகளில் செய்யும் வழிபாட்டில் பயன்படுத்தப்பெறும் அபிடேகத் திரவியங்களை வாங்குவதற்கு இக்கொடை அளிக்கப் பெற்றுள்ளது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு உ௰க வதுக்கு எதிராவதுக் கெதிராவது பெருமாள்..... யாந பிறைசூடும் பெருமாள் குந்றமெறிந்த பெருமாளாந சூட்டியாந் விட்டி சோழ மூவேந்தவேளான்...

2. நான் வைத்த தந்மமாவது திருநாயிற்றுக் கிழமைக்கு விட்ட .... நாநாழி அரிசியும் உழக்குப் பருப்பும் ஒருபிடி நெய்யும் அரை... கருப்புக் கட்டியும்... பழ... நாயிற்றுக் கிழமைய் தோறும் பண்டாரத்தில் [ஒடுக்கின]...

3. சலாகை அச்சு நாலும் சீபண்டாரத்திலே ஒடுக்க... இது சந்திராதித்தவலுஞ் செல்வதாக இதுபநூாஹேஷ்வரரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 804/2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	3
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1259
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	589/ 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	7
மன்னன்	:	இரண்டாம் விக்கிரமசோழன்			

இடம்: மன்னீசர் கோவில் கருவறை தெற்குச் சுவர்

குறிப்புரை: சோழ மண்டலத்து பரவையகரத்தைச் சேர்ந்த மகாதேவ பட்டன் மன்னியூர் ஈஸ்வரன் கோயிலில் ஒரு நந்தாவிளக்கு எரிக்க சிரியக்கி பழஞ்சலாகை அச்சு 15 கொடையாக அளித்த செய்தி கூறப்பெறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்தி ஸ்ரீ விக்கிராம சோழதேவற்கு யாண்டு மூன்றாவது சோழ மண்டலத்தில் பரவையகரத்தில் ஸ்ரீ ஹ்ரண மஹாதேவபட்டனேன் ஆளுடையார்
2. மன்னியூராள்வாற்கு திருநந்தாவிளக்கொன்றுக்கு இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணரில் வாச்சியகோத்திரத்தில் வீராண தேவன் விராநதேவனு
3. ள்ளிட்டாரும் காஸ்யப கோத்திரத்து சிவலவன் தேவனுள்ளிட்டாரும் இவன் பக்கல் நாங்கள் கொண்ட சீரியக்கி பழஞ்சலாகை யச்சுப் பதினைஞ்சு இவ்வச்சு பதினைஞ்சுக்கும் ஒ
4. ரு திருநந்தாவிளக்கு எரிப்போமாகவும் இவ்விளக்கு குடங்கொண்டு கோயில் புகுவார் சந்திராதித்தவரை செலுத்துவோமாகவும் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 805/2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	15
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 11 ஆம் நூ.ஆ
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	592/1922
எழுத்து	:	வட்டெழுத்து	முன் பதிப்பு	:	/
அரசு	:	-	ஊர்க் கல்வெட்டு எண்	:	8
மன்னன்	:	-			

இடம்: மன்னீசர் கோயில் தெற்குச் சுவர்

குறிப்புரை: துண்டுக் கல்வெட்டு. பாம்புணிக் கூற்றம், பழையாறு கூறப்பெறுகின்றன.

கல்வெட்டு:

1. ..... வர்களுக்குத் திருவெழுத்திட்டுச்செல்லா நின்ற யாண்டு பதினஞ்சு திங்கள் முதல் பாம்புணிக் கூற்றத்து பழையாற்று மாணிக்க.

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 806/2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	2
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி.1004
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	591/1922
எழுத்து	:	வட்டெழுத்து	முன் பதிப்பு	:	-
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	9
மன்னன்	:	கோக்கலி மூர்க்கன்			

இடம்: மன்னீசர் கோவில் கருவறை தெற்குச் சுவர்

குறிப்புரை: கல்வெட்டு சில இடங்களில் சிதைந்துள்ளது. இறைவன் எழுந்தருளும் போது திருப்பலிக்கும் விளக்கு பிடிக்கவும் திருவாலத்தி காட்டவும் தீபம் கொளுத்தவும் மன்னியூர், கங்கைப்பள்ளி, கருவலூர், இவற்றின் பிடாகைகள் ஆகியவற்றின் வரிகளை கோயில் கருவூலத்தில் செலுத்த ஆணையிடப்பட்டுள்ளது. ஊர்ச்சபை செயல்பட்டுள்ளமை இக்கல்வெட்டால் அறிய முடிகிறது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கோக்கலி மூர்க்க.... சோழ தேவற்கு யாண்டு இரண்டாவது ஆளுடையார் மன்னி
2. யூர் ஆளுடையாற்கும்.... எழுந்தருளி அருளும்போது திருவிளக்குப் பிடிக்கவும் ஸ்ரீபலி க்கு வி
3. ளக்குப் பிடிக்கவும் திருவாட்ட.... திருவாலத்தி கொளுத்தி.... தீபங் கொளுத்தவும் மன்னி
4. யூரும் கங்கைப் பள்ளியூரும் கருவலூரும் பழ.... பிடாகைகளும்..
5. [சந்திராதித்த]வரை தோறும் பண்டாரத்தே பிடித்து செலுத்துவாராக அமைச்சு குடுத்தோம்
6. மாஹே ஶ்வர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை தொடர் எண் : 807/2003

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	35
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1242
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	590 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	10
மன்னன்	:	விரராசேந்திரன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை தெற்குச் சுவர்

குறிப்புரை: இடங்கைப்படை பிரிவினைச் சேர்ந்த அமட்ட மாகண்டன் தெரிந்த கைக்கோளர்களும், சேனாதிபதிகளும் இடங்கை நாயகர் என்ற திருமேனியை வைத்துள்ளனர். இத்திருமேனிக்கு அமுது செய்ய 24 அச்சுகளை கோயில் கருவூலத்தில் செலுத்தியுள்ளனர்.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்திர தேவற்கு யாண்டு இருபத்தொன்பதாவதற் கெதிராறாவது ஆம
2. ட்டமாகண்டன் தெரிந்த கைக்கோளருஞ் சேனாபதிகளோமும் ஆளுடையார் மன்னியூராளுடை
3. யார் கோயிலில் நாங்கள் எழுந்தருளுவித்த இடங்கை னாயகற்கு அமுபடிநாளொ
4. ன்றுக்குக் கோயிற் செம்பாலரிசி யிருநாழியும் கறியமுது விஞ்சனத்துக்கு னாங்கள் ஒ
5. டுக்கின அச்சு இருபத்து னாலு இன்னாயனார் பண்டாரத்தில் தேவர்கன்மிக
6. ள் வசம் ஒடுக்கினமைக்கு இது சந்திராதித்தவரை செல்வதாக இது பன்
7. மாஹேசுர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 808/2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	4
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1008
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	593/1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	11
மன்னன்	:	கலிமூர்க்கவிக்கிரம சோழன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை தெற்குச் சுவர்

குறிப்புரை: கல்வெட்டு சிதைந்துள்ளது. வணிகன் விளத்தூர் சிலமண்டை என்பவன் சந்திவிளக்கெரிக்க பொன் கொடை அளித்த செய்தியைக் கூறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கோக்கலிமூர்க்கன் விக்கிரம சோழ [தேவற்குத் திருவெழுத்தி]ட்டுச் செல்லாநின்ற யாண்டு நாலாவது பங்குனிமா ...
2. யிருக்கும் வியாபாரி விளத்தூர்ச் சிலமண்டை மன்னியூராள்வார்க்கு ஸஞ்சி விளக்கொன்றெரிக்க வைத்த பொன் ...

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 809/2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 11 ஆம் நூ.ஆ
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	595/1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
அரசு	:		ஊர்க் கல்வெட்டு எண்	:	12
மன்னன்	:				

இடம்: சிவன் கோயில் கருவறை தெற்குச் சுவர்.

குறிப்புரை: ஒலக்கமண்டபம் செய்து வைத்ததைப் பற்றி இக்கல்வெட்டு கூறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ . . . ம்பிகளர் செய்வித்த ஒலக்கக் கூடம்.

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 810/2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	2
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1006.
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	597 /1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	13
மன்னன்	:	கலிமூர்க்கன் விக்கிரம சோழன்			

இடம்: மன்னீசர் கோவில் கருவறை தெற்குச் சுவர்

குறிப்புரை: முகை நாட்டு ஞா...மூலை, புலியூர் ஆகிய ஊர்களையும் இவ்வூர்களுக்குட்பட்ட பள்ளிகளையும் மந்நியூர் பரமேஸ்வரர்க்குக் கொடையாக அளித்த செய்தி கூறப்பெறுகின்றது. ஊர்களைச் சேர்ந்த பள்ளிகள் என்பது கால்நடைகளுடன் தொடர்புடைய இடங்களாகலாம்.

கல்வெட்டு:

1. கோக்கலிமூர்க்கன் விக்கிரம சோழ தேவற்குச் செல்லா நின்ற ஆண்டு இரண்டு. . .
2. முகை ஞாட்டு ஞா. . .ன முலையும் புலியுரு மிவையிற்றில் பள்ளிகளு . . .
3. வைஉகவை மற்றும் எப்பேற்பட்டிநவும் மந்னியூர் பரமேஸ்வரர் . . .
4. தந்மம் இரக்ஷிப்பாநடி எந்றலை மேலந இத்தந்மம் இறக்குவ

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 811/2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	14 + 1
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13 ஆம் நூ.ஆ
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	599 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	14
மன்னன்	:	வீரராசேந்திரன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை தெற்குச் சுவர்

குறிப்புரை: உத்தராபதியைச் சேர்ந்த பிராமணன் வடுக பிள்ளையார்க்கு அமுதுபடி செய்ய 30 கழஞ்சைக் கொடையாக அளித்துள்ளான். கழஞ்சு அச்சாக மாற்றம் பெற்றுள்ளது. இக்கொடையைக் கொண்டு மூன்று சந்திக்கும் அரிசி அளிக்க வகை செய்யப் பெற்றுள்ளது. கம்புக்குப் பதிலாக அரிசி அளிக்கப் பெற்றுள்ளது.

கல்வெட்டு:

1. ஸ்ரீ வீரராஜேந்திர தேவற்கு யாண்டு பதிநாலவதற்கெதிர் ஆளுடையார் மந்நியூராண்டார் வ
2. டுகப் பிள்ளையாற்கு உத்திராபதி ஸ்ரீஹ்மணரில் விஶ்வஶோத்ரத்து அஹோரக அ...
3. பிஹா..ஸ்ரீ தேவநாந பரமானந்த தேவநேந் பிள்ளையாற்க்கு அமுதுபடிக்குச் சோ....
4. ழியத்தால் நித்தமிருநாழி யரிசிக்கும் கண்புக்குமாக பதினாறு கழஞ்சரை பொ
5. ந்நும் பண்டாரத்திலொடுக்கிந பொந் பதின்முக்கழஞ்சரையும் ஆக

6. ப் பொந் முப்பதிற் கழஞ்சுக்கும் அச்சின்வாய் காணங் கலவரை கண்பாக இவ்வுபையக் க

7. ண்பு பிள்ளையார் கமுதுபடி மூன்று சந்திக்கும் ஒரு சந்திக்குச் சோழிய நாழி அரிசியாக நிச

8. த முன்னாழியரிசியும் விஞ்சநாதியுட்படச் சந்திராதித்தவரை செல்வதாக பஞாஹே

9. ஶ்ரீ ஸ்ரீகெஷ

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 812/2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14 ஆம் நூ.ஆ
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	600 /1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	போசளர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	15
மன்னன்	:	மூன்றாம் வீரவல்லாளன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை தெற்குச் சுவர்

குறிப்புரை: பார்ப்பார்பூண்டி குறிக்கப் பெறுகின்றது கோயிலுக்குத் திருபரிச்சட்டம் கொடுப்பதற்கு 12 பணம் கொடையாக அளித்த செய்தி கூறப்பெறுகின்றது. வலப்புறம் கல்வெட்டு சிதைந்துள்ளது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரவல்லாள தேவர் . . .
2. ஆங்கிரஸ ஸம்வத்ஸரத்து ஆனி மீ . . .
3. பார்பூண்டி வட்டையில் துறையா . . . ஆ
4. ளுடைய நாயினாற்கு திருப்பரிசட்டத்
5. . . . குடும்போமானோம் பணம் பன்னிரண்டு இப்பணம் பன்னிரண்டு . . . [சந்திரா]
6. தித்தவரை செல்லும்படி கல்லிலும்செம்பிலும் வெட்டிக் கொள்வாராக
7. வும் இது விலங்குவான் வழி ஏழச்ச மறுப்பான் இப்படிக்கு . . . சோழம
8. ண்டலத்து வடகரை விக்கிரம சோழ வளநாட்டு ஸ்ரீ பராந்தக . . .

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 813/2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	13
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1220
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	601 /1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	16
மன்னன்	:	வீரராசேந்திரன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை தெற்குச் சுவர்

குறிப்புரை: அரசி முக்கோகிழானடிகளின் பணிப்பெண்மல்லி கேசி என்பவள் சந்தி விளக்கிற்கு ஒன்றே கால் கழஞ்சு பொன்னைக் கொடையாக அளித்த செய்தி கூறப் பெறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு பதிந்மூன்றாவது
2. கோக்கிழானடிகள் பெண்டுகளில் மல்லிகேசியேன் ஆளுடையார் மந்
3. நியூராண்டார்க்கு னான்வைச்ச சந்தியா தீபமொந்றுக்கு கழஞ்சேகால் பொந்
4. ஒடுக்கினேந் விக்கிரம சோழபட்டநும் சித்திரமேழிப் பட்டநும் பண்டாரத்திலே ...

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 814/2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	5
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1278
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	602 /1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	17
மன்னன்	:	மூன்றாம் விக்கிரமசோழன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை தெற்குச் சுவர்

குறிப்புரை: கல்வெட்டு சிதைந்துள்ளது. சந்தி விளக்கு அளிக்கப்பெற்றுள்ளது. கூத்தாடுந் தேவர் சந்நிதி குறிக்கப் பெறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழதேவற்கு யாண்டு அஞ்சாவது ஆளுடையார்
2. மந்நியூராளுடையார் கோயிற் காணியுடைய [சிவப்பிராமணன்] வாச்சிய
3. கோத்திரத்தில் வீராண . . . திர . . .
4. த்திரத்திற் சிவந்தேவனான. . . நம்இர. . . ந்தீ சுரமுடை
5. யார் கோயிற் காணியுடைய
6. . . . வைத்த சந்நியாதீபம் ஒந்றுக்கு. . .
7. . . . காலும் கைக்கொண்டு கூத்தாடுந் தேவர் சந்நதியிலே யட்டுவா
8. . . . குடங்கொடுகோயில் புகுவாந் சந்திராதித்தவரை செல்வதாக இது பந்
9. மாஹேஶ்வரரக்ஷை.

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 815/2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	5
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1278
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	603/1923
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	18
மன்னன்	:	மூன்றாம் விக்கிரமசோழன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை தெற்குச் சுவர்

குறிப்புரை: மன்னியூர் ஈசுவரன் கோயில் பூசை செய்யும் சிவப்பிராமணர்கள் விளக்கு இரண்டு எரிப்பதற்கு சேவூரில் இருந்த படைவீரன் கரிகாலனிடம் இரண்டரை கழஞ்சு பொன்னைக் கொடையாகப் பெற்றுள்ள செய்தி கூறப்பெறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவற்கு யாண்டு அஞ்சாவது ஆளுடையார்...
2. காணியுடைய சிவப்பிராமணந் காசிவகோத்திரத்தில் சீவலவவந் . . .
3. . . . வீராணதேவர் வீரரா . . . உள்ளிட்டாரும் சேவூர் . . .
4. கைக்கோளரிற் . . . கரிகாலநேந் ஆளுடையார் மந்நியூராளுடையா
5. . . . தீபம் இரண்டுக்கு ஒடுக்கிந பொந் யிருகழஞ்சரையும் கைக்கொண்டோம் குடங்
6. கொடு கோயில் புகுவாந் . . . சந்திராதித்தவரை செலுத்து . . .
7. ல் கொள்கையில் பொந் . . . அச்சுக் கொள்கையால் வாங்கியிட்டோம் ...
8. . . .

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 816/2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	23
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1230
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	614 /1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	19
மன்னன்	:	வீரராசேந்திரன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை தெற்குச் சுவர்

குறிப்புரை: அமட்ட மாகண்டன் தெரிந்த கைக்கோள சேனாபதிகளில் தனபாலராயன் சந்தி விளக்கு ஒன்றுக்கு ஒன்றே கால் கழஞ்சு பொன்னைக் கொடையாக அளித்த செய்தி கூறப் பெறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜே
2. ஜிரதேவற்கு ஆண்டிரு
3. பத்து மூந்றாவது மந்நியூ
4. ரிலிருக்கும் ஆமட்டமா க
5. ண்டந் தெரிந்த கைக்கோள
6. சேநாபதிகளிற் தனபாலர
7. ாயநேந் மந்நியூராளுடையா
8. ற்கு வைத்த சூர்யாதீபம் ஒ
9. ந்றுக்குப் பொந்கழஞ்சே
10. காலுமிக் கோயில் காணி
11. யுடைய சிவஸ்ராஹ்ண
12. ரிற் பெருமாளும் வீரப்பெ
13. ருமாளுங்கைக் கொண்டு கு
14. டங்கொண்டு கோயில் புகுவா
15. ர் சந்திராதித்தவலுஞ்செலுத்
16. த இது பநூஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 817/2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	17+1
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13 ஆம் நூ.ஆ
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	606 /1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	20
மன்னன்	:	வீரராசேந்திரன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை தெற்குச் சுவர்

குறிப்புரை: படைவீட்டு வணிகர்கள் நித்த கலம் வழிபாடு செய்ய ஒன்பது அச்சுகளைக் கொடையாக அளித்துள்ளனர். திருஞானசம்பந்தர் மடம் குறிக்கப்பெறுகின்றது.

கல்வெட்டு:

1. ஷ்ஷ்ரீ வீரராஜேந்திர தேவற்கு யாண்டு பதிநேழாவதிநெதிர் ...முதல் ... யாந படைவீட்டில் வியாபாரி...களுக்கு நித்தக்கலமொந்றுக்கு அரிசி நா

2. ழியாழாக்கரிசியும் ஒருமாக்கறியு மோரிலைக் கறியுமுறியுரிமோரு மிதுக்குத் தக்க வுப்பு மிளகும்... அருவாளுக்குத் திங்கள்த் தூணிக்குறுணியுமாக இதுக்கு பண்டாரத்தில் ஒடுக்கின அச்சு ஒன்பது இவை ...

3. உபையத்தாலே நித்தக்கலம் சந்திராதித்தவற் செல்வதாக இக்கலம் திருஞாநசம்மந்த நம்பிமடத்தில் இடுவதாகவு மிது பன்மாஹேஷ்வர ரக்ஷை.

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	29
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1236
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	604 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	21
மன்னன்	:	வீரராசேந்திரன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை தெற்குச் சுவர்

குறிப்புரை: மன்னியூரைச் சேர்ந்த நாராயணன் தேவன் என்பவரிடம் சிவப்பிராமணர்கள் பத்து அச்சுகளைக் கொடையாகப் பெற்றுக் கொண்டு தேசாந்திரிகளுக்கு உணவளிப்பதாக உறுதி அளித்துள்ள செய்தியைக் கூறுகின்றது. சித்திரமேழி பட்டன் என்ற பெயர் குறிப்பிடத்தக்கது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்திர தேவற்கு யாண்டு இருபத்தொ
2. ந்பதாவது... மந்நியூர் நாராயணநன்
3. தேவனாந ஆநந்த போசந் வீரநாட்டார் பக்கல் மந்நி
4. யூராளுடையார் கோயில் சிவப்பிராமணரில் காசிபகோத்
5. திரத்து ஆழ்வாந் திருநட்டந் சித்திரமேழிபட்டந் உள்ளிட்டாரும் வாச்சிய கோத்திரத்து தி
6. ருச்சிற்றம் பலமுடையாந் பற்றியாந வீரநாராயணந் விக்கிரம சோழ பட்டந் உள்
7. ளிட்டாரும் யிவனைவோம் யிவர் பக்கல் கொண்ட பழஞ்சலாகை அச்சுப் பத்துக்கு
8. செம்பால் நாழி அரிசிச்சோறு ந ... றுதிபத்துதேசாந்திரிகளுக்குச் சட்டியிட்டு வருவோமா நோம் இது ...

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 819 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 12 ஆம் நூ.ஆ
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	605 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	22
மன்னன்	:	முதல் குலோத்துங்கன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை தெற்கு, கிழக்குச்சுவர்.

குறிப்புரை: வீரசோழன் அதிகாரி வீரசோழதேவன் என்பவனை வண்டு கொட்டிய செய்தி கூறப்பெறுகின்றது. அவன் மன்னியூர் ஈசுவரன் கோயிலில் சந்தி விளக்கு வைத்துள்ளான்.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ...
2. ... வடபரிசார நாட்டில் வண்டு கொட்டி
3. ந வீரசோழதேவநேந் சந்தியா தீபமொந்றுக்கு ...

த.நா.அ.தெ ால்லியல்துறை **தொடர் எண் : 820 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13 ஆம் நூ.ஆ
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	607 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	-	ஊர்க் கல்வெட்டு எண்	:	23
மன்னன்	:	-			

இடம்: மன்னீசர் கோயில் கிழக்குச்சுவர்.

குறிப்புரை: வெள்ளலூரைச் சேர்ந்த கைக்கோளரில் அவனிராயன் என்பவன் நாரைக்காளம் என்ற இசைக்கருவியை அளித்த செய்தியைக் கூறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ ஆளுடையார் மந்நியூ
2. ராண்டாற்கு வெள்ளலூரிற் கைக்கோள
3. ரில் அவநியராயந் இட்ட நாரைக்காளம்
4. ஒன்றும் இடை ஐம்பது

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 821 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1203
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	608 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	24
மன்னன்	:	இரண்டாம் குலோத்துங்கன்			

இடம்: மன்னீசர் கோயில் கிழக்குச்சுவர்.

குறிப்புரை: கல்வெட்டு சிதைந்துள்ளது. மன்னியூரைச் சேர்ந்த எண்ணெய் வாணிகரில் கேசன் இறுக்கன் என்பவன் சந்தி விளக்கு எரிக்க ஒன்றே கால் கழஞ்சு பொன்னைக் கொடையாக அளித்த செய்தி கூறப்பெறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோ
2. ழ தேவற்கு யாண்டு ஏழாவது மா
3. ர்கழி மாஸ முதல் ஆளுடையார் மந்
4. நியூராண்டாற்கு மந்நியூரில் இருக்
5. கும் வாணியரில் கேசந் இறுக்கந்
6. . . .
7. முன்வச்ச சந்தியா தீபம் ஒன்றுக்கு
8. ப் பொன் கழஞ்சே காலும் இக்கோ
9. யில் காணியுடைய சிவப்பிராமணன்

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 822 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	28
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1235
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	609 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	25
மன்னன்	:	வீரராசேந்திரன்			

இடம்: மன்னீசர் கோயில் கிழக்குச்சுவர்.

குறிப்புரை: மலை மண்டலத்து மாங்காட்டு மறையோன் கண்ட நாராயணன் என்பவன் அளித்த பத்து அச்சுகளைக் கொண்டு தேசாந்திரிகளுக்கு அன்றாடம் சட்டி சோறு அளிப்பது பற்றி இக்கல்வெட்டு கூறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு இரு
2. பத்தெட்டாவது மலைமண்டலத்து ப்ராஹ்மணன்
3. மாங்காட்டுக் கண்ட நாராயணநேந் ஆளுடையார் மந்நி
4. யூராளுடையார் சீபண்டாரத்தில் நாந் ஒடுக்கிந
5. அச்சு ஒந்பதும் முந்பு இருப ... ஒடுக்கிந அ
6. ச்சு ஒந்றும் ஆக அச்சுப் பத்துக்கும் தேசாந்திரிகளுக்கு
7. செம்பால் நாழியரிசிச் சோறு சட்டி பண்டாரத்திலே
8. யிட்டு வருவதாக இத்தந்மம் சந்திராதித்தவரை செல்வ
9. தாக இது பஹுஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 823/2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	5
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1154
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	610 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	26
மன்னன்	:	முதல் குலோத்துங்கன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை கிழக்குச்சுவர்.

குறிப்புரை: ஆமட்டமாகண்டந் தெரிந்த கைக்கோளரில் ஆண்டான் கறுத்தான் என்பவன் சந்திவிளக்கெரிக்க ஒன்றே கால் கழஞ்சு பொன் கொடையளித்த செய்தி கூறப்பெறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழ
2. தேவற்கு யாண்டு அஞ்சா
3. வது ஆளுடையார் மந்நியூர் ஆ
4. ண்டாற்கு மந்நியூரில் ஆமட்ட
5. ம் கண்டந் தெரிந்த கைக்கோள
6. ரில் ஆண்டாந் கறுத்தாநேந் சந்
7. தியா ஃ பம் ஒந்றுக்கு காணியா
8. ளரில்வீரப்பெருமாளும் பெரும
9. ாளாண்டார் வசமும் ஒடுக்கின
10. பொந் கழஞ்சேகாலுங் குடங்கொ
11. டுகோயில் புகுவாந் சந்திராதித்த
12. வரை செலுத்த இது பஹாஹே
13. ஸ்வஶ ஶகைஷ

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 824 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	8
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1156
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	612 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	27

மன்னன் : முதல் குலோத்துங்கன்

இடம்: மன்னீசர் கோயில் கருவறை கிழக்குச்சுவர்.

குறிப்புரை: அரசன் அதிகாரி வடபரிசார நாட்டு நாட்டுச்சாமந்தன் இரண்டு சந்திவிளக்கு எரிக்க இருகழஞ்சு பொன் அளித்த செய்தியைக் கூறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்து
2. ங்க சோழ தேவற்கு யா
3. ண்டெட்டாவது பெருமா
4. ள் சாமந்தரில் வடபரிசாரநா
5. ட்டு சாமாந்ன செய்
6. . . .
7. . . .
8. . . .
9. . . .

10. சநூாதீபம் நாள்

11. ஒந்று விளக்கிரண்டுக்கும்

12. ஒடுக்கிந பொந் இருகழஞ்சு

13. . . . கோயிற் காணி

14. யுடைய சிவஸ்ரூாஹணர்

15. விளக்கிரண்டு குடங்கொ

16. டு கோயில் புகுவார் சந்திரா

17. . . . ரை செலுத்து . . .

18. . . .

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 825 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	22
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1229
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	615 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	28
மன்னன்	:	வீரராசேந்திரன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை வடசுவர்.

குறிப்புரை: மன்னியூர் தெரிந்த கைக்கோளரில் கேசிகங்கன் என்பவன் ஈசுவரன் கோயிலில் சந்தி விளக்கெரிக்க ஒன்றே கால் கழஞ்சு பொன்னைக் கொடையாக அளித்துள்ளான். சித்திரமேழிபட்டன் என்பவன் குறிக்கப் பெறுகின்றான்.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர
2. தேவற்கு யாண்டு இருபத்திரண்
3. டாவது மந்நியூரிலிருக்கு
4. ம் ஆமட்டமா கண்டந்தெரி
5. ந்தகைக்கோளரில் கேசியகங்
6. கநேந் மந்நியூராளுடையாற்கு
7. வைத்த சந்தாதீபம் ஒந்றுக்கு
8. பொந் கழஞ்சேகாலு மிக்கோயி
9. லிற் காணியுடைய விக்கிரம சே
10. சாழப் பட்டநும் சித்திரமேழிபட்ட
11. நும் கைக்கொண்டு குடங்கொடு
12. கோயில் புகுவார் சந்திராதித்தவ
13. லுஞ்செல்வதாக இது பநாஹே
14. ஸ்வஸ்தி ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 826 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	14
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1287
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	616 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	29
மன்னன்	:	மூன்றாம் விக்கிரமசோழன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறைவடக்குச்சுவர்.

குறிப்புரை: துளு நாயக்கரில் அத்தம்பு நாயக்கன் வீரசூரிய தேவன் என்பவன் மன்னியூர் ஈசுவரன் கோயிலில் சந்தி விளக்கு எரிக்க ஒன்றே கால் கழஞ்சு பொன்னைக் கொடையாக அளித்த செய்தி கூறப் பெறுகின்றது. இவன் துளுநாட்டிலிருந்து வந்த படைத்தலைவனாகலாம்.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவற்குயா
2. ண்டு பதிநாலாவது ஆளுடை
3. யார் மன்னியூராளுடையாற்கு சந்
4. தியாதீபம் ஒன்றுக்கு பெருமாள் முத
5. லிகளில் துளு நாயக்கமாரில் அத்தெ
6. தம்பு நாயக்கன் வீரசூரிய தேவ டே
7. நன் இக்கோயில் காணியுடைய
8. சிவப்பிராமணர் வசம் கழஞ்சே கால் ெ
9. பான் ஒடுக்கிக் குடங்கொடு கோயி
10. ல் புகுவார் யாவராகில் சிலரும் சந்திராதி
11. த்தவரை செல்வதாக இது பஹுஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 827 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	14
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1287
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	617 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	30
மன்னன்	:	மூன்றாம் விக்கிரமசோழன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை வடசுவர்.

குறிப்புரை: துளு முதலிகளில் கொட்டியான் சோழநாராயணதேவன் மன்னியூர் ஈசுவரன் கோயிலில் சந்தி விளக்கு ஒன்று எரிக்க ஒன்றேகால் கழஞ்ச பொன்னைக் கொடையாக அளித்துள்ளான்.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவற்கு யாண்டு பதிநாலாவது ஆளுடையார் ம
2. ன்னியூராளுடையாற்கு சந்தியா தீபமொன்றுக்கு பெருமா[ன்] துளு முதலி
3. களில் கொட்டியான் சோழ நாராயண தேவநேன் இக்கோயிலிற் காணியு
4. டைய சிவப் பிராமணர் வசம் கழஞ்சே காற்பொன் ஒடுக்கி குடங்கொடு கோயில் புகுவா
5. ரியாவர் சிலருஞ் சந்திராதித்தவரை செல்வதாக இதுபன் மாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 828 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	7
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	சகம் 1125 கி.பி. 1203
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	618 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	31
மன்னன்	:	இரண்டாம் குலோத்துங்கன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை வடக்குச்சுவர்.

குறிப்புரை: இக்கல்வெட்டு கொங்குநாட்டுக் கோயில் நிருவாகத்தை அறிய உதவும் சிறந்த சான்று. கல்வெட்டைப் பொறித்த ஆண்டுவரை 114 விளக்கு அளிக்கப் பெற்றுள்ள செய்தி கூறப்பெறுகின்றது. மேலும் கரும் பாம்பான் தோட்டத்தால் வந்த விளக்கு 15 ஆக 129 விளக்கு எரிக்க ஆணை இடப்பட்டுள்ளது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்தீஸ்ரீ கு
2. லோத்துங்க சோழ தே
3. வற்கு ஏழாவது அற்பிகை வரை
4. ஆளுடையார் மந்நியூராண்டார்
5. காணியுடைய சிவப்பிராமண
6. ர் பல படியாலும் பொந் கொண்
7. ட உபைய விளக்கு இவாண்டு
8. க்கு உள்பட்ட கல்வெட்டுபடி எ

9. டுத்த விளக்கு காணி ஒந்றுக்கு விள

10. க்கு சந்தியா தீபம் ஞூற்று பதிநாலும்

11. கரும்பாப்பாந் தோட்டத்தால்வி

12. ளக்குப் பதினைஞ்சும் ஆகவிளக்

13. கு ஞூாற்றிருபத்து ஒந்பதும் குடங்

14. கொடு கோயில் புகுவார் செலு

15. த்துவதாக இது சந்திராதித்தவ

16. ரை செல்விதாக சென்ற சகரை

17. ஆண்டு ஆயிரத்தொரு ஞூற்றி

18. ருபத்தஞ் சரை இத்தந்மம் பஹா

19. ஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 829 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13 ஆம் நூ.ஆ
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	6271922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	32
மன்னன்	:	–			

இடம்: மன்னீசர் கோயில்

குறிப்புரை: பாரசிவரில் புண்டரிகன் இறந்து விட்டமையால் அவன் மன்னியூரிலும் சேவூரிலும் பெற்று வந்த வாசியம், மத்தளம், நட்டுவம் ஆகியவற்றிற் காணி யுரிமையை வேறொருவருக்கு அரசன் அளித்த செய்தியை இக்கல்வெட்டு கூறுகின்றது. வடுகன் என்ற சொல் குறிப்பிடத்தக்கது.

கல்வெட்டு:

1. கோநேரின்மை கொண்டான் கரையூர் தலைநகரில் ...
2. உடையபார சிவரில் புண்டரிகன் பெரியநான அம்மட்டம ...
3. ரில் சோழன் வடுகநான இடங்கையார் பாணநித்த ...
4. னு பொவித்து வந்து அவந் அந்தரபட்டமை ...
5. யார் மன்னியூராண்டார் கோயிலுக்கு மஞ் சேவூரில் ஆளு ...
6. வாரியக் கை மத்தளமும் நட்டுவர்க்காணியும் மற்றுந் தொ ...
7. ம் இவகளுக்கும் இவன் மக்கள் மக்களுக்கும் ...
8. . . . . .

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 830 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	21
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13 ஆம் நூ.ஆ
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	630 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	-	ஊர்க் கல்வெட்டு எண்	:	33
மன்னன்	:	–			

இடம்: மன்னீசர் கோயில்

குறிப்புரை: அரசன் இராசாடியான...சோழநல்லூரை மன்னியூர் ஈசுவரன் கோயிலுக்குத் தேவதானமாக அளித்த செய்தி கூறப்பெறுகின்றது. வானியாறு (பவானி) குறிக்கப் பெறுகின்றது.

கல்வெட்டு:

1. கோனேரின்மை கொண்டான் வடபரிசாரநாட்டு ஆளுடையார் மன்னியூராண்டார் தேவகன்மிகளுக்கு நம்மோலை குடுத்தபடியாவது இத்தேவற்கு நாங்குடுத்த ஊர் இராசாடியான ... சோழ நல்லூரென்று தேவதானமாக ஊரேற்றி

2. கொள்வார்களாகவும் இவ்வூர்க்கு நான்கெல்லை வடக்கும் இலுப்பை எல்லைக்கு மேற்கும் வாநிக்கரைக்கு தெற்கும் பாண்டிய குலமாணிக்கத்தி எல்லைக்கும் கிழக்கு இந்நான்கெல்லைக்குட்பட்ட நன்செய் புன்செயி

3. லுள்ள இறைபுரவு சிற்றாயமும் எலவை உகவை ... த் தேவர்க்குத் திருப்பணிக்கும் தேவரடியார் நட்டுவர் காந்தப்பர் திருப்பதியம் பாடுவார் நிவந்தக்காரர்க்கும் இட்டுவருவதாக நமக்கு இருபத்தொன்

4. றாவது நம்மோலை குடுத்தோம் இவை சோழ குல மாணிக்க மூவேந்த வேளான் எழுத்து இயாண்டிருபத் தொன்றாவது நாள் இருநூற்று எழுபத்திலே முத்தரையநெழுத்து காடுவெட்டியெழுத்து குலத்தரையன் எழுத்து கோலத்தரையநெழுத்து இது ...

5. பஹாஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 831 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	27
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 103
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	594/1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	34
மன்னன்	:	கலிமூர்க்க விக்கிரமசோழன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை தெற்குச்சுவர்.

குறிப்புரை: கவையன்புத்தூரைச் சேர்ந்த புள்ளன் வண்டு கொட்டி உயிர் பிழைத்தமையால் தன் உருவத்தையும், தன் மனைவி உருவத்தையும் செய்து வைத்துள்ளான். மேலும் தன்னுடைய அடிமை பொதுவங் கோதையையும், மக்களையும் கோசநமேயையும் கோயிலுக்கு அளித்துள்ளான். கொங்கு நாட்டில் நோய் நீங்க உருவாரம் செய்துவைக்கும் பழக்கம் இன்றும் உள்ளது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோக்கலிமூர்க்கந் ஸ்ரீ விக்கிரமசோழ தேவற்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற யாண்டு இருபத்தேழாவது புரட்டாதி திங்கள் முதல்
2. கவையன்புத்தூரிலிருந்து வாழும் புள்ளங்... மன்னியூர் வரஈஸ்வரர்க்குஇனக்கு காற்காலத்தில் வண்டு கொட்டி இல்லை வைச்சு என்னடியார் பொ
3. துவங்கோதையும் மக்களைஉம் கோசநமேயையும் மக்களையும் மன்னியூராழ்வார்க்கு நீரொட்டிக் குடுத்தேன் என்னடியாரை...
4. என் ஸ்வரூபமாக ஒருபடிமமும் . . . பெண்படிமமும் ஸஹிவிளக்கொன்றும் அவ்விளக்குக்குப் பொன் முக்கல முக்கழஞ்சுங் கொண்டு வருத்திதவலு மெரிப்பிக்கக் கடவார்
5. மன்னியூர் ஸஹஓம் உ

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 832 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13 ஆம் நூ.ஆ
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	605 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	-	ஊர்க் கல்வெட்டு எண்	:	35
மன்னன்	:	-			

இடம்: மன்னீசர் கோயில்

குறிப்புரை: துண்டுக் கல்வெட்டு வடபரிசார நாட்டு ஆன்பதி குறிக்கப்பெறுகின்றது. இவ்வூர் இப்போது ஆம்போதி என்று அழைக்கப் பெறுகின்றது.

கல்வெட்டு:

1. நாட்டு மன்னியூராளுடையார் வடபரிசார நாட்டு ஆன்பதி மேன்நோக்கிய மரமும் கீழ்நோக்கிய கிணறும் . . .

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 833 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13 ஆம் நூ.ஆ
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	605 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	-	ஊர்க் கல்வெட்டு எண்	:	36
மன்னன்	:	-			

இடம்: மன்னீசர் கோயில்.

குறிப்புரை: துண்டுக் கல்வெட்டு. அம்மன் கோயிலுக்கு நந்தவனம் அமைத்தமை பற்றிக் குறிப்பிடுகின்றது.

கல்வெட்டு:

1. . . . இட்டமையில் இவ்வூர் இறைபுரவு சிற்றாயம்
2. வேண்டும் குடிகள் நம்முடைய குடிகள் குடிமக்கள்
3. கொள்ள நம்மோலை குடுத்தோம் திரிபுவனச்சக்கரவர்த்தி . . . நாச்
4. சியார்க்கு நந்தவனமாக செம்பிலும் சிலையிலும் . . .
5. ளார் எழுத்து . . . இவை . . . விநோதன் தேவன் எழுத்து . . .

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 834 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	23
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1230
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	37
மன்னன்	:	வீரராசேந்திரன்			

இடம்: மன்னீசர் கோயில் கருவறை வடக்குச்சுவர்.

குறிப்புரை: மன்னியூர் படைவீரர்களில் கைக்கோளன் தனபாலன் மன்னியூர் ஈஸ்வரன் கோயிலுக்கு சந்தி விளக்கு ஒன்று எரிக்க கொடையளித்த செய்தியைக் கூறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசே

2. ந்திர தேவற்கு ஆண்டுயிருபத்

3. து மூன்றாவது மன்னியூரிலிருக்கும் அம்மட்டநான ...

4. கைக்கோளரில்

5. தொழுதிகளில் தனபாலன் தன்மம் மந்நியூராளுடையார் வைத்த சந்தியாதீப மொன்றுக்கு ... மிக்கோயில் காணியுடைய ... பெருமாள் மாதவப்பெருமாள் கைக்கொண்டு கோயில் புகுவாரே சந்திராதித்தவரை செலுத்த இது பன்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 835 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	23
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1191
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	594/1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	38
மன்னன்	:	மூன்றாம் வீரசோழன்			

இடம்: மன்னீசர் கோயில் முன்மண்டபம் வடக்குக் குமுதம்.

குறிப்புரை: வீரசோழ வளநாட்டு மாநம்படியான மதுராந்தக சதுர்வேதி மங்கலத்து சபையார் மன்னியூர் ஈசுவரன் கோயில் பண்டாரத்திற்கு வரி நெல்லை அளக்க ஒப்புக் கொண்ட செய்தியைக் கூறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரசோழதேவற்கு யாண்டு இருபத்து மூன்றாவது விக்
2. கிரம சோழவளநாட்டு மாநம்பாடியான மதுராந்தகச் சதுர்ப்பேதி மங்கலத்து சபையோ
3. ம் ஆளுடையார் மன்னியூராண்டார்க்கு திருப்புதியதும் திருக்கார்த்திகைக்கும் மேலனையிலே வைகாசிப் பூ நெல்விதை... இறை காணத்தால்
4. ஆட்டும் ஐங்கல நெல்லுக்கு தேவரிறையோடொக்கும் வரியிட்டுக் கொடுப்போமாகவும் இத்தன்மம் சந்திராதித்தவரை செல்வதாக இட்டோம் தன்மம் பன்மாஹேசுர இரகக்ஷ

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 836 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	4
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1200
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	620 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	39
மன்னன்	:	இரண்டாம் குலோத்துங்கன்			

இடம்: மன்னீசர் கோவில்.

குறிப்புரை: மன்னியூர் ஆளுடையார் தேவதானம் வெள்ளைப்பாடியில் வாழும் குயவர், அரைக் கழஞ்சு பொன் சேரமான் தோழன் என்பவனிடம் பெற்றுக் கொண்டு ஐந்து ஓடுகளை அளிக்க ஒப்புக்கொண்ட செய்தியைக் கூறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு நாலாவது மன்னியூராண்டார் தேவதானம் வெள்ளைப்பாடியில்

2. சேரமான் தோழன் பக்கல் அரைக்கழஞ்சு பொன் கொண்டு இதில் பலிசைக்கு சந்திராதித்தவரை திங்கள் ஐஞ்சு ஓடும் இ[கோஇ]ல் செல்

3. லுத்தி வருவதாகவும் இது சேரமான் தோழன் எழுத்து பன்மாஹேஸ்வர ரகைஷ

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 837 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	7
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1203
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	619 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	40
மன்னன்	:	இரண்டாம் குலோத்துங்கன்			

இடம்: மன்னீசர் கோயில்.

குறிப்புரை: இக்கல்வெட்டு பழங்கல்வெட்டின் நகல். ஈஸ்வரன் கோயிலில் சந்தி விளக்கு எரிப்பது பற்றிக் கூறுகின்றது. சில பகுதிகள் குழப்பமாக உள்ளன.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு எ வது கார்த்தி
2. கை மாதம் முதல் ஆளுடையார் மன்னியூராண்டார் கோயில் சந்தியாதீபம் பழங்கல்வெ
3. ட்டில் வெண்ணெய் வெட்டியாலிரண்டு ஒன்றுக்கு காண நெல்லு ஐங்கலத்தினால் நாள்
4. ஒன்றுக்கு . . . பத்து . . . வெள்ளாள இந்த இறை. . . எண்ணெய். . .

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 838 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13 ஆம் நூ.ஆ
ஊர்	:	அன்னூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	-	ஊர்க் கல்வெட்டு எண்	:	41
மன்னன்	:	-			

இடம்: மன்னீசர் கோயில்.

குறிப்புரை: துறையூரில் உவச்சக்காணியுடைய பாரசிவனுக்கு திருமுருகன் பூண்டிக்கோயில் உட்பட பல கோயில்களில் உவச்சகாணியை அளித்த செய்தி கூறப்பெறுகின்றது.

கல்வெட்டு:

1. ..... ம
2. ண்டல முதலி துறையூரில் உவச்சக்காணியுடைய பராசிவன்
3. வாச்சிய மாராயனுக்கு அந்நாள் வதிமுகம் கொடுத்து இவன் ஆளுடையார்
4. திருமுருகன்பூண்டி நாயனார் கோயிலுக்கும் ஆளுடையார்....
5. களில் உள்ள உவச்சக்காணிகளுக்கும் இக்கோயில்களில்
6. கோயிற் காணிகளும் இவர்களுக்கு காணியாக கொடுத்தோம் சோழகுல மாணிக்க...

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 839 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13 ஆம் நூ.ஆ
ஊர்	:	ஆலத்தூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
மன்னன்	:	–			

இடம்: சமணர் கோயில் கதவுநிலை.

குறிப்புரை: வடபரிசார நாட்டு ஆலத்தூர் சமணர் கோயிலுக்குக் கதவுநிலை செய்து கொடுத்தமை பற்றியது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவில் கதவுநிலை
2. சமைப்பித்தோம் வடபரிசாரநாட்டு
3. ஆலத்தூரில் ஸ்ரீநாயனார்

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 840 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 10 ஆம் நூ.ஆ
ஊர்	:	ஆலத்தூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	594 / 1922
எழுத்து	:	வட்டெழுத்து	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	2
மன்னன்	:	–			

இடம்: சமணர் கோவில் (அமணீசர்கோவில்) கருவறை வாசல் கல்

குறிப்புரை: பொங்கலூர் வண்ணான் நீலன் செல்லன் என்பவன் தன் மனைவி காவஞ்சாத்தி மற்றும் தன் மகன் செல்லங்கணத்தி முதலியோர் நல்வாழ்வுக்காக ஆலத்தூர் சமணர்கோவில் கருவறை வாசல்காலைச் செய்து கொடுத்தமை பற்றியது.

கல்வெட்டு:

1. பெங்கல்
2. லூர் வண்ணா
3. ன் நீலன்
4. செல்லன்
5. மணவாட்டி
6. காவஞ்சாத்தி
7. யையும் ம
8. கள் செல்லங்
9. கணத்தியையும்
10. சார்த்தி
11. நாட்டுவித்த
12. கல்நிலை

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 841 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14 ஆம் நூ.ஆ
ஊர்	:	ஆலத்தூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	594 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	3
மன்னன்	:	–			

இடம்: சமணர் கோவில் முன்மண்டபம் தெற்குச் சுவர்.

குறிப்புரை: ஆலத்தூர் சமணர் கோவில் வீரசங்காதப் பெரும்பள்ளி என்று அழைக்கப் பெறுகிறது. அர்த்தபுய(ங்க) தேவர் என்பவர் மண்டபம் அமைத்துக் கொடுத்தமை.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்தி ஸ்ரீ
2. இந்த மண்
3. டபம் சமை
4. ப்பித்தோம்
5. வடபரிசார
6. நாட்டு ஆ
7. லத்தூரில்
8. ஸ்ரீ ஜந்யத்
9. துள்ளா
10. ர் அகஸ்திய
11. கோத்திரத்து
12. வீரசங்கா

13. தப் பெரும்

14. பள்ளி ஆழ்

15. வார் கமல

16. நாத சித்தா

17. மணி தே

18. வர் அந்த

19. வியப்ப தெ[வ]

20. ர் குடங்கொ

21. ண்டு கோ

22. இல் புகு

23. வார் நால

24. ாவதில் தே

25. வாதி தேவ

26. ரும் தம்

27. பி நேமிந

28. ா தனும் செ

29. ல . . . வத

30. தா ஸ்ரீ

31. ஜிநய

32. ம் ரெகெஷ

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 842 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 10 ஆம் நூ.ஆ
ஊர்	:	ஆலத்தூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	594/1922
எழுத்து	:	வட்டெழுத்து	முன் பதிப்பு	:	–
அரசு	:	சேரர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	4
மன்னன்	:	–			

இடம்: ஆலத்தூர் சமணர் கோயில் வாசல்கல். தற்போது கோவை அகழ்வைப் பகத்தில் உள்ளது.

குறிப்புரை: சித்தரையர் மகளும் அரசனின் மனைவியுமான வானவன்மாதேவி சிற்றாச்சர் என்பவள் ஆலத்தூரில் வீரசங்காதப் பெரும்பள்ளியை திருப்பணி செய்து புதுப்பித்தமை பற்றியது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ சித்தரையர் மகளார் நம்
2. பிராட்டியார் வானவன் மாதே
3. வியார் சிற்றாச்சர் வடிக்க மணப. . .
4. டாரி. . . ந்து தவப்பட்டு ஆலத்தூர
5. டிகள் பள்ளி ஆளாநின்ற காலத்து வீரசங்
6. காதப் பெரும்பள்ளி என்று பெருமாநடிக
7. ள் நாமத்திலே உள்ளோசனையுஞ் செயிவித்து பு
8. துக்குவித்தார்.

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 843 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	37
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 970
ஊர்	:	ஆலத்தூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	594 / 1922
எழுத்து	:	வட்டெழுத்து	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச் சோழன்	ஊர்க் கல்வெட்டு எண்	:	5
மன்னன்	:	கோநாட்டான் வீரசோழன்			

இடம்: சமணர் கோயில் வாசல்கல். தற்போது கோவை அகழ்வைப்பகம்.

குறிப்புரை: ஆலத்தூர் வீரசங்காதப் பெரும்பள்ளிக்கு நியாயத்தார் வழங்கிய கொடை பற்றியது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கோநாட்டான் வீ
2. ர சோழப் பெருமாநடிகளுக்கு திரு
3. வெழுத்திட்டுச் செல்லாநின்ற யாண்டு முப்
4. பத்தேழாவது ஆனித்திங்கள் முதல் ஆளுடை
5. யார் வீரசங்காதப் பெரும்பள்ளி... யி.
6. . . . ப. . . த்த.... நியாயத்தார் தம். . .
7. து. . . லினசெ. . . ளிநால். . . திங்கள்ளி
8. மு ழெயும் முக . . .
9. . . . யான் வழி ஏழெச்சம் ஒழியாமல் அறுவான்

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 844 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14 ஆம் நூ.ஆ.
ஊர்	:	ஆலத்தூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	
அரசு	:	போசளர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	6
மன்னன்	:	வீரவல்லாளன் III			

இடம்: சமணர் கோயிலின் மகாமண்ட மேற்குச் சுவர்.

குறிப்புரை: அரசு வருவாய் நிருவாகத்தை அறிந்து கொள்வதற்கும், நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு ஆவணங்களைப் பாதுகாத்து வைத்திருக்கும் சிறப்பினை வெளிப்படுத்துவதற்கான சிறந்த சான்று இக்கல்வெட்டு. கி.பி. 10 ஆம் நூற்றாண்டு ஆவணமும், கி.பி. 12 ஆம் நூற்றாண்டு ஆவணமும் இக்கல்வெட்டில் குறிக்கப்பெறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரவல்லாள தெ[வர்க்கு]
2. மேல் செல்லாநின்ற ஆங்
3. கிரச வருசத்து ஆடிமாதம் 2 ஆம் தியதி தெ
4. ண்ணா[யக்]கர் கோட்டைக்குத் தெற்கும்
5. ஆறு நாட்டு நாட்டவரோம் வடப
6. ரிசார நாட்டு ஆலத்தூர் அமண தே
7. தவர் அணி ஆதழகிய நாயனாற்கும்
8. புக்கொளியூர் அவிநாசி ஆளுடையாற்க்கு
9. ம் தன்ம சாதனம் பண்ணிக் குடுத்த பரி

10. சாவது இந்த ஆலத்தூர் முழுதும் அவி

11. [நாசி ஆளு] டையார்க்கு திரிபுவனச்சக்

12. [கர வர்த்திகு] டுத்தான் என்றும் அணியா

13. [தழகியார்க்கு] சேரமான் சக்கரவர்த்தி குடுத்தார்

14. என்றும் இரண்டு கோயில் தான தரும்

15. தேவர் சிரீ தனமும் சோமப்பருக்கும்

16. கணி ஸ்ரீயக்கி உடையார் முன்பும்

17. நாட்டார் முன்பும் முறைப்பட்டு இரண்டு சா

18. தனமும் காட்டுகையில் இரண்டு சா

19. தனமும் பார்த்த அளவில் இரண்டும் பூ

20. ர்வ சாதனம் ஆனபடி ஆலே இரண்

21. டு கோயிலுக்கும் பொதுவாக்கி இந்த ஊ

22. ர் தெற்கில் தெருவும் இறை இறுப்பு கீழைகு

23. டி சூழும் அமண தேவர்க்கு இம் மருவாதி பிற

24. வும் திருமலையில் வெட்டு

25. வித்துக் குடுத்தமைக்கு இது வெச்ச தன்மம

26. ாகவும் அறுதிபியெர் சாதனம்ம

27. ாவதாக கடவதல்ல ஆகவும் இ

28. துக்கு இருபாலாக செ[ய்] வித்துக் குடுத்தோம்

29. ஆறு நாட்டு நாட்டவரொம் அமண் தெ

30. வர் அணி ஆதழகிய நாயநார் இந்த தன்ம [ம்] விலக்கினவன்

31. ஏழெச்ச[ம்] அறுவான் ஸ்ரீ ஜிநான்ம ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 845 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 17 ஆம் நூ.ஆ.
ஊர்	:	கஞ்சப்பள்ளி	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	நாயக்கர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
மன்னன்	:	அதிகாரி ராமப்ப அய்யர்			

இடம்: தேனீஸ்வரர் கோயில் மதிலுக்குத் தென்புறம் உள்ள பலகைக் கல்.

குறிப்புரை: தேனீஸ்வரர் கோயில் சிவகாமி அம்மன் கோயிலுக்கு நிலக்கொடை அளித்தது பற்றி இக்கல்வெட்டு கூறுகிறது. குளம் என்பது குழம் என்றும் விளக்கு என்பது விழக்கு என்றும் குறிக்கப் பெறுகின்றன.

கல்வெட்டு:

1. தாது வருஷம் வை
2. காசி மீ உ௩ தேதி ஸ்ரீமது
3. ராமப்ப அய்யரவர்கள்
4. காரியத்துக்குக் கர்த்தரான
5. சிதம்பரநாதப்பிள்ளையவர்க்கு
6. சேர்முப் பிறதிவிட்டை பண்ணி
7. வித்த சுவாமி தேனீசுவரமுடையா
8. ர் சிவகாமி அம்மனுக்கு அவி
9. ஷேக நெய்வேத்தியம் திருவிழ
10. க்கு நடக்கிறதுக்கு புதுகுழம் நஞ்
11. சை நடுப்பற்றில் எருக்கிலைந் தாற்றி

12. கீழ்புறம் விரைமிடா பொதி மேல்புறம்

13. நிலம் விரைகூத்தையான்குழம் ந

14. ஞ்சை யிலுண்டான நிலமும் விட்டு

15. ஒரு மாநிலத்துக்கு விலக்கு பணம் ௩

16. முக்கை பணம் ௩ முருகன்குழத்துக்கு வடமே

17. தாற்றுக் காடு பணம் ச சன்னதிக்கு எதிர்

18. நாலு பணத்தின் பலையும் வெள்ளை மா

19. ருமாதிதெ மேற்குச் சின்ன மாமரமும்

20. இலுப்பை மர[ம்] உ உள்ளூர் உழவாறு சுங்க[ம்]

21. இது வெல்லாம் விட்டு நடத்தி வரவும் இப்படி

22. சன்னதி பரிபாலனமாக வழங்கப் பண்ணி

23. னபேர் அறுபத்துமூவர் பெற்றபேர்

24. பெறுவர் இதுக்கு விக்கினம் பண்

25. ணினபேர் கெங்கைக் கரையில்

26. காராம் பசுவையும் கவலைப் பசுவை

27. யும் மாதா பிதாவையும் புத்திர

28. னையும் கழுத்தறுத்துக் கொன்ற தோ

29. ஷத்திலே போகவும்

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 846 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	20
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1207
ஊர்	:	கருவலூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	594 / 1922
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
மன்னன்	:	வீரராசேந்திரன்			

இடம்: மகாமண்டபம் தெற்குக் குமுதம்

குறிப்புரை: அரசன் கருவலூரில் உள்ள புரோசக்குளத்தையும் அதன் கீழ் உள்ள விளைநிலங்களையும் கருவலூர் பெருமாள் கோயிலுக்குத் திருவிடையாட்டமாக அளித்த செய்தி கூறப்பெறுகின்றது. இக்கோயில் வீரராசேந்திர விண்ணகரம் என்று அழைக்கப் பெறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்ரீராஜகேசரி கோனேரின்மை கொண்டான் வடபரிசாரநாட்டுப் பழங்கருவலூர் வீரராசேந்திர விண்ணகரெம்பெருமான் கோயிலில் ஸ்ரீ காரிய
2. ஞ் செய்வார்களுக்கு நம்மோலை குடுத்தபடியாவது இவ்வெம்பெருமானுக்கு அமுதுபடிக்கும் பலபடி நிமந்தங்களுக்கும் திருவிளக்குக்கும்
3. குடுத்த குளமாவது கருவலூர் புரோசக் குளம் குடுத்தோம் இக்குளம் தாங்களே அடைத்து இக்குளத்தால் விளைந்த நிலம் இவ்வெம்பெ
4. பருமானுக்குத் திருவிடையாட்டமாக இறையிலி முற்றூட்டும் செல்வதாகவும் இப்படி செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்வார்களாக நமக்கு இரு
5. பதாவது முதல் நம்மோலை குடுத்தோம் இவை சோழ குலமாணிக்க மூவேந்த வேளான் எழுத்து இவை யிலாடத்தரையன் எழுத்து இவை கோதவ ராயன் எழுத்து இவை வில்லவராயன் எழுத்து

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 847 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14 ஆம் நூ.ஆ.
ஊர்	:	சேவூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	போசளர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	1
மன்னன்	:	மூன்றாம் வல்லாளன்			

இடம்: பெருமாள் கோயில் கருவறை மேற்குப்பட்டி.

குறிப்புரை: வடபரிசார நாட்டுச் சேவூரான செம்பியன்கிழானடிநல்லூர் திருமேற் கோயிலில் விக்கிரமன் கண்ணப்பன் ஆன தென்னவதரையன் என்பான் பலிபீடம் அமைத்தமை பற்றி இக்கல்வெட்டு கூறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரவல்லாள தேவர் விஜயிவி ராஜ்ய பண்ணியருளா நின்ற ஸ்ரீஈவ ஸம்வத்ஸரத்து சித்திரை உாசு நயக வாவ்வு வக்ஷத்து ஊஉஸி யும் நாயிற்றுக் கிழமையும் பெற்ற பூசத்து நாள் வடபரிசார நாட்டில் சேவூரான செம்பியன்கிழானடி நல்லூர் திருமேற்கோயில் நாயனார்

2. விக்ரமந் கண்ணப்பனான தென்னவதரையனேன் இன்னாயனாற்கு ஸ்வி வீ ஒ என்னுடைய தந்மமாகச் சமைப்பித்தேன் இது பதினெண் மண்டலத்து ஸ்ரீ வைஷ்ணவர் ரக்ஷை பன்உஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 848 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி.13ஆம் நூற்றாண்டு
ஊர்	:	சேவூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	–	ஊர்க் கல்வெட்டு எண்	:	2
மன்னன்	:	–			

இடம்: பெருமாள் கோயில் அர்த்தமண்டபம் தெற்கு ஜகதி

குறிப்புரை: சேவூர் திருமேற்கோயில் அழகப்பெருமாள் கோயிலில், சேவூர் ஈழச்சான்றோரிடம் வடகோபுரத்தாழ்வான் வீற்றிருந்தானும் பச்சைவாரணப்பெருமான் அழகப்பிள்ளையும் 140 பணம் கொடுத்து ஒரு நந்தா விளக்கு எரித்தல்.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ வடபரிசார நாட்டு சேவூரான செம்பியன் கிழானடி நல்லூர் திருமேற்கோயில் நாயனார் அழகப்பெருமாளுக்கு மேற்படியூரில் ஈழச் சான்றோரோம் இந்நாயனார்க்கு எங்கள் தன்மமாக ஒரு நந்தாவிளக்கு . . . காணியாளரில் வடகோபுரத்தாழ்வான் வீற்றிருந்தானுக்கும் பச்சவாரணப்பெருமா

2. னழகப் பிள்ளைக்கும் இவ்விருவோமாக நாங்கள் குடுத்த [பணம்] ாசய இப்பணம் னூற்று நாற்பதும் பற்றி குடங்கொண்டு கோயில் புகுவார் சந்திராதித்தவரை செலுத்தக் கடவோம் ஒரு திருந்தாவிளக்கு வட பரிசாரநாட்டு பன்ஊஹெஶ்வர ரக்ஷெ இவை ஸ்ரீ வைஷ்ணவர் ரக்ஷெ

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 849 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	27
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14 ஆம் நூ.ஆ.
ஊர்	:	சேவூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குப்பாண்டியர் ஊர்க் கல்வெட்டு எண்		:	3
மன்னன்	:	சுந்தர பாண்டியன்			

இடம்: பெருமாள் கோவில் முன்மண்டபம், அர்த்தமண்டபம் தெற்கு ஜகதி

குறிப்புரை: சேவூர் மன்றத்திருந்து மன்றறியச் செய்த நன்செய் நில விற்பனை பற்றிய செய்தி. சேவூர் கிழவர்குளத்திற்குக் கீழே வெள்ளாளர்க்கு நிலம் இருந்தது. இந்நிலத்தில் சேவூர் சிவன் கோயில் நிலம் நீங்கலாக பிற நிலத்தை அன்றாடு வராகன் புள்ளிக்குளிகை 1000 பணத்திற்கு விலையாகச் சேவூர் அழகப்பெருமாள் விண்ணகரப் பெருமானுக்குத் திருவிளையாட்டமாக விற்றுக் கொடுத்தனர்.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடபன்மரான திரு ஊவனச் சக்கரவர்த்திகள் [ஸ்ரீ சுந்தர] பாண்டிய தேவற்கு யாண்டு இருபத்தேழாவது ஆவணி மாத முதலாக மதிநாள் பக்கம் பஞ்சமி நாள் மூலங் கிழமை வெள்ளிப் பொழுது இது நாளிது பருவமாக வடபரிசார நாட்டுச் சேவூரான செம்பியன் கிழனாடி நல்லூர் மன்றத்திருந்து மன்றறியச் செய்த நன்செய் நிலம் விலை வ்ரு மாணமாவது இவ்வூர் வெள்ளாழன் வகையரில் அடியாற்கடியான் பெரிய கேச

2. ன் பிள்ளை சிறுவன் ஆண்டானும் இவ்வனைவோம் இவூர்த் திருமேற்கோயில் அழகப்பெருமான் விண்ணகர எம்பெருமானுக்கு திருவிடையாட்டமாக இன்னாட்டில் வியாபாரிகளுக்கு நாங்கள் விற்ற

நிலம் நன்செய் நிலம் இவ்வூர்கிழவர் குளம் எங்கள் காணியான இக்குளத்தில் இவ்வூர் நாயனார் திருக்கபாலீ வரமுடைய நாயனார் தேவதானமான பலதடியினால் பன்னீரடிக்கோலால் இரு நூற்றெழுபத்தாறு குழி நீங்கலாக இக்கு

3. ளத்தில் மூன்றிலொன்றாய் வருங்குளமும் நிலமும் மேனோக்கிய மரமும் கீழ்நோக்கிய கிணறும் இக்குளத்தில் மூன்றிலொன்றாய் வரும் ஸகலவ்ருத்திகளும் உள்பட விற்றோம் இதுக்கு எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றாடு வராகன் புள்ளிக் குளிகை பணம் ஆயிரம் இப்பணம் ஆயிரமும் இவ்வாட்டை ஆவணி மாதம் நாங்கள் பண்டாரத்துக்குத் தெண்ட மிறுக்குற பொன்னுக்கு இப்பணம் ஆயிரமும் இவ்வியாபாரிகள் . . .

4. . . . அமுது படிக்குடலாக நடத்திக்கொண்டு இருக்கையில் இவர்கள் பக்கல் இப்பணம் ஆயிரமும் கைக்கொண்டு இக்கிழவர் குளமுழுவது மூன்றிலொன்றும் நாங்களும் அனுபவித்துப் போந்த ஸகலவ்ருத்திகளும் உள்பட மண்ணறுதியாக விற்றுப் பொருளறக் கொண்டு விற்றுவிலை வ்ருமாணம் பண்ணிக்குடுத்தோம் இப்படிக்குச் செம்பிலும் சிலையிலும் வெட்டி இன்னிலத்தில் திருநாமக்கல்லும் நாட்டிக் கொள்ளக்கடவது

5. வ்ருமாணம் பண்ணிக் குடுத்தோம் இவ்வனைவோம் இன்னாட்டில் வியாபாரிகளுக்கு இவை நம்பி . . . எழுத்து இப்படிக்குக் காவன கண்ணன் எழுத்து இப்படிக்கு சிறுவன் ஆண்டான் எழுத்து இப்படிக்கு கொங்காழ்வி அருளாளப் பெருமாள் எழுத்து இப்படிக்கு நம்பிசாத்தன் எழுத்து இப்படிக்கு முடிகொண்ட காமிண்டன் எழுத்து இப்படிக்கு மயிந்தப்பெருமாள் எழுத்து என் எழுத்து இப்படிக்கு அடியாற்கடியான் பெரியகேசன்

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 850 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	24
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14 ஆம் நூ.ஆ.
ஊர்	:	சேவூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குப்பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	4
மன்னன்	:	சுந்தரபாண்டியன்			

இடம்: பெருமாள் கோயில் கருவறை வடக்குச்சுவர்

குறிப்புரை: சேவூர் அழகப் பெருமாள் கோயிலில் வடபரிசாரநாட்டு வணிகர்கள்; மணவாள ஆழ்வார் மற்றும் நாச்சிமார் [ஸ்ரீதேவி, பூதேவி] இருவர் திருமேனிகளை எழுந்தருளச் செய்தனர். இத்திருமேனிகளுக்கும் மற்றும் அதிகைமானார் எழுந்தருளுவித்த காளிசமத்தளப்பிள்ளை திருமேனிக்கும் அமுதுபடிக்காக வடபரிசாரநாட்டு வணிகர்கள் ஆண்டொன்றுக்குப் பத்துப் பணம் கொடை அளித்துள்ளனர். மேலும் கோயில் பரிசாரகர்க்கு ஆண்டுக்கு 6 கலம் கம்பும் புடவையும் கொடை தரப்பட்டது. கல்வெட்டில் ஸ்ரீவயிற்றின் கண்காணி செய்வார் என்ற சொல் சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கோற்சடபன்மரான தி ஈவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீ சுந்தரபாண்

2. டியதேவர்க்கு யாண்டு உயச வது வடபரிசாரநாட்டுச் சேவூரான செம்பியன்

3. கிழானடி நல்லூர் திருமேற்கோயில் நாயனார் அழகப்பெருமாள் கோயில் ஸ்ரீவயிற்

4. றின் கண்காணி செய்வார் ஸ்ரீகாரியம் கோயிற் கணக்கற்கு வடபரிசார நாட்டு வியா

5. பாரிகளோம் தீட்டிக் குடுத்த பரிசாவது இன்னாயினார் கோயிலில் நாங்கள்செய்த உகந்த

6. ருளப் பண்ணின மணவாள ஆழ்வாற்கும் நாச்சிமார் இருவர்க்கும் உடையார் அ

7. திகை மானார் உகந்தருளப் பண்ணின காளி சமத்தளப் பிள்ளைக்கும் இவ்வாட்டை

8. கார்த்திகை மாதம் முதல் இன்னாயனாற்கு நாளொன்றுக்கு அமுதுபடிக்கு கொங்குபூ . . .

9. கறியமுது விஞ்சனம் உட்பட்டன வற்றுக்கு ஆண்டொன்றுக்குப் பணம் பத்தும் . . . கோ

10. யிலில் பரிசாரகற்கு ஆண்டொன்றுக்கு கண்பு அறுகலமும் புடவை முதலுக்குப்ப . . .

11. இவ்வகைப் படியாலுள்ளவை இன்னாள் முதல் சந்திராதித்தவரை எங்கள் மக்கள் மக்கள்

12. செலுத்தக் கடவோமாகவும் இப்படிக்குச் செம்பிலும் சிலையிலும் வெட்டிக் குடுத்த . . .

13. . . . வளைவிற்கும் வடபரிசார நாட்டில் வியாபாரிகளோம்.

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 851 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	27
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14 ஆம் நூ.ஆ.
ஊர்	:	சேவூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குப்பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	5
மன்னன்	:	சுந்தரபாண்டியன்			

இடம்: அழகப்பெருமாள் கோயில் அர்த்தமண்டபம் வடக்குச்சுவர்.

குறிப்புரை: சேவூர் மன்றத்திலிருந்து மன்றறியச் செய்த புன்செய் நிலம் பற்றிய செய்தி. சேவூர் வெள்ளாளன் கொம்மையரில் சிறுவன் ஆண்டான் என்பான்அன்றாடு வராகன் புள்ளிக்குளிகை பணம் 300, பெருமாள் கோவில் சேனாபதி ஆழ்வாரிடம் பெற்றுக் கொண்டு சேவூரில் தனக்கு உரிமையாக இருந்த புன்செய் தோப்பு நிலத்தை விற்றுக்கொடுத்தமை பற்றி இக்கல்வெட்டு கூறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கோற்சடபன்மரான தி்ரு்வனச்சகரவத்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவற்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு உயஎ வது சித்திரை மாத முதல் மதினாள் பக்கம் பஞ்சமினாள் மூலங்கிழமை வெள்ளிப்பொழுது இந்நாளிது பருவமாக

2. வடபரிசாரநாட்டுச் சேவூரான செம்பியன் கிழானடி நல்லூரில் மன்றத்திருந்து மன்றறியச் செய்த புன்செய் தோப்பு நிலம் பிரமாணமாவது இவ்வூர் வெள்ளாழன் கொம்

3. மையரில் சிறுவன் ஆண்டான் இவ்வூர் திருமேற்கோயில் அழகப்பெருமாள் விண்ணகர எம்பெருமான் கோயில் ஸ்ரீ சேனாபதி

ஆழ்வாற்கு நான் மண்ணறுதியாக விற்ற புன்செய் தோட்டத்துக்கு எல்லையாவது மேல்பாற்கெல்லை.

4. சங்காழ்வான் குளத்தில் வயலுக்கு கிழக்கும் வடபாற்கெல்லை சங்காழ்வான் குளத்தில் வயலுக்குத் தெற்கும் கீழ்பாற்கெல்லை தென்னவன் தட்டான் தோட்டத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை சிறுவன் ஆண்டானும்

5. வல்லாளப் பெரும்தோட்டத்துக்கு வடக்கும் இந்நான் கெல்லைக்குள்பட்ட நிலமும் மேனோக்கிய மரமும் கீணோக்கிய கிணறும் மற்றும் எப்பேற்பட்டன சகல

6. வ்ரூவ்கிகளும் உட்பட விற்ற இதுக்கு எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றாடு வராகன் புள்ளிக்குளிகை பணம் ௩ா இப்பணம் முன்னூறும் கொண்டு இத்தோப்பில் எப்பேற்பட்ட உரிமைகளுட்பட மண்ணுறுதியாக விற்று பொருளறக் கைக்கொண்டு விற்று விலை வ்ரூமாணம் பண்ணிக்குடுத்தோம் இப்படி

7. க்குச் செம்பிலுஞ் சிலையிலும் வெட்டி இத்தோட்டத்தில் வாழிக் கல்லும் நாட்டிக்கொள்ளக் கடவதாகவும் இப்படி சம்மதித்து புன்செய்த் தோட்டம் நிலவிலை வ்ரூமாணம் பண்ணிக்குடுத்தேன் சிறுவ

8. ன் ஆண்டானேன் அழகப்பெருமாள் விண்ணகர எம்பெருமான் கோயில் ஸ்ரீ சேனாபதி ஆழ்வாற்கு இப்படிக்கு சிறுவன் ஆண்டான் எழுத்து சேவூர் வெள்ளாழன் வகையரில் இவூர் கேசன்

9. ஆண்டான் எழுத்து இப்படிக்கு வடபரிசாரநாட்டு . . . நல்லூர் வெள்ளாழன் வெள்ளெலிகளில் சொக்கன் எழுத்து இப்படி அறிவேன் சேவூர் உகையில் பிள்ளை சுகேசன் ஆண்டான் எழுத்து இப்படி அறிவேன்

10. சேவூர் . . . கோன் எழுத்து இப்படிக்கு முடிகொண்ட காமிண்டன் எழுத்து . . . இப்படிக்கு நடுவன் எழுத்து

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 852 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1361
ஊர்	:	சேவூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழும், கிரந்தமும்	முன் பதிப்பு	:	–
அரசு	:	போசளர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	6
மன்னன்	:	மூன்றாம் வீரவல்லாளன்			

இடம்: அழகப் பெருமாள் கோயில் அர்த்த மண்டபம் மேற்குச் சுவர்.

குறிப்புரை: சேவூர் அழகப் பெருமாள் கோயிலில் ஒருவிளக்கு ஏழரை நாழிகை நேரம் எரிப்பதற்கு சேவூர் வணிகன் குளத்தூருடையான் அருளாளப் பெருமாள் காழியப்பனான துண்ணம் துழாய் தாசன் என்பவன் பணம் கொடையளித்தமை பற்றிக் கூறுகின்றது இக்கல்வெட்டு. இக்கல்வெட்டில் இம்மடி ராகுத்தராயன் மாதப்பதண்டநாயக்கர் மகன் இராச்சிய தண்டநாயக்கர் குறிக்கப் பெறுகின்றார்.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ மநுவ்ரூஹாவ ச்சக்ரவர்த்திகள் ஹோசஊ ஹுஜபவு வீரவல்லாள தேவர் வ்ரூமிவிராஜ்யம் பண்ணியருளா
2. நின்ற சகர யாண்டு ஆயிரத்திரு நூற்றெம்பத்து மூன்று இதன்மேல் செல்லாநின்ற . . . ஸம்வசு
3. ஸாத்து உகர நாயற்று வ்ரூவ்வுவக்ஷத்து ஸஸ்தஜிஸ்ரீ யும் வெள்ளிக்கிழமையும் உத்தரமும் பெற்ற இற்
4. றைநாள் ஸ்வஸ்திஸ்ரீ மோடகுலைய குலகமல ஊர்த்தாணு சித்தகரிமு இம்மடி ராஹுத்த ராயமாத
5. ப்ப உணு நாயகர் குமாரன் இராச்சிய உணு நாயக்கர் நாள் வடபரிசார நாட்டுச் சேவூர
6. ான செம்பியன் கிழானடி நல்லூர் திருமேற்கோயில் நாயனார் அழகப்பெருமாள் கோ

7. யிற் காணியுடைய கவிசய மோதரத்து வடகோபுரத் தாழ்வான் வீற்றிருந்தானும் காஶ்வமோதரத்து பச்சை

8. வாரணப் பெருமாள் அழகப்பிள்ளையும் இவ்விருவோம் மேற்படி யூரிலிருக்கும் வியாபாரி குளத்தூருடை யான்

9. அருளாளப் பெருமாள் காழியப்பனான துண்ணந்துழாய் ஊஸன் பக்கல். . . இந்நாயனார் அழகிய பெருமாளுக்கு இவன் ய

10. உஉமாக வருஷாதித்தவரையில் ஒருவிளக்கு ஏழரை நாழிகை எரிப்பதாக இவன் பக்கல் நாங்கள் உஹையமாகப் பற்றின பணம். . .

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 853 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	–
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1322
ஊர்	:	சேவூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	போசளர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	7
மன்னன்	:	மூன்றாம் வீரவல்லாளன்			

இடம்: அழகப் பெருமாள்கோயில் அர்த்த மண்டபம் வடசுவர்.

குறிப்புரை: சேவூர் அழகப் பெருமாள் கோயிலுக்கு சேவூர் வெள்ளாளன் சிறுவன் ஆண்டான் விற்ற புன்செய் நிலம் இறங்கலாய்க் கிடந்ததை இம்மடி இராகுத்தராயன் மாதப்பதண்ணாயக்கர் செம்மைப் படுத்தி மீண்டும் கோயிலுக்கு வழங்கியமை.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ மகுவ்ராஹாவ ச்ரவர்த்திகள் ஹோசள ஹுஜவ வீரவல்லாள தேவர் ஸரிக்கையருளா நின்ற சகரை ஆண்டு ஆயிரத்து இருநூற்று நாற்பத்து நா
2. லு இதன் மேற் செல்லா நின்ற ஈஷுஹிஸம்வத்ஸரத்து ஈனநாயற்று வஸு வ்ருபக்ஷத்து ஸஷ்டமியும் வெள்ளிக் கிழமையும் பெற்ற புணர் பூசத்து
3. ஸ்வஸ்திஸ்ரீ மொடகுலைய குலகமல மார்த்தாண்டஸிதகரகண்ட இம்மடி இராகுத்தராயன் மாதப்ப தெண்ணாயக்கர் வடபரிசாரநாட்டு சே
4. ஊரான செம்பியன் கிழானடி நல்லூர் திருமேற்கோயில் நாயனார் அழகப் பெருமாள் விண்ணகர எம்பெருமான் கோயில் ஸேநாபதியாழ்வாற்கு இவ்
5. ஊர் வெள்ளாழன் கொம்மையில் சிறுவன் ஆண்டான் இவற்கு விற்ற தோட்டத்துக்கு இக்கோயிலில் கல்வெட்டினபடி அனுபவித்துப் போந்த அளவில்
6. லிறங்கல்பட்டு கிடக்கையில் இவ்விறங்கலிட்டு முன்னால் வெட்டின படியே ச்ரூதித்தவரை செல்வதாக . . . மிட்டு யாராவ்வுமாகக்கு
7. டுத்தோம் இராச்சிய தெண்ணாயக்கனேன்

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 854 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	4
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1277
ஊர்	:	சேவூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குச்சோழர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	8
மன்னன்	:	மூன்றாம் விக்கிரமசோழன்			

இடம்: அழகப்பெருமாள் கோயில் கருவறை தெற்குச்சுவர்.

குறிப்புரை: சேவூர் அழகப்பெருமாள்கோயிலில் திரு அமுதுக்காக பணம் ஒன்று கொடை.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவற்கு யாண்டு நாலாவது வட
2. பரிசார நாட்டில் சேவூரான செம்பியன் கிழான
3. டி நல்லூரில் திருமேற்கோயில் அக . . . வி
4. ண்ணகர அழகப் பெருமாளுக்கு வைத்த
5. அமுது அடைக்காயிலை யமுதுக்குமாக
6. இவைக்கு வைத்த பணமொன்று இப்
7. பணமொன்றுமாக வாசறுதி . . .
8. . . . ஆறு சுங்கஞ் செயும் . . .
9. லூ . . சிலரும் குடுத்து பொதுவானாக
10. . . . விலக்கினானொருவன் வழிவழி
11. . . . யேழச்ச மறுவான்

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 855 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	14
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14 ஆம் நூ.ஆ.
ஊர்	:	சேவூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குப்பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	9
மன்னன்	:	சுந்தரபாண்டியன்			

இடம்: அழகப்பெருமாள் கோயில் கருவறை வடக்குச்சுவர்

குறிப்புரை: சேவூர் ஊர், ஊராளிகள்; சேவூர் அழகப் பெருமாள் கோயில் திரு அமுதுக்காக 15 கலம் நெல்லும்; கோயிலில் திருவாரதனம் செய்யும் நம்பிமார்க்கு புடவை முதலியன பெற்றுக் கொள்வதற்காக பணம் பத்தும் கொடையளித்தமை பற்றிக் கூறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாற பன்மரான திரிபுவனச்சக்கரவத்திகள் சுந்தரபாண்டிய தேவற்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு யச வது மார்கழி மாத முதல் வடபரிசார நாட்டுச் சேவூரான செம்பியன் கிழாநடி நல்லூர் ஊரும் ஊராளிகளோம் எங்களூர் அழகப்

2. பெருமாள் . . . பெருமானுக்கு அமுதுபடிக்கு . . . க்காலால் அரிசி நாழியும் வழிநடையாக அழிந்து பொதும் அரிசி உரியும் ஆக அரிசி நாழி உரிக்கு நெல்லு பதினைங்கலமும் கறியமுது உள்ளிட்ட வி

3. ஞ்சனத்துக்கு . . . திருப்பரிசட்டத்துக்கும் ஆவனி மாதம் . . . இரண்டும் திருவாராதனம் பண்ணும் நம்பிமார்க்கு உட்பட புடவை முதலுக்குப் பணம் பத்தும் ஆக இவ்வகைப் படி சந்திராதித்தவரை செலுத்துவதாக

4. செம்பிலும் சிலையிலும் வெட்டி குடுத்தோம் ஊராளிகளோம். . . சாத்தன் . . . முவநெழுத்து இப்படிக்கு ஆண்டான் ஒற்றியான் ஓதாதுணர்ந்தா நெழுத்து இப்படிக்கு கிழவன் நங்கனான நல்லமங்கை பாகநெழுத்து

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 856 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	25
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14ஆம் நூ.ஆ.
ஊர்	:	சேவூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குப்பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	10
மன்னன்	:	சுந்தரபாண்டியன்			

இடம்: அழக பெருமாள் கோயில் கருவறை மேற்குச்சுவர்.

குறிப்புரை: வடபரிசார நாட்டு நாட்டார் என்னும் அமைப்பினர் திருவரங்கம் திருப்பதியில் வடக்குக் கோபுரத்தில் எடுத்தகை அழகிய நாயனார் திருமேனிக்கு நாள்தோறும் 2 திருமாலை சார்த்துவதற்கு 40 பணம் கொடையளித்தமை பற்றிக் கூறுகின்றது.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடப
2. ன்மரான திரு ஊவன சக்கரவர்த்
3. திகள் ஸ்ரீசுந்தரபாண்
4. டிய தேவற்குத் திருவெழு
5. த்திட்டுச் செல்லாநின்ற திருந
6. ல்லியாண்டு உ௩ரு வது ஆனிமாதம் முத
7. ல் திருவரங்கம் திருப்பதியில் வ
8. ட திருக்கோபுரத்தில் நாயனார் எடுத்
9. தகை அழகிய நாயினாற்கு வடபரிச
10. ார நாட்டில் நாட்டோம் இன்நாயனாற்கு

11. நாள் ஒன்றுக்கு இரண்டு திருமாலை தி

12. ரு முன்பே எடுத்துக் காட்டி திருமேனி

13. யிலே சாத்தக் கடவதாகவும்இதுக்கு ஆ

14. ண்டு மொன்றுக்கும் நாற்பது பணம் குடுத்தோம் சந்திரா

15. தித்தவரை செவிக்கச் செம்பிலும் சிலையிலும் வெட்டிக்

16. குடுத்தோம் நாயினார் எடுத்தகை அழகிய நாயனார் வட

17. பரிசார நாட்டில் நாட்டோம் இப்படிக்கு எங்கள் மக்கள் சந்தி

18. ராதித்தவரை செவிதாக நாட்டவர் பணிக்க நாட்டு கண [க்கு]

19. . . . தேவன் எழுத்து

த.நா.அ.தொல்லியல்துறை **தொடர் எண் : 857 / 2003**

மாவட்டம்	:	கோயம்புத்தூர்	ஆட்சி ஆண்டு	:	24
வட்டம்	:	அவிநாசி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14 ஆம் நூ.ஆ.
ஊர்	:	சேவூர்	இந்தியக் கல்வெட்டு		
மொழி	:	தமிழ்	ஆண்டு அறிக்கை	:	–
எழுத்து	:	தமிழ்	முன் பதிப்பு	:	–
அரசு	:	கொங்குப்பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	:	11
மன்னன்	:	சுந்தரபாண்டியன்			

இடம்: அழகப் பெருமாள் கோயில் கருவறை தெற்கு ஜகதி

குறிப்புரை: நரையனூர் நாட்டு ராசிபுரம் புரவரியாரில் நக்கன் பாவையான அதிகை மானார் சேவூர் அழகப்பெருமாள் கோயிலுக்கு வெள்ளிக்கிழமை தோறும் ஒரு தேங்காய் வழங்குவதற்காகப் பத்துப் பணம் கொடை அளித்துள்ளார். இத்தொகையை சேவூர் ஊரும் ஊராளிகளும் பெற்றுக் கோவிலுக்குத் தேங்காய் வழங்கினர்.

கல்வெட்டு:

